Position 33117
www.padippakam.com

# புதியதடம்

நன்கொடை ரூ10/-

மார்ச் - மே 2001

இதழ் - 9



படிப்பகம்

www.padippakam.com

# ராமாயணம்

ஸ்ரீலங்காவிலிருந்து
சிறைமீண்ட சீதைக்கு
நெய் ஊற்றிய நெருப்பில்
virginity test முடித்த ராமன்
தன் லவ–குச புத்திரர்களை
நேபாளத்துக் கனுப்பிவிட்டு
பிறந்த இடம்(?)அயோத்தி விட்டு
புதுடில்லியில் வந்திறங்கினான்.

புத்தனைத் துரத்திவிட்டு
சமணர்களைக் கழுவிலேற்றிய
எல்லா ஆயுதங்களும்
அவன் அம்பறாத்துாளியில் இருந்தன.




சுக்ரீவனின் சேனைக்கு
மனித ரூபம் கிடைத்தது
இன்னும் வசதியாய்ப் போயிற்று

உடல் பெருத்துப் போனதால்
சஞ்சீவி மலையைச்
சுமக்க முடியாத அனுமன்
இந்தியன் ஏர்லைன்ஸில் பறந்தபடி
RSS ன் மருத்துவ முகாமுக்குப் போகிறான்.

உச்சிக்குடுமியும்
ருத்ராட்சக் கொட்டையுமாய்
ராமனுக்கு ஆயிரமாயிரம் பிள்ளைகள்

நாம் புணர்ந்து
நமக்குப் பிறந்த
சிலருக்கும் இருந்தது
ராமனின்
நீல நிறக் குறிகள்

பின்னர்
சில சிவகாசிக் குழந்தைகளைக் கொன்று
வெடிமருந்து செய்யப் பழகிய ராமன்
பாபரின் மீதிருந்த தீராத கடுப்பில்
அவன் சமாதியில் வைத்தான்.

தசரதன் இறந்த பிறகு
உடன்கட்டை ஏறாத அவன்
ஆயிரம் மனைவிகளில் சிலர்
ரூப் கன்வரைப் பிடித்து
நெருப்பாற்றில் தள்ளினார்கள்

பின்னர் ராமனுக்கு
பார்லிமெண்ட் ரொம்பப் பிடித்துப் போயிற்று
அதன் மைய மண்டபத்தில்
கால் நீட்டிப் படுத்தபடி
அம்பேத்கர்களை கால்வாரி விடுவது
அவனது அரசியலாயிற்று

மெக்கலேயின் ஜர்தாவை வாங்கி
தன் குருகுல வெற்றிலையோடு குதப்பி
பள்ளிக்கூடங்களெங்கும் துப்பினான்.

(சர்.சி.வி)ராமன் விளைவுகள்
ராமனின் விளைவுகளாயின
நதிமூலம் அறியப்பட்ட கங்கை
வேறு வழியில்லாமல்
சிவனின் தலையிலிருந்து வழிகிறது

பின்னர் சாதி வேல் கம்புகளும்
சாதி வெட்டரிவாள்களும் செய்யப்
பயிலரங்கம் நடத்திய ராமன்
எல்லோரும் வெட்டிக்கொண்டு செத்தபோது
அழகிப் போட்டியொன்றில்
நடுவராய்ப் போய் உட்கார்ந்தான்.

கை தடித்து
குறி பெருத்தலைகிறான்
ராமன்

சுமக்க முடியாமல்
அவன் அம்பறாத்துாளி
ராணுவ டாங்கர்களில் வருகிறது
அதில் 'அக்னி'யும் இருக்கிறது
5000 கிலோமீட்டர் பாயுமாம்

நமக்கும்
ராமனின் புதுடில்லிக்கும்
அவ்வளவுதான் துாரம்

மேகவண்ணன்


படிப்பகம்

www.padippakam.com

புதியதடம்

⑨

மார்ச் - மே 2001

■

வெளியீடு
சமூக விஞ்ஞானப் பயிலகம்
தமிழ்நாடு

■

ஆசிரியர்: மேகவண்ணன்
குழு : வரதன்
கருணாகரன்
ரமேசு
வாசுஅரி
குமரன்தாசு

■

தொடர்புக்கு
44, லெட்சுமண தீர்த்தம் தெரு,
இராமேசுவரம் - 623 526
தமிழ்நாடு.

■

தொலைபேசி
(04573) 22456,22482

■

மின்னஞ்சல் முகவரி
puthiyathadam@yahoo.com

■

தனி இதழ் ரூ.10/-
சந்தா ரூ.100/- (பத்து இதழ்கள்)

■

நன்கொடைகளை M.Murugesan, என்ற பெயரில் M.O. அல்லது D.D யாக அனுப்பவும்.

■

மக்கள் முன்னெப்போதையும்விட மிகுந்த இறை நம்பிக்கையாளர்களாக இப்போது மாறியிருக்கிறார்கள். சபரிமலைக்கும், திருப்பதிக்கும்,மேல்மருவத்தூர், பழனிக்குமாக யாத்திரை செல்பவர்களது சதவீதம் ஆண்டுதோறும் பணவீக்கம்போல அதிகரிக்கிறது.

முன்னெப்போதையும்விட அதிகமான தமிழ்ப் பக்தி சினிமாக்கள் வருகின்றன(சாமி ஆடுபவர்களுக்கு சிறப்பு ஓய்வுஅறை வசதி உண்டு என்கிற தியேட்டர் விளம்பரங்களோடு!). "மகரிஷி வேதாவிஷன்" என்கிற சேட்டிலைட் தொலைக்காட்சி சானல் கூட உண்டு. கோயில் விசேசங்கள் உள்ளூர் கேபிள் டிவிக்களில் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. வீட்டை விட்டு வந்து பார்க்க முடியாதவர்கள் வீட்டிலிருந்தபடியே பார்த்துக்கொள்ளலாம்.

மாதத்திற்கொரு 1008 விளக்குபூசை எப்படியும்(குறைந்தது 2016 பெண்கள் பங்கேற்க) நடந்துவிடுகிறது. கும்பாபிஷேகத்திற்கு அரகர சங்கர கோசத்தோடு இரண்டு சங்கராச்சாரிகளும் வருகிறார்கள். பாப்பான்களும் பெருந்தனக்கார சூத்திரன்களும் ஊர் எல்லையில் நின்று வரவேற்று காலை நக்குகிறார்கள்.

அலகாபாத் கும்பமேளாவில் கோடிக்கணக்கில் குவிந்து 44 நாட்கள் புனித நீராடுகிறார்கள். நிர்வாண போஸ் கொடுக்கிறார்கள். ஒரு கையில் வாளோடும் துருத்திக்கொண்டிருக்கும் ஆண்குறிகளோடும் அவை புகைப்படமாயின.

டிசம்பர்(மார்கழி)களில் "அந்தா வாரார் ஐயப்பா இந்தா வாரார் ஐயப்பா" என்கிற இனிமையான பாடல்கள் தடை செய்யப்பட்ட லவுட் ஸ்பீக்கர்(குழாய்)கள் வழியாக நம் காதுகளைப் பதம் பார்க்கின்றன. ஐயப்பன் பெயரால் குருசாமி என்ற குட்டி ஐயப்பன்கள் உருவாகிறார்கள். டிவி விளம்பரங்களிலும் தமிழ் சினிமாக்களிலும் வெள்ளை நூலை அணிந்த சிலர் போதனைகளும் புத்திமதிகளும் சொல்கிறார்கள்(சமூகம்தான் திருந்தியபாடில்லை). நிறைய பூ வியாபாரம் நடக்கிறது. ஒரு காலத்தில் வீரப்பனிடம் வாங்கிய சந்தனத்தினால் சிலைகளுக்கு அபிசேகங்கள் நடக்கின்றன.

தேர்தலை அறிவிக்கிறார்கள். யார் யாரோடு சேர்வது என்பதில் குழம்பிப் போகிறார்கள். முன்னர் ஊழலும் மதவாதமும் ஒன்றாகத்தான் இருந்ததாம். இப்போது அவற்றை வேறுவேறு கட்சிகள் எடுத்துக்கொண்டு விட்டதாக குரைத்துக் கொள்கிறார்கள். பெரும் தோட்டங்களில், புரங்களில் வாழ்கிறவர்கள் –நீண்ட உறக்கத்திற்கு மட்டும் மெரினா பீச் வந்து விடுகிறார்கள்.

எனினும்கூட இரட்டைக் கிளாஸ் டீக்கடைகள் அனேக இடங்களில் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. தொடக்கூடாது என்று சொல்லப்பட்ட தேரை தொட நெருங்கி விட்டார்கள். தலித்துகள் தங்களுக்கான அமைப்பை நிறுவவும் அதில் இணையவுமான செயல் தளத்தில் நிற்கிறார்கள். இந்துத்துவாவின் முகத்திரையை கிழித்துப்போடவும், சிதைத்துப் போடவுமான எழுத்துக்களும், காட்சி ரூபங்களும் தொடர்ந்து படைக்கப்பட்டு வருகின்றன. திராவிட இயக்கங்களின் துரோக அத்தியாயங்கள் தாண்டி பெரியார் சரியான திசையில் வாசிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்.

சென்ற தேர்தலில் வாக்குச் சேகரிக்கச் சென்ற சிலரை செருப்பெடுத்து விரட்டிய மக்கள் இன்னும் இருக்கிறார்கள். தொடர்ந்து பாடம் கற்றுக்கொள்ளும் மக்கள் வேட்பாளர்களை, மதவாதிகளை, துரோகிகளை எதிர்கொள்ள புதிய உத்திகளோடு காத்திருக்கலாம். யார் கண்டது?

படிப்பகம்

www.padippakam.com

# கறுப்பு இலக்கியம் – ஓர் அறிமுகம்

## ப்ரதிபா ஜெயச்சந்திரன்

நம் சரித்திரப் புத்தகங்கள் கறுப்பர்களைப் பற்றிப் பேசும்போது, 15-ஆம் நூற்றாண்டில் கறுப்பின மக்களை வைத்து நடத்தப்பட்ட 'அடிமை வாணிபத்'திலிருந்து ஆரம்பிக்கிறது. ட்ரெவல்லியன் எழுதிய இங்கிலாந்தின் சமூக வரலாறு என்னும் புத்தகம் இந்த அடிமை வாணிபத்தைப் பற்றி மிகத் தெளிவாகப் பேசுகிறது.

பிற இனங்களின் மத்தியில் மக்களாகவே மதிக்கப்படாத அளவிற்கு கேவலமாக நடத்தப்பட்ட இந்தக் கருப்பின மக்களின் பேனா முனைகள் வெள்ளையர்களின் எழுத்துக்களைவிட கூர்மையான எழுத்துக்களை கொடுத்தன. இம்மக்கள் தாங்களும் மனிதர்கள் தான் என்பதை தங்களின் இசை மற்றும் எழுத்துக்கள் மூலமாக வெளியிட்டார்கள். ஒரு புதிய வீச்சோடு எழுச்சியுடன் வெளிவந்த இவர்களின் எழுத்துக்கள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டன.



புதிய தலைமுறையைச் சார்ந்த நீக்ரோ கவிஞர்களான நாங்கள் எங்களது தனிப்பட்ட கறுப்புத்தோல் போர்த்திய பண்புகளை எவ்வித பயமோ வெட்கமோ இன்றி வெளிப்படுத்த முனைகிறோம். நாங்கள் அழகானவர்கள் என்று எங்களுக்குத் தெரியும், அசிங்கமானவர்கள் என்றும் தெரியும். முரசுகள் சில நேரம் சிரிக்கின்றன. சில நேரம் அழுகின்றன. நாங்கள் எங்களுக்குத் தெரிந்த முறையில் எங்களுக்கான நாளைய கோயில்களைக் கட்டுகிறோம் என்ற பிரகடனங்களுடன் இவர்களின் படைப்புகள் வெளியாயின. மனித வரலாற்றில் இவர்கள் மிகவும் தொன்மையானவர்கள் என்பதை இவர்களின் படைப்புகள் பேசின.

என் ஆன்மா இந்நதிகளைப் போன்று ஆழமானது. விஷயங்கள் குழந்தைகளாக இருந்தபோது நான் யூப்ரடிஸ் நதியில் குளித்திருக்கிறேன். காங்கோவுக்குப் பக்கத்தில் நான் குடிசைகளைக் கட்டியபோது அது என்னைத் தாலாட்டிசைத்து தூங்க வைத்தது. நைல் நதியினைக் கர்வமாய் பார்த்து அதன் பக்கத்தில் பிரமிடுகளை கட்டினவன் நானே. நான் நதிகளை அறிவேன். தொன்மையான இருள்படிந்த நதிகளை எனது உயிர் இந்த நதிகளைப் போன்றே ஆழமானது என்று லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ் என்னும் ஆப்ரிக்க கவிஞன் கூறுகிறான்.

கறுப்பின மக்களின் எழுத்துக்களைப் பற்றி ழான் பால் சார்த்தர் 'இனவெறியை எதிர்க்கும் இனவெறி'என்றும், 'கருப்பின எழுத்துக்கள் நம் காலத்தின் உண்மையான புரட்சி எழுத்துக்கள்' என்றும் கூறுகிறார்.

தன்னம்பிக்கையையும் புதிய உத்வேகத்தையும் கொண்ட இவர்களின் நிஜவாழ்க்கையின் எதார்த்தப் பதிவுகள் இலக்கிய உலகில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடித்துக் கொண்டன.

ஒரு மொழியின் இலக்கியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அந்த இலக்கிய உருவாக்கத்தின் பின்னணியாக உள்ள மக்களின் வாழ்க்கை பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவர்களின் வாழ்வுக்கூறுகள் நமக்குத் தெரிகிற போது அந்த எழுத்துக்களின் ஆழமும், அதில் புதைந்துள்ள சோகமும் நமக்குத் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கிறது.

டேவிட் டையோப் என்ற கவிஞன் 'உனது முன்னிலையில்' என்ற காதல் கவிதையை எழுதுகிறான். அதன் பின்னணி இவ்வாறு விரிவடைகிறது.

செனிகால் பகுதியில் உள்ள ஒரு நதிக்கரையோர கிராமம். அங்கே ஒரு ஜோடி கறுப்புக் காதலர்கள் தங்கள் எருமைகளை காடுகளினூடே மேய்த்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கான உணவாக காடுகளில் கிடைக்கும் கனி வர்க்கங்களையும், தங்களது வேட்டைப் பொருளையும் உண்டு பசியின்றி, பயமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் இதே போல் நிறைய ஜோடிகள், குடும்பங்கள் நிரந்தரமான கவலைகள் ஏதுமின்றி அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காதலன் மேல் படுத்துக்கொண்டு இதழ் சுவைக்கும் காதலி. அமைதியான இரவு, அப்போது இரவின் இருளைக் கிழித்துக் கொண்டு திடீரென, தீப்பந்தங்களுடனும், துப்பாக்கிகளுடனும் சொடுக்கும் சாட்டைகளுடனும் வெள்ளை வியாபாரிகள் அந்தச் சிறு கிராமத்தை சுற்றி வளைத்து இந்த மக்களை சிறைபிடித்துச் செல்கின்றனர். சிறிய போர்க்களமாகவே அந்த இடம் மாறுகிறது. ஆண்களும், பெண்களும் ரகம் வாரியாகப் பிரிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகையில் பெற்றோர் பிள்ளைகளையும், காதலர்கள் தங்கள் காதலிகளையும் பிரிகின்றனர். அப்போது ஒருவரின் பெயரை ஒருவர் உரக்கக் கூவியழைத்துக் கதறிக் கொள்கின்றனர். அந்தக் காதலி வேறு வேறு சூழல்களில் வீட்டு வேலையாளாக, எஜமானுக்கு வைப்பாட்டியாக, அடிமையாக பணிபுரிய வைக்கப்படுகிறாள். அதே போல் காதலனும் வேறு சூழலில் அடிபட்டுத் திரிகிறான். பத்தாண்டுகள் ஓடிவிட்டன. அந்த அடிமைகளின் பெயர்கள் மறுக்கப்பட்டு எண்களால் விளிக்கப்படுகிறார்கள். தங்களின் பெயர்கள் அவர்களுக்கு மறந்துவிட்டன. இவன் ஒரு புட்டி மதுவுக்காக தன் எஜமானனால் விற்கப்பட்டு மீண்டும் சந்தைக்கு கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

வரப்படுகிறான். அவளும் தன் இளமை அனைத்தும் பறிபோக, சரியான உணவின்றி எலும்பும் தோலுமாக வேறு ஒருவனுக்கு விற்கப்படுவதற்காக சந்தைக்கு கொண்டு வரப்படுகிறாள்.

அப்போது காதலர்கள் ஒருவரையொருவர் காண நேரிடுகிறது.அப்போது அவள் இவனையும், இவன் அவளையும் பெயர் சொல்லிக் கத்தி அழைக்கிறார்கள். மறுபடியும் தாங்கள் மனிதர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். மகிழ்ச்சி உடைப்பெடுக்கிறது. பத்தாண்டு கால தங்கள் சோகங்களை ஒருவருக்கொருவர் சொல்லி தேற்றிக்கொள்ள எழும் ஆவல், கண்ணீர் திரண்டு திரையிடுகிறது. மீண்டும் அவர்கள் வேறு வேறு திசைகளில் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள நேர்ந்த அந்த அற்புதமான நிமிடங்கள் - இடிந்து போன மகிழ்ச்சியான நாட்களை அந்த ஒரு கணத்தில் அவசரமாகப் புரட்டிப் பார்த்து மூடிக்கொள்ள நேர்கிறது. மறந்து போன பெயர்கள் மீண்டும் நினைவூட்டப்படுகின்றன. ஓர் உன்னதமான காதல் கவிதை நமக்குக் கிடைத்துவிட்டது.

உனது முன்னிலையில்
எனது பெயரை
நான் மறுபடியும் கண்டெடுத்தேன்.
பிரிவுத் துயரின் கீழே
மறைந்திருந்த என் பெயரை
நான் மீண்டும் கண்டெடுத்தேன்.
காய்ச்சலினால் திரைபோடப்படாத விழிகளை
நான் மீண்டும் கண்டுபிடித்தேன்.
உனது சிரிப்பு
நிழல்களை ஊடுறுவும் தீப்பந்தம் போல்
நேற்று எனும் பனித்திரைக்கு
அப்பால் இருந்த ஆப்பிரிக்காவை
எனக்குக் காட்டியது.
மாயைகளோடும் சிதறிய எண்ணங்களோடும்
மதுவினால் நிம்மதி இழந்த
தூக்கங்களோடும்
நேற்றைய கசப்பினால்
இன்றைக்கும் கனக்கும் துயரங்களோடும்
அன்பே
பத்து ஆண்டுகள் கழிந்தன

உனது முன்னிலையில்
நான் என் குருதியின் நினைவை
மீண்டும் கண்டெடுத்தேன்

சிரிப்பு மாலைகளைப்போல் நம் கழுத்துக்களை
அணி செய்த நாட்களை
புதுமை மாறாத மகிழ்ச்சியினால்
பளிச்சிட்ட நமது நாட்களை
நான்
மீண்டும் கண்டெடுத்தேன்
உனது முன்னிலையில்.

கறுப்பர்களின் ஒடுக்கப்பட்ட வாழ்க்கைமுறை அவர்களின் மீறலுக்கான தளத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. கறுப்பு இலக்கியத்தின் வருகை இவர்களின் அடுத்த கட்ட மனமீறலுக்கு இட்டுச்செல்கிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வெவ்வேறு குழுக்களாக உள்ள இம்மக்களின் 2400-க்கும் அதிகமான வட்டார மொழிப் பிரயோகத்தில் உள்ள இவர்களின் இலக்கியம் இன்று ஏனைய உலக மக்களின் இலக்கியத் தரத்திற்கு எந்த வகையிலும் குறைவின்றி செறிவுடன் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அலெக்ஸ் லா குமா - வின் A Walk in the Night என்னும் நாவல் 'தென்ஆப்ரிக்காவில் உள்ள ஒரு இனமக்கள் வேறு இனமக்களை ஒடுக்கும் கதையைக் கொண்டது மட்டுமல்லாது.. ஒரு இனம் வேறு ஒரு இனத்தை ஒடுக்குவதை முன்னிருத்தி எழுதப்பட்ட நாவலாக விரிந்து உலகின் அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்படக்கூடிய நாவலாகத் திகழ்கிறது.

கறுப்பு இனத்தவர், தாங்கள் பரந்துபட்டுக் கிடக்கும் ஒவ்வொரு நாட்டிலும் கறுப்பு இலக்கியப் படைப்பாக்கத்தில் தங்களின் கால, இடச்சூழலோடு தம்மக்களின் வாழ்க்கைச் சித்தரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கறுப்பினப் படைப்பாளிகளில் பெண்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். இங்கிலாந்தைச் சேர்ந்த பாலின் மெல்வில், பார்பரா பர்.:.போர்டு, ட்ரினிடாடைச் சேர்ந்த வலேரி பெல்கிரேவ், அமெரிக்காவைச் சேர்ந்த மார்ஷா சன்டி ரஸ்ஸல், ஆக்டேவியா பட்லர், போன்றோரும், ஜமைக்காவைச் சேர்ந்த மிஷேல் க்ளிப், ஏலின் தாமஸ், நைஜீரியாவின் பொலாரா போன்றோர் இன்னும் உயிரோடிருக்கும் கறுப்பினப் பெண் படைப்பாளிகளாவர்.

* *கவிதை மொழிப்பெயர்ப்பு - இந்திரன்*
* *(அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்)*
* *உதவிய நூல் - Doughter of Africa.*

**மடல்**

இரட்டைமலை சீனிவாசன் பற்றிய கட்டுரை முதல் விசுவின் அரட்டை அரங்கம் ஈராக கவனித்திருப்பதும், நிகழ்வுகளின் மீது விமர்சனங்களை முன்வைத்திருப்பதும் கவனத்தில் கொள்ளப்படும். அதைவிட புதியதடத்தின் கட்டுரைகளை வாசிக்கும் போது இவ்வளவு நாளும் இருந்ததை விட ஒரு வித்யாசமான ஆக்ரோஷம் தெரிகிறது எழுத்துக்களில் ஒரு கோபம் தெரிகிறது. பக்கங்கள் குறைவு என்றாலும் தொடர்ந்து கொண்டு வாருங்கள். கவிதைகளில் தேக்கம் தெரிகிறது ஏன்தான் அப்படியோ? தெரியாது. தய். கந்தசாமியின் கவிதை ஓரளவு படிக்கும்படி இருக்கிறது கவிதைகளில் நல்ல கருத்துக்கள் பதிவாகி வருகிறது ஆனால் அவற்றைக் கவிதை என்று படிக்கும்படியாக இல்லை. தலித் சுப்பையாவின் கவிதையில் உண்மை இருக்கிறது . அது கவிதையாக இலை. அவற்றைக் கட்டுரையாகவோ குறிப்புகளாகவோ எழுதிவிடமுடியும் . ஆனால் அவற்றின் உண்மை கருதிப் பிரசுரிக்கவும் வேண்டும் ஆனால் சூர்யமுகி மாதிரியான கவிதைகள் தேவையற்றது என்றே படுகிறது யோசியுங்கள்.

கற்சுறா. பிரான்ஸ்


படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# மட்டம்

அபிமானி

ஊரெல்லாம் முடங்கிக் கிடந்த சாமப்பொழுதில் தான் அவர்கள் கதவைத் தட்டினார்கள். ஓலைத் தட்டியில் கற்களை வீசுவதைப் போன்ற கரகர ஓசை. இற்றுப் போன கதவு சுரத்தில்லாமல் ஓசை எழுப்பிற்று. அடிபட்டதுகெனக்கா ஆக்ரோசமாய் எழுந்து நின்று குரைத்த நாய்களின் ரோதனையில் கதவு தட்டும் ஓசை மேலும் சுரத்துக்குறைந்தே ஒலிக்கத் துவங்கியது.வேறு வழியில்லை. சத்தம் கூட்டித்தான் அழைத்தாக வேண்டும்.

" செல்லம்... ஏ செல்லம் "

செல்லத்துக்கு நல்ல தூக்கம் சாமப்பொழுதில் யாருக்குத்தான் தூக்கம் வராது? சாயந்திரமே ரெண்டு பாட்டில் செவுருமுட்டியையும், தட்டு நிறைய மாட்டுக்கறியையும் வயித்துக்குள் கொட்டி விட்டு அக்கடாவென்று சரிந்திருந்தாள். கிழட்டுத்தேகம், பொத்தைச் சதைகள். வாய்க்கு வக்கனையாய் வாங்கிக்கொட்ட அவளின் புருசக்காரன். சாயந்திரம் பஞ்சாயத்துப் போர்டுக்குள் வாரியலையும், குப்பைப்பெட்டியையும் போட்டுவிட்டு கரையேறி வருகிறவன் செவுருமுட்டியும் கையுமாக வீட்டுக்கு வருகிறான். அவனுக்கு இரண்டு பாட்டில், அவளுக்கு இரண்டு. மருமகக்காரி மசாலா மணக்க ஆக்கி வைத்திருக்கும் மாட்டுகறியையும், சோற்றையும் வயிறுமுட்டச் சாத்திவிட்டுப் படுத்துக் கொள்ள வேண்டியது.

மீண்டும், " செல்லம்... ஏ செல்லம் "

பொறுக்க மாட்டாமல் நான்கைந்து கைகள் சேர்ந்து தட்டின இப்போது. ஓங்கித் தட்டினால் கதவு உடைந்து விடக்கூடும் என்றும் எண்ணத் தோன்றியது அவர்களுக்கு. ரொம்ப நாள் ஆகிவிட்டதற்கான ரகசியத்தை அதன் ஓசையே சொல்லிற்று.

அந்தப் பகடைத்தெருவில் எல்லா வீட்டுக்கதவுகளுமே இந்த லட்சணத்தில் தான் பலமில்லாமல் நின்றிருந்தன. மொத்தம் இருபது வீடுகள் இருந்தன. ரயில் பெட்டிகளை இணைத்து விட்டிருந்தது கெனக்கா ஒரே கோட்டில், ஒரே சீராய் வீடுகள் தெரிந்தன. செங்கல் சுவருக்கு மேல் ஓடுகள் வேய்ந்திருந்தன. சுவர்கள் எல்லாம் காரை பெயர்ந்து, சட்டங்கள் இற்றுத் தொங்கிக்கொண்டிருந்தன. தெருவின் கிழக்குச் சந்தியில் தெருவிளக்கு நின்றிருந்தது வெளிச்சமில்லாமல். எங்கும் இருட்டுக்கசம் தான். முன்னெச்சரிக்கையாக அவர்கள் பேட்டரி லைட்டுகள் கொண்டு வந்திருந்ததால் தப்பித்தார்கள். இல்லையென்றால் குண்டுங் குழியுமாக கிடந்திருந்த அந்தத் தெருவில் சறுக்கி விழுந்து காயம்பட வேண்டியிருந்திருக்கும் அவர்களுக்கு. பஞ்சாயத்துப் போர்டுக்காரன் செய்திருந்த புண்ணியம், இந்த வீடுகளாவது அவர்களுக்குத் தஞ்சமெனக் கிடைத்திருந்தன. அவர்களின் சம்பளத்திலிருந்து மாசாமாசம் வாடகையைப் பிடித்துக் கொள்வார்கள் என்பது வேறு விசயம். ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது பஞ்சாயத்துப் போர்டில் தெருசுத்தித் தொழிலாளர்களாக வேலை பார்த்தனர். செல்லத்தின் வீட்டில் அவன் புருசன்காரனும் மகன்காரனும்...

●

கொஞ்சநேரத் தாமசத்திற்குப் பிறகுதான் கதவு திறக்கப்பட்டது. நடுவீட்டுக்குள் சிம்னி விளக்கு கிறக்கமாய் எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. செல்லத்தின் புருசக்காரனும் ஒரு பேரப்பயலும் இடுப்புத்துணி விலகத் தரையில் படுத்துக்கிடந்தனர். அவளின் மகன்காரனும் மருமகக்காரியும் புறக்கடையில் வேய்ந்திருந்த ஓலைக்குடிசைக்குள் கிடந்திருக்கலாம். அப்பனும் மகனும் ஒரே தொழிலைத்தான் செய்து கொண்டிருந்ததால் வயித்துப்பாட்டுக்கு குறைச்சலில்லாத ஜீவனமிருந்தது அவர்களுக்கு.

" யாரு.. இம்புட்டு நேரத்துல ?"

கண்களை கசக்கிக்கொண்டு இடுக்கலாய் ஏறிட்டாள் செல்லம். பீளைக் கண்கள், வெள்ளையும் கறுப்புமாய் குமைந்து கிடந்திருந்த அவளின் கூந்தல் சிதிலமாய் தெரிந்தது. முகம் உப்பிக்கிடந்தது. ராத்திரிப் போட்டிருந்த வெத்தலைக் குதப்பலில் உதடுகள் காய்ந்து பொருக்குகளாய் துலங்கின.

அவர்கள் பேட்டரி லைட் அடித்து தங்களை அடையாளம் காட்டிக் கொண்டனர். அதே மூச்சில் அவள்மேலும் லைட் அடித்து ஆளை உறுதி செய்து கொண்டார்கள். மேலுக்குச் சட்டையில்லாமல்- முந்தானையை மார்பில் குறுக்காகப் போட்டு மறித்துக்கொண்டு - செல்லம் நின்றிருந்தாள். வரிவரியாய் சுருக்குகள் விழுந்திருந்த தசைகள், அவள் தோள்களில் துல்லியமாய் தெரிந்தன.

" நாங்கதா செல்லம்"

வீட்டுக்குள்ளிருந்து குப்பென்று கவிச்சி வாடை வீசியதும் முகங்களைச் சுருக்கென்றுச் சுழித்துக் கொண்டனர். மாட்டுக்கறியை உப்புக்கண்டம் போட்டுத் தொங்கவிட்டிருக்க வேண்டும் உள்ளே. போனவாரந்தான் ராமையாத் தேவரின் காளைமாடு ஒன்று வன்கொலையாய் நோய்கண்டுச் செத்துப் போனதை சமயோசிதமாய் ஞாபகப் படுத்திப் பார்த்தனர்.

அவளுக்குத் திக்கென்று ஆயிற்று. இத்தனைத் தேவமார்களும் இந்த ராத்திரியில் திடுதிப்பென்று வருவதென்றால் ஏதாவது அழிம்புப் பண்ணத்தானே இருக்கும் என்று அவளுக்குள் கொலைப் பாதகமாய் ரோசனை ஓடிற்று. அப்படித் தப்புத்தண்டா எதுவும் தானோ தன் குடும்பத்தாரோ பண்ணவில்லையே என்பதையும் மறுகலாய் நினைத்துப்பார்த்துக் கொண்டாள். " என்ன சாமி.. இந்தச் சாமத்தல?." தேகம் நடுங்க வாய் குழறியது செல்லத்துக்கு. உயிர்க்கலக்கத்தோடு வாசலைவிட்டு வெளியே வந்து நின்றாள். மாராப்புத் துணியையும், கூந்தலையும் அனிச்சையாய் சரிப்படுத்திக் கொண்டாள்.

அவளுக்கு வழிவிட்டு அவர்களும் சற்று வெளிநகன்று நின்றார்கள். சுற்றிலும் இருட்டின் மூர்க்கத்தனம். மூச்சுத்திணறுவது போல் இருட்டு. நாயின் குரைப்புக் குறைந்திருந்தது போலத் தெரிந்தது. அவற்றுக்கும் வாய் வலித்திருக்க வேண்டும். எத்தனை நேரந்தான் தொண்டைவற்றக் குரைத்துக் கொண்டிருக்க முடியும்? கிழக்கே கூப்பிடும் தூரத்தில் ஒன்றிரண்டு உடைமரங்கள் சடைமுனிகளைப்போல் கிளைபடர்த்தி நின்றிருந்தது மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

சன்னமாகத் தெரிந்தது. வடக்கே தூரத் தொலைவில் நின்றிருந்த அரைப்பு மில்லின் உச்சியில் ஒளிரும் பல்பு வெளிச்சம் மட்டும் சின்ன நட்சத்திர மினுக்கலாய் அவர்களின் கண்களுக்கு காட்சி தருவது தெரிந்தது. அடிக்கடி பேட்டரி லைட் அடித்து அவர்களுக்கிடையே திரைப்போட்டிருந்த இருட்டை விலக்கிக் கொண்டார்கள்.

" எல்லாம் ஒன்னையத் தேடித்தான் "

" எதுக்கு சாமி ?"

" எம்மவ வயித்துவலி வந்து துடிக்கிறா செல்லம்.. இந்த நேரத்துல ஆசுபத்திரிக்கு கூட்டிக்கிட்டுப் போவ முடியுமா?. போனா டவுனுக்கில்ல போவனும்?. அதுக்குள்ள பஸ் வசதி இருக்கா சொல்லு "

இப்போது தான் நிதானத்துக்கு வந்தாள் செல்லம். நிம்மதியாய் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். தன்னைத் தண்டிக்க இவர்கள் வரவில்லை என்கிற நிம்மதி.

" தலப்பிரசவமா சாமி ?."

" ஆமா செல்லம் ஒனக்குத் தெரியாதா என்ன. எம்மூத்த மவ அங்கயணி"

'அங்கையற்கண்ணி' என்கிற பெயரைத்தான் வாய்க்குள் நுழைகிற மாதிரி அங்கயணி என்று பரமசிவத் தேவர் சுருக்கிச் சொன்னார். இதுவரை அவர்தான் செல்லத்தோடு வார்த்தையாடிக் கொண்டிருந்தது. வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, சட்டைக்கையை சுருட்டி விட்டிருந்தார். முறுக்கி விடப்பட்டிருந்த மீசை. தாட்டியமான ஆள். அவரைப்போலவே மற்ற மூவரும்... தாட்டியமாய் கையில் பேட்டரி லைட்டோடு.. இடுப்பில் வேட்டிக் கட்டோடு.. மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு..

" யாரு அங்கயணி நாச்சியாரா ?"

" ஆமா, பின்ன யாரச் சொல்றோம்"

" கல்யாணம் முடிஞ்சி ஒரு வரியம்தான சாமி இருக்கும்"

" அதெல்லாம் அவுங்கவுங்க யோக பாகம்.. சரிசரி பொறப்படு.. நீ கை வச்சாத்தான் கொழந்தப் பொறக்கனுமின்னு இருக்கு"

" என்ன சாமி.. இம்புட்டு நேரம் எதுக்குத் தாயமாடிக்கிட்டு வரனும்? செத்தம் காலம்பறவே வந்திருக்க வேணாமா? சும்மா சாதாரண சங்கதியா இது? ஒரு உசுரோடப் போராட்டமில்ல?"

" சரி வழக்கமா எடுக்கிற சூட்டு வலிதாமின்னு நெனைச்சிக்கிட்டுத்தான் பொம்பளைங்க எல்லாம் சும்மா இருந்திட்டாளுவ.. அவ இப்ப உசுர்ப் போற மாதிரிக் கெடந்துத் தவிக்கிதா".

" ஒன்னும் கவலப் படாதிங்க சாமி.. ஒன்னும் ஆயிராது.. நா எதுக்கு இருக்கேம்?"

சற்றைக்கெல்லாம் குதிங்கால் தெறிக்க வீட்டுக்குள்ளே ஓடினாள் செல்லம். வாயைக் கொப்புளித்து, முகம், கைகளைக் கழுவிவிட்டு புருசக்காரனை எழுப்பி விசயத்தை அவன் காதிலும் போட்டு அனுமதி வாங்கி விட்டு, வெரசலாய் வெளியோடி வந்தாள்.

" வாங்க சாமி, அதயுந்தான் பாத்திருவோம்"

இருட்டைக் கிழித்துக் கொண்டு விசுக்விசுக்கென்று பாய்ந்து போனாள் செல்லம். பின்னால் வந்தவர்கள் லைட் அடித்து பாதை காட்டினார்கள். மற்ற சமயங்களில் அவர்களுக்குப்பின்னே நடைகட்டிப் பணிவாய்ப் போகிறவர்களுக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எல்லோரையும் பின்னுக்குத்தள்ளி விட்டு தான் முன்னே செல்வதில் ஒருவிதப் பெருமிசம் பொங்கியது அவளுக்குள்.

பொதுவாக அநத ஊரில் உள்ள எல்லாச் சாதிக்காரர்களுமே கர்ப்பந்தாச்சிகளுக்கு தீடீரென்று ஒரு நோவு, நொடி என்றால் செல்லத்தைத்தான் முதலில் வந்து கூப்பிடுவார்கள். சாதாரண நேரங்களில் பஸ் பிடித்து நகரத்திற்குப் போய்விடலாம். செல்லமும் தன் கைராசியில் நொடித்துப் போயிருக்கவில்லை. பத்துப் பதினைஞ்சு வருசங்களுக்கு முன்னே கைகூடியிருந்தது இந்தக்கலை. உற்றார் உறவினர் பெம்பளைகளுக்குப் பார்த்துப் பழக்கப்பட்டே, ஊர்க்காரர்களுக்கும் செய்ய வேண்டியதாயிற்று. பெரிசாய் இதிலொன்றும் வரும்படி இல்லையென்றாலும், ஒரு புண்ணியக்காரியமாய் செய்தாள். அம்பது ரூபா துட்டும், பத்து வெத்தலையும், நாலு பாக்கும் கிடைக்கும். சந்தோசமாய் வாங்கிக் கொள்வாள் செல்லம். தாய்க்காரியை கஷ்டப்படுத்தாமல் குழந்தைக் குறையில்லாமல் பிறப்பதே அவளுக்குக் கொட்டிக் கொடுத்தது மாதிரி ஆகிவிடும்.

தேவமார் தெருவுக்குள் நுழைவது என்றாலே அவளுக்கு அச்சரவாகத்தான் தோன்றியது. எப்போதும் தயங்கித் தயங்கியே நடந்த கால்களுக்கு இன்று வெரசலாயும், வீராப்போடும் போவதற்குச் சற்று கிருத்தாரியம் பண்ணத்தான் செய்தது.

பரமசிவத் தேவர் வீட்டை நெருங்கி விட்டிருந்தாள். சுத்துக்கட்டு வீடு. வெள்ளை வெளேர் என்று சுவர்களில் பூசியிருந்த சுண்ணாம்பு, முற்றத்து விளக்கொளியில் பட்டு ரொம்பவும் பிரகாசமாகத் தெரிந்தது.

நடுவீட்டில் கிடத்தியிருந்தார்கள் அங்கயணியை. குழல் விளக்கின் பிரகாசமான ஒளியில் அவளின் முழு நிர்வாணமும் துல்லிசமாய்த் தெரிந்தது. மட்டமல்லாக்கப் படுத்திருந்த அவளைச் சுற்றி அந்தத்தெரு தேவமார் பொம்பளைங்க எல்லாம் வெட்டவெறிக்க முழித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவர் மனசிலும் திகைப்பு ஒட்டிக்கொண்டிருந்ததை கலவரமடைந்த அவர்களின் முகங்கள் காட்டித் தந்தன. வெளியே முற்றத்தில் ஆம்பளைகள் கூட்டம். செல்லத்தைக் கண்டதும் பொம்பளைகள் சிலர் ரொம்பவும் சந்தோசமடைந்தனர். "வா செல்லம்.. ஒனக்காவத்தான் காத்துக்கிட்டு கெடக்கோம்.. இப்பத்தான் திடீர்னு வலிக்குதுன்னுக் கத்துறா.. நாங்களும் என்னன்னலாமோ காச்சிக் கொடுத்தாச்சி.. வலி நிப்பேனாங்கிது" ஆளாளுக்கு வாப்பாறினார்கள்.

எல்லோரையும் நீக்கிக்கொண்டு அங்கயற்கண்ணியின் அருகில் போய் அமர்ந்தாள் செல்லம். தேகம் புல்லரித்து நிற்க, வேதனை தாளாமல் அங்கயற்கண்ணி அரற்றுவதும், கண்ணீர் சொரிவதும் தெரிந்தது. அவளால் படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. சிரமப்பட்டு மெதுவாக எழுந்து, உட்கார முயற்சி


படிப்பகம்

www.padippakam.com

பண்ணினாள். உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. ரண வேதனை. மனுசுக்குள் கொந்தளிப்பு.

" படுத்துக்கிட்டும், ஒக்காந்துக்கிட்டும் இருந்தா பிள்ளை பொறக்குமா நாச்சியார? செத்தம் எந்திச்சி நடங்க.. அப்பத்தான் வயிறு எடங் கொடுக்கும்.. வயித்துப்பாரத்தை எறக்கிறதுன்னாச் சும்மாவா?".

அங்கயற்கண்ணியின் வலது கையைப் பிடித்துத் தாங்கலாய் தூக்கினாள் செல்லம்.

அடிவேர்ப் போன மரம் மாதிரி நிற்கச் சிரமப்பட்டாள் அங்கயற்கண்ணி. செல்லம்தான் அவளின் தோளை தன் தோளோடு சாய்த்துக் கொண்டு மெதுவாக நடக்கவைத்தாள். அதே வீச்சில் அங்கயற்கண்ணியின் ஆத்தாக்காரியைக் கூப்பிட்டு, "வெரசலாப் போயி செத்தம் வென்னி வச்சிக் கொண்டாங்கம்மா" என்று ஏவினாள்.

ஓடினாள் ஆத்துக்காரி.

சற்றைக்கெல்லாம் இளஞ்சூட்டில் வென்னி வந்தது. சொம்பைக் கையில் வாங்கி.. ஆத்தலாய் அங்கயற்கண்ணியின் வாய்க்குள் சரித்து.. குடித்து முடித்ததும் அவளைச் சற்றுத் தரையில் உட்காரச் சொன்னாள் செல்லம்.

சுவரோரம் முதுகுச் சரிய, சாய்வாக உட்கார்ந்தாள் அவள். அடிவயிறு எம்பி நேர்மேலாக வாய்க்கு வருவதுபோல தோன்றியதும் சடக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். "என்னியால ஒக்கார முடியலியே ஆத்தா" என்று வாய்விட்டு அழுதாள்.

"ஒன்னுமே பயப்படாதியம்மா.. நா எதுக்கு இருக்கிதேம்? வயிறெல்லாம் நல்லாத்தான் எறங்கிப்போய்க் கெடக்கு.."

இதமாய் அங்கயற்கண்ணியின் இருதொடைகளையும் தடவித்தந்தாள் செல்லம். வென்னீரில் விரலை நுழைத்து அவளின் இடுப்பில் தேய்த்துத் தந்தாள். பாந்தமாய் அவளின் நடுவயிற்றில் விரல்களைப் பதித்துக் கீழ்நோக்கி அழுத்தி இழுத்தாள். நெருப்பில் விழுந்த புழுவாய் துடித்தாள் அங்கயற்கண்ணி. பாவம், சின்னக்குருத்து அவள். ஈர்க்குக் குச்சிக் கைகளும் கால்களும். குழந்தை பெருவதற்கான சக்தியும் தைரியமும் அவளிடம் இருக்குமா என்றே சம்சயப்படத் தோன்றிற்று செல்லத்துக்கு.

சிறிய இடைவெளியில், அங்கயற்கண்ணியின் அடிவயிற்றிலிருந்து நீர்க்குடம் உடைந்து "சளக்"கென்று கீழே விழுந்ததும்தான் எல்லோருக்கும் தெளிச்சி வந்தது. சீக்கிரத்தில் குழந்தை பிறந்துவிடும் என்ற நம்பிக்கை சுரந்தது.

கொஞ்சத் தாமசத்திற்குப் பிறகு குழந்தையின் தலைப்பகுதி சிறிய அளவில் வெளியே தெரியத் துவங்கியதும் செல்லம் சுதாரித்துக் கொண்டாள். சற்றைக்கெல்லாம் லாவகமாய் விரல் நுழைத்து குழந்தையின் தலையைப்பற்றி மெதுமெதுவாக வெளியே இழுத்தாள் செல்லம். சிறிது நேரம் போராட்டம். இறுதியில் போராட்டம் வெற்றியாகவே முடிந்தது. சதைக்கோளமாய், கோளையும் சவ்வுமாக ஒரு மதலையொன்று அவளின் கையில் வந்து விழுந்தது.

அசடுகளை வழித்தெடுத்துக் குழந்தையை முழுசாகக் கண்டு ரசித்தாள் செல்லம். பெண்குழந்தை. பிஞ்சுக் கால்கள் இரண்டையும் பிடித்துத் தூக்கி தலைகீழாக குழந்தையைத் தொங்கவிட்டு அதன் முதுகில் லேசாக விரல் பதித்து இரண்டு அடிகள் விட்டதும். . .

'வீல் வீல்'லென்று கத்தத் துவங்கியது அது. இப்போதுதான் எல்லோரின் முகங்களிலும் சந்தோசம் கொடிகட்டத் துவங்கியது.

"ச்சே செல்லம் நல்லக் கைராசிக்காரிதாம்.. பிள்ளையையும் தாயையும் ஒரு பிழையில்லாமல் பிரிச்சித் தந்திட்டாளே"

ஒரு தட்டில் நாலஞ்சி வெத்தலைகளையும், பாக்குகளையும் வைத்து வெத்தலைக்குமேல் அம்பது ரூபாய் ஒற்றைத் தாளாய் போட்டு செல்லத்திடம் தந்தார் பரமசிவத்தேவர். "ரொம்ப நல்ல காரியம் செஞ்சிட்ட செல்லம்.. ஒம்பேரு சொல்லி எம்பேத்தி வாழணும்"

"அதுக்கு இனி ஒரு கொறயும் வராது சாமி"

அவள் தெருவில் இறங்கி நடந்த போது நேரம் விடிந்திருந்தது! சனங்கள் நடமாடத் துவங்கியிருந்தனர். முற்றம் தெளிப்பதும், தெருக்குழாய்க்குக் குடத்தோடு வருவதுமாய் தேவமார்ப் பொம்பளைகள் எதிர்ப்பட்டனர். ஆம்பளைகள் கடை கண்ணிக்குப் போவதும், காட்டுச் சோலிக்குப் போவதுமாய் இருந்தனர்.

எதிரே வந்த ஆம்பளைகளுக்கு எல்லாம் வழக்கம் போல் அவள் வணக்கம் சொல்லிக் கொண்டு வந்தாள். உடல் குறுகி உள்ளம் உருகிச் சொல்லும் அடிமை வணக்கங்கள். "வணக்கம்ய்யா.. வணக்கம் சாமி"

அவள் கையெடுத்துக் கும்பிடு போட்டவர்களில் அநேகம்பேர் அந்த மறக்குடியிலுள்ள இளவட்டங்களாகவே இருந்தனர். அதுவும் அவளின் கைதொட்டுப் பிறந்தவர்கள். அவர்களில் யாரும் அவளுக்குப் பதில் வணக்கம் போடவில்லை என்பதே உண்மையாயிருந்தது இப்போது.●

*புதியதடம் இதழ் எண் 8*

இரட்டைமலை சீனிவாசன் கட்டுரையில்

*திருத்தம் 1* திராவிட இயக்க வரலாற்றை தொகுக்கத்தக்கவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள சாத்தான்குளம் அ.ராகவன் முன்பே மரணமடைந்து விட்டார்.

*திருத்தம் 2* 16-ம் பக்கம் 6-ம் பத்தியில் 4-வது வரியில் ஆண்டு 1851 என்று இருப்பதை 1891 என்று திருத்தி வாசிக்கவும்.

*தலையங்கத்தில்...*

பிற்போக்கு இதழ்கள் வரிசையில் காலக்குறி இதழ் தவறுதலாக இடம்பெற்று விட்டது. வருந்துகிறோம்.

வாசகர்கள் சிரமத்திற்கு மன்னிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

நூல் விமர்சனம்

# பலி ஆடுகள்

தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டிருக்கும் இந்த மக்களுக்கு கூறுவதெல்லாம் இது ஒன்றுதான்... சிங்கங்களாக இருங்கள்! இந்துக்கள் தங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்பதற்காக சாமிக்கு ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள்.... சிங்கங்களை அல்ல. -அம்பேத்கார். (பலியாடுகள் பக். 36)

நாடகம் என்பது ஒரு நிகழ்த்து கலை, அதனை எழுத்து பிரதியாக வாசிப்பது ஒரு நூதன அனுபவம். சமூகத்தில் ஒரு அரசியல் வேலையையும் பேராட்டவுணர்வையும் முன் வைத்து இயங்கும் நாடகப்பிரதிகள் புத்தக வடிவம் பெறுகின்ற பொழுது வரலாற்றிற்கு எதிரான குரலையும், விமர்சனத்தையும், கூடவே ஒரு எதிர் வரலாற்றையும் எழுதிச் செல்லும் ஒரு சமூக ஆவணமாக ஆகின்றன. உழைக்கும் மக்களின் கலை வடிவங்களை வரலாற்றாக்குகின்ற தற்சூழலில் குணசேகரனின் பணி முக்கியத்துவம் உடையன இவர் தொகுத்த நாட்டார் பாடல்கள். கலாச்சார ஆய்வுகள் உள்ளிட்ட இன்றைய அவரது நாடக தொகுதி ஈராக நம் அரசியல் சூழலின் முன் தேவையும் ஆகும்.

சாதிய வன்கொடுமைகள் வரலாற்றின் பக்கங்களால் நியாயப்படுத்தப்பட்டு, அதுவே வரலாற்றாக்கப்படுகிற நம் தமிழ் வாழ்வில், (காட்பாடி, தாமிரபரணி, சிதம்பரம் அதிகாரத்துவ பலியிடங்கள்) அதற்கெதிரான கலகங்களும் வரலாற்றைக் கலைத்து போடவும், புதிய மாற்று கலை வடிவங்களை உடல் உழைப்பு மக்களின் வாழ்வினூடாக மீட்டெடுக்கவும் வேண்டியது இன்று நம். முன் உள்ள அரசியல் கடமையாகும். மொழி வழியிலான அனைத்துப் படைப்புகளும் சாதிய மேலாதிக்க கருத்தியலை கொண்டிருப்பதையும் அனைத்து சமூக வடிவங்களும் (போலீஸ், ராணுவம், நீதித்துறை )மக்களுக்கு எதிராக உள்ளதனையும் தலித் சிந்தனையாளர்களும் விமர்சகர்களும் வெளிச்சம் போட்டு காட்டி வருகின்றனர் ஆக, கலை வடிவங்கள் அனைத்தும் சாதிய மேலாண்மை கொண்டதாகிறது. நாடகம் ஆதிமனிதனின் முதல் வெளிப்பாடு. உழைக்கும் மனிதன் ஓய்வு வேளையில் கூடி, நிகழ்த்தின கூட்டுணர்வின் கவித்துவம், நாடகம் நிகழ்த்துகலை என்பதால், நேரடியாகவும் பார்வையாளர்களை சலனமுறவும் தூண்டுகிறது தற்சூழலில் நாடகம் என்றால் தொலைக்காட்சி வழியே சப்பட்டையான காட்சிபடுத்தல் கொண்டு ஜடக்குரலில் பேசுகின்ற வறண்ட காட்சித் துணுக்குகளும், பழைய என்கிற ராஜா ராணி கதைகளும் நினைவில் அலையும் வண்ணம் ஊடகங்கள் மக்களை மூடியுள்ளன. மாற்று அரங்குக்கான புதிய குரல்கள் பல்வேறு வகையில் முயன்றும், மக்களுக்கான அரங்கை நிர்மாணிப்பது என்பதும் இன்றைய அரசியல் நடவடிக்கை ஆகும். நம் நிலத்திற்கு வெளியே, பாதல் சர்க்கார், சப்தர் ஹாஸ்மி. அகஸ்டோ போவால் என சிலரை குறிப்பிடலாம். தமிழில் மாற்று அரங்கு என்பது இறுகின காட்சி படிமங்களோடு, குளிரூட்டப்பட்ட அரங்குகளில் அறிவுஜிவிகள் மெல்லுகின்ற தத்துவ சூயிங்கங்களான வேளையில் கே.ஏ.கே யின் நாடகம் அதிகாரத்துவத்தின் மீதும், மரபு அறிவுஜிவிகள் மீதும் விழும் சரியான சாட்டையடி. விஞ்ஞானம் வளர்ந்தும் திரைப்படங்கள் தோன்றியும் நாம் காட்சிரீதியாக சிந்திக்க துவங்கியிருக்கிறோமா என்பது சந்தேகம்தான். ஆயினும் பின் நெடுங்காலமாக நாடகம் மக்களிடையே புழங்கி வந்துள்ளது தலித் சிந்தனை வழியான மாற்று அரங்கை நிர்மாணிப்பதிலும், வரலாற்றை நாடகம் ஆக்குவதிலும் "பலி ஆடுகள் "குறிப்பிட்ட வகைமையானது.

இன்றைய நமது சூழலில் சுற்றுசூழல் சிந்தனைகள, பெண் விடுதலை, உழைக்கும் மக்கள் பிரச்சனைகள, தனிமனித உரிமைகள், அதிகாரத்துவ 'போக்குகள், விவசாயம், அனைத்தும் தலித் சிந்தனையை மையமாகக் கொண்டே ஆய்வு செய்யப்பட வேண்டும் ஏனெனில் எந்த மனிதன் மண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளானோ அவனே பண்பாட்டை நிறுவுவதற்கு முழு உரிமையும் உடையவன். இவைகளையும் கவனத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ள "பாறையைப் பிளந்து கொண்டு" மலைவாழ் மக்கள், மலைச்சூழலை காலனியம் வந்தேகியதை மிகவும் காத்திரமாய் பேசுகிறது. மேலும் "அறிகுறி" எளிய முறையில் கல்விச்சூழலில் சாதிய பிரச்சனை சமூக, அரசியல் தன்மையுடன் பரந்துள்ளது என்பதை குறியீடாய் சுட்டுகிறது. "கனவுலகவாசி" நாடக வெளியில் வந்து பெரிதும் கவனம் பெற்றது. பெண்கள் மீதான போலீஸ் வன்கொடூரம் குறித்து "தொட்டில் தொடங்கி..." முன்வைக்கிறது. இன்றும் காவல் நிலையங்களில் ஓநாய் கூட்டங்களால் குதறப்படுகின்ற செய்திகள் வந்தவண்ணம் இருக்கிறது. இந்தஅவலச் சூழலை கண்ணீருடன் நம்முன் விமர்சனத்திற்கு வைக்கும் "தொட்டில் தொடங்கி..." "பல ஆடுகளை" போலவே பெண் போராட்டத்திற்கான பிரக்ஞையை உட்கொண்டு நம்மை விழிக்கச் செய்கிறது. அவரது வார்த்தைகளிலேயே சொல்லுவதென்றால்....

பூர்வ குடிகளை அழித்தும் பெரும் கலாச்சாரங்கள் பரவலாக்கப்படுவதும், பூர்வகுடிகள் அடிமையாக்கப்பட்டு வேறுகலாச்சாரத்தின் கீழ் நசுக்கப்படுவதும் உலக வரலாற்றை உருவாக்கிய வன்முறை. ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் நிலம் பறிக்கப்படுவதும், கலாச்சாரமும், நம்பிக்கைகளும் பறிக்கப்படுவதும் ஒன்றாகவே நடந்து வந்திருக்கிறது.

மாறாக, இதற்கு எதிரான எதிர்ப்புகளும் தொடர்ந்து செயற்பட்டபடியே உள்ளன. வெளியேறி விட்டவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் வேறு அடையாளத்துடன் உள்ளே நுழையும்போது ரத்தப்பழி தீர்க்கப்படுகிறது. பாறைகளிலும், மரங்களிலும் மறைந்திருக்கிறது அழிக்கப்பட்டவர்களின் கோபமும், தாபமும., ஆட்டமும் பாட்டும் அழிக்கப்பட்ட சந்ததியினருக்கான வெறித்தீர்ப்பாக இருக்கலாம். ஆயுதங்களின் பாதுகாப்பையும், அரசியல் பேரதிகாரங்களையும் மீறி ஒரு பெண்ணின் பார்வை கூடத் தனது இன எதிரிகளை பொசுக்கிவிடலாம். எதிர்ப்புக்கு எத்தனையோ வடிவங்கள். கொடுமைக்கு எதிராகப்


படிப்பகம்

www.padippakam.com

பிறக்கின்றன தாபங்கள். புதைக்கப்பட்டால் என்ன? சாகாத விதைகள் உயிர்த்துடிப்புடன் முளைக்கும் பாறைகளையும் பிளந்து கொண்டு... (பாறைகளைப் பிளந்து கொண்டு, பக்-62) தலித்திய மாற்றுஅரங்குக்கான குரலை இவரில் கேட்க முடிகிறது. KAKயின் நாடகங்களை முழுமையாக வாசிக்கின்ற பொழுது தமிழ் தலித் மக்களின் வாழ்வும், அதிகாரத்துவத்திற்கு எதிரான போராட்டக் குரலையும் ஒரு எதிர் வரலாற்றுக் குரலையும்கேட்க முடிகிறது. இனி "பலி ஆடுகள்" மற்றும் "தொட்டில் தொடங்கி" போன்ற வகை நாடகங்களில் இருந்துதான் தலித்திய சிந்தனைக்கான புதிய அரங்கு வடிவங்களை மேற்கொள்ள வேண்டும்.

- ஹவி ●

பலி ஆடுகள்
(அரங்க நாடகங்களின் தொகுப்பு)
ஆசிரியர்: கே. ஏ. குணசேகரன்.
பக்கம் 100. விலை ரூ 65/-
நவஜோதி பதிப்பகம்,
20 பிரான்சுவா தவீன் வீதி,
பத்மினி நகர்,
புதுச்சேரி -12

# கவர்னர் பெத்தா

தோப்பில் முகமது மீரானின் கதைத் தொகுப்பு படிக்கிறோம் என்னும் நினைவோடு படிக்க ஆரம்பித்து (இதுவரை அவருடையது ஒன்றும் படிக்கவில்லை) சிறிது நேரத்திலேயே இது அதுவல்ல என்ற உணர்வு தட்டியது. ஒருமுறை தோப்பில் முகமதுவின், பத்திரிகையில் வெளியான ஒருசிறு கதையை வாசிக்க ஆரம்பித்த போதே அலுப்புத் தட்டிய அவரின் நடையால் மூடிவைத்து விட்டேன். ஆனால் மீரான் மைதீன் நம்பிக்கையூட்டும் இளம் படைப்பாளி. தெளிவான வட்டார நடை, பரிச்சையமுள்ளவர்களுக்கு சுவாரசியம் அளிக்கக் கூடியது. மொத்தம் பத்து சிறுகதைகளை கொண்ட ஒருசின்னஞ்சிறிய தொகுப்பு கவர்னர் பெத்தா.

கேட்டலுக்கு ஆளற்றபோது ஏற்படும் நிர்க்கதியின் விளிம்பில் வாசகனையும் நின்று நிதானிக்க வைக்கும் *அசன் கண்ணாப்பாவின்* எழுபது ஆண்டு அனுபவச் செறிவு கதைக்குள் இல்லையெனினும் தனது வடிகாலை டிவி பெட்டி திருடிக் கொண்ட விஞ்ஞானப் புதுமைகளின் முன்பு வயதானவர்கள் கொஞ்சம் இடைவெளிவிட்டு நின்று விடக்கூடிய அவலம் தனிமனித அவசம்.

பெரியவர்களின் குழந்தைமையை (Childish) சிறியவர்களின் மூலம் வெளிக்கொண்டு வரும் *ஓட்டு* சிறுகதை இன்றைய நடைமுறை அரசியலின் பிம்பங்களாக நம்மை அச்சுறுத்துகின்றன - ஒரு யுத்தக் களம் போல-

ஆத்தங்கரை பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது *தம்பிக்குட்டியை* யும் வீட்டுக்கு அழைத்துப் போகும் ஆதங்கம் நமக்கும் ஏற்படுகிறது. மதங்களுக்குள் இருக்கும் மூன்றாம் தர விசுவாசிகளின் மாந்திரீக நம்பிக்கை இசுலாத்துக்குள்ளும் இல்லாமல் இல்லை என்ற செய்தியை எதார்த்தத்துடன் சொல்லும் *தங்கக் கால்.* அதே போல் யூசுப்புக்கு பேய் பிடித்த விசயமும் ஒரு பீடி வலிக்கிற நேரத்திற்குள் சொல்லி முடிக்க வேண்டிய செய்தி.

வெகு எதார்த்தமாக நம் மனதுக்குள் உட்கார்ந்து கொண்டு விடும் *சம்மந்தக்குடியை* அசுமாவிற்கு போலவே, நினைக்கும் போதே குமட்டிக் கொண்டு வருகிறது.

இசுலாமியருக்கு உள்ளேயும் இருக்கும் அந்தஸ்த்தின் படித்தரம் *டிராப்ட் அகமது* கதையில் தலையைக் குனியுங்கோ என்று ஹமீது சாயிபு சொல்லும் போது எதுவாக இருந்தாலும் பணத்தின் மேல் கட்டப்பட்ட சமுதாய அந்தஸ்த்து எங்கும் பேணப்படுவது பிடிபடுகிறது

கவர்னர், பீர்மாவுக்கு கை கொடுக்கும் போது, தன் அந்தஸ்த்தும் ஏறிவிட்டது போல, தானும் படிக்கவைக்கப்பட்டிருந்தால் இப்படி ஒரு பெரிய ஆளாகியிருப்பேனே என்ற பீர்மா வின் ஆதங்கமும்- பெண்களின் (இசுலாத்) கல்வி பற்றிய ஒரு புதிய வெளிச்சத்தை பழைய தலைமுறையின் வாயிலாகவே சொல்ல வைத்திருக்கும் *கவர்னர் பெத்தா* கதை குறிப்பிடப் படவேண்டியது தான்.

*பெஞ்சி* வருமானம் போறாத ஒரு மதரசாவின் கதை. *ரோஜாப்பூ கைத்துண்டு* -ஒரு காதல் கதையாகச் சொல்லப்படுகிறது. இக்கதை, கதை சொல்லியின், பெண்களுக்கு கொடுக்கும் இடத்தை நிர்தாட்சண்யமாக நிர்ணயிக்கும் ஒரு கதை. இதில் கதைசொல்லி 'கதையை இதோடு விட்டு விடுகிறேன், இப்போது வரை அவள் தந்த ரோஜாப்பூ கைத்துண்டும், கொஞ்சம் நினைவுகளும் என் வசமாகிக் கிடக்கிறது' - என்று தனக்குள்ளே பெண்களைப் பற்றி வடிகட்டி வைத்துள்ள விசயத்தை வெளிப்படையாக சொல்ல தயங்குகிறார்- அல்லது தப்பிக்கிறார். இவர் பெண்களிடம் பலமான அடிபட்டு விழுந்தது மட்டும் நிஜம். தன் ஆணாதிக்க மனோபாவத்தை தன்னையறியாமலேயே தனக்குள் வைத்துக்கொண்டு இருக்கும் ஒரு பிற்போக்குத் தனம்தான்.

பியூலா, தன்னை அவன் காதலிக்கிறானா என்று வெளிப்படையாக கேட்கிறாள். 'ம்.. விரும்புகிறேன்.. ஆனால் காதல் கிடையாது' என மறுக்கிறான். எந்த ஒரு முன் முகாந்திரமும் இன்றி வேறு ஒருவர் மீது தன் அபிப்ராயத்தை திணிக்க முயல்வது அதிகார மனோபாவம், எந்த ஒரு அதகாரத்தையும் ஒரு அங்கீகாரம் வேண்டி(Out of inSecurity) ஏற்றுக் கொள்வது பெண்ணின் மனோபாவம். இந்த இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்வது, வாசகனை வசியப்படுத்த, சனரஞ்சக எழுத்தாளர்கள் கையாளும்

தொடர்ச்சி 24 ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# உரையாடல் தொடர்கிறது...

## மாதிரித்திரையரங்கு II குறித்து

**ஹவி**



02-டிசம்பர்-2000 அன்று மீண்டும் கடற்தீவு நகரான இராமேசுவரத்தில் மக்கள் திரைஅரங்குக்கு புதியதடம் நண்பர்கள் உதவியுடன் நிழல் திரைப்பட இயக்கத்தின் மூலமாக பிரதிமை விஸ்வாமித்திரன் ஒளிநாடா திரட்டித் தர, அரங்கம் கோடூர் .மகாலில் நேர் செய்யப்பட்டது.

திரையிடப்பட்ட திரைப்படங்கள் :

1. பேச மறுத்த சிறுவன் / குர்து மொழி / புனைவு (பெப் செம்போஹார்ட் / ஹாலந்து)
2. ஆர்.ஆர்.சீனிவாசனின் ஆவணப்படம் ஒன்று
3. சி.சுப்ரமணிய பாரதி / தமிழ்/ஆவணப்படம்/ 90நிமிடம் /அம்சன் குமார்
4. தெருவின் பாடல் /வங்காளம் /புனைவு /2 1/2 மணி /சத்ய ஜித்ரே
5. ஏழு சாமுராய் வீரர்கள்/ஜப்பான்/புனைவு/அகிரா குரோசவா

* * *

சென்ற அரங்கின் விமர்சனத் தொடர்ச்சியாக பல முகங்கள் மறைந்தும் பல புதிய முகங்கள் தங்களது விமர்சன பங்களிப்புடன் இணைந்திருந்தது, அரங்கைப் பலப்படுத்தியது. அரங்கின் உள்ளேயே ஜனநாயக மறுப்புக்குரல்களும், அதிகாரத்துவ கண்காணிப்பு இயந்திரங்களும் செயல்பட்டது. மேலும் தீவிர அரசியல் விமர்சனத் தளங்களின் தேவைக்கு அது இட்டுச் சென்றது. அவை உள் விமர்சனக் குரலாக இல்லாமல், ஆதிக்க குரலாக உருவெடுத்தது கண்டனத்திற்குறியது. எதையும் விமர்சனம் செய்யக்கூடாது என்பதும், செய்தால் மாற்று என்ன என்ற எதேச்சதிகார வன்முறை குரலாக அவை இறுகத் துவங்கின. இது போன்றவர்களாலும், இவை போன்ற சொல்லாடல்களும், ஜனநாயக ரீதியான திறந்த உரையாடல்களுக்கும், பண்பாட்டு செயல் தளங்களுக்கும் இடையூறாகவே இருக்கும் எனத்தெரிகிறது. சமூக அக்கறையுடன் மேலும் விமர்சனப் பூர்வமாக மக்களுடன் இணைந்து பணியாற்றுவது எவ்விதம் என்பதே நமது நிலைப்பாடு. மேலும் திரைக்கலையின் ஆதிக்க மையங்களை அழித்து மக்கள் வடிவமாக மாற்றமுறச் செய்யவும், அதனைப் பண்பாட்டுக் கருவியாக வளர்த்தெடுக்கவுமான முயற்சியில் இவை போன்ற ஆதிக்க குரல்கள் கடுமையான விமர்சனத்திற்குறியன.

துவக்கப்படமாக திரையிடப்பட்ட "பேச மறுத்த சிறுவன்" என்ற குர்து மொழிப்படம், குர்து இனப்போராட்டத்தை தொடர்ந்து கிராமத்திலிருந்து ஒரு குடும்பம் ஹாலந்துக்கு புலம் பெயர்வதும், அதைத் தொடர்ந்து கலாச்சார, மன நெருக்கடியான சமூக சிதைவுகளையும், வன்முறைகளையும் ஒரு குர்து சிறுவனின் பர்வையில் காட்சிப்பூர்வமாக அழுத்தமாக சொல்லிச் சென்றபடம். இதனையொட்டி இன்றைய தமிழ் புலம் பெயர் மக்களின் வாழ்வியல் சூழலோடு நெருங்கி சிந்திக்கவும், அலசவுமான அப்படம் பார்வையாளர்களின் கவனத்தைப் பெற்றது. அவரவருக்குள் புதைந்து கிடந்த அகதி - குடும்பம் சார்ந்த நிகழ்வுகளை மீள் ஞாபகம் கொள்ளவும், பரிசீலனை செய்யவும் உதவும் வகையில் இருந்தது. மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் அரசியல் பணி குறித்தும் மறைமுகமாக சுட்டிக்காட்டுவதாகவும் அப்படம் தனது பணியை செய்தது. ஆங்கில சொற்பதிவுகள் இடப்பட்டிருந்தும் அது அவ்வளவாக பார்வையாளர்களுக்கு உதவவில்லை என்றே சொல்லலாம். இதன் மூலமாக நாம் மீண்டும் மீண்டும் நினைவில் நிறுத்த வேண்டியது - பட இயக்கங்கள் தமிழ் சொற்பதிவுகளின் தேவை குறித்து சிந்திக்க வேண்டும் என்பதும், அதுதான் மக்களுக்கான அரசியல் பணியாக இணைவதற்கு உதவும் என்று உணர்கிறோம்.

தேனீர் விவாதங்களோடு, சீனிவாசனின் ஆவணப்படம் ஒன்று திரையிடப்பட்டு, சமூக வரலாற்று மௌனங்களை, விமர்சனங்கள் மூலமாக அரங்கில் சிறைப்பட்டன. பார்ப்பனீய - சநாதன கருத்தியல் வடிவங்கள் சமூக அக்கறையுள்ள நபர்கள் மீதும் கவிழ்ந்து விடுகின்றன என்பதற்கு சீனிவாசன் போன்றவர்களின் படங்கள் நமக்கு சாட்சி. ஆயினும் இந்த ஆவணப்படத்தின் சமூகத் தேவையை முன்னிட்டு, விமர்சனப்பூர்வமான, காத்திரமான குரல்களை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் உணர்கிறோம். திரைப்படம் தயாரிப்பது மட்டுமல்லாமல், சிறு இயக்கங்கள் மூலம் திரையிடுவதும் அரசியல் தன்மை உடையன என்பதனை இவ்வகை திரையிடல்கள் மூலம் உணர்கிறோம். இத்தேவையின் நீட்சியாக, இப்படங்களை தெருக்களிலும், முச்சந்திகளிலும் திரையிடுவது எவ்விதம் எனச் சிந்தக்க தூண்டுகிறது. இன்னும் இன்னும் ஆராய்கையில் விரிவு செய்து திரைக்கலையை ஜனநாயகப்படுத்த வேண்டிய தேவையையும் பொறுப்புணர்வையும் இதன் வழியே பெறுகிறோம்.

உணவு இடைவேளைக்குப்பின் சத்ய ஜித்ரே-யின் தெருவின் பாடல் (பாதேர் பாஞ்சாலி) திரையிடப்பட்டது. பாரதியின் கவிதையை படிக்காதவருக்கும் கூட சமூகத்தில் பரவியிருக்கும் பாரதி பிம்பம் போல, ரே-யின் படம் பார்க்காதவரையும் கூட ரே பற்றின செய்தி சென்று முடிந்துள்ளது. ரே-யின் இப்படம் வாழ்வியல் வறுமையை சித்தரிக்கும் விதத்தில் ஒரு இறுக்க மௌனத்தை பார்வையாளன் உள்ளே தள்ளிச் சேர்க்கும் அதே நேரத்தில்,


படிப்பகம்

www.padippakam.com

கவித்துவமான காட்சிப் படிமங்களையும் அவனுள் எழுப்புகின்றன. ரே-யின் இப்படத்தில் தென்பட்டது பார்ப்பனிய முகமானாலும் அதன் வறுமை துயரம் விமர்சன தயக்கத்தை அரங்கினுள் பரப்பிற்று. மட்டுமில்லாமல் மாற்றான திரைப்படம் குறித்த பார்வையாளனின் நுண்ணுனர்வுகள் மனம் சார்ந்து கிளரப்பட்டன எனலாம். வறுமை, குடும்பத்துள் கொண்டு சேர்த்த வன்முறை மற்றும் உறவு பிளவுகள் மனித நிலையின் அதிர்வுகள். ஆனால் அதே சமயம் அவ்வறுமை வெளியின் புற அரசியல், சமூக நிகழ்வுகள் இப்படத்துள் மௌனமாக்கப்பட்டுள்ளன. ஆகவே இப்படம் தன் தளத்துக்குள் மீண்டும் சுருங்கிப் போய்விடுகிறது.

மாலை தேனீர் இடைவேளைக்குப்பின் அம்சன் குமார் இயக்கிய சி.சுப்ரமணிய பாரதி என்ற கவிஞன் பாதியின் ஆவணப்படம் திரையிடப்பட்டது. ஆற்றொழுக்கான அதன் படக்கலவை நேர்த்தி அனைவரையும் இழுத்து வைத்தாலும், அதைவிட சமூக புனைவான "மகாகவி பாரதியார்" என்ற நாயக பிம்பமே ஈர்ப்புக் கொள்ளும் சூத்திரமாய் நின்றது. பார்ப்பனிய சொல்லாடல்கள் நிறைந்த இப்படமே நிகழ்வின் ஆதாரப்புள்ளியாக மாறி, தாமிரபரணி அரசுக்கொலைகள் குறித்தும், பார்ப்பனீய சமூக வடிவங்கள் குறித்தும், பாரதியின் இந்துத்துவ சார்பு குறித்தும் பெரும் விவாதங்கள் கிளம்பிற்று. நாயக பிம்ப புனைவுகளால் இறுகி, சீரழிந்து போன பார்ப்பனிய சமூக அடையாளங்களை தகர்த்து எறிவதில் மக்கள் அக்கறையுள்ள இயக்கங்கள் இன்னும் கூடுதல் கூர்மையோடு செயல்பட வேண்டும் என்பதை இவ்வகை விவாதங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. ஏறத்தாழ அனைவரும் இவ்விரு நிகழ்வுகள் குறித்தும் கடும் விமர்சனம் கொண்டனர். பாரதியை நாயகனாக சித்தரித்த அரசியல், வரலாற்று பின்புலங்கள், பாரதிக்கு முன்பே சாதி வேறுபாடுகள் குறித்துப் பேசின வரலாற்றுக் கவிஞர்கள், தலித்தியத்தால் சமூகம் அதிர்வுறும் விடுதலைக்குரல்கள் என அரசியலை நோக்கி தீவிரமாக நகர்ந்தது. காட்சி ஊடகங்களின் அரசியல், எழுத்து ஊடகங்களின் பணி குறித்து மீண்டும் விவாதங்களைத் தளர்த்தி, வழி செய்து, ஒருங்கினைத்து, தொகுத்து ஆய்வு செய்ய நண்பர்கள் முயன்றனர். சீனிவாசனின் ஆவணப்படத்திற்கும், அம்சன் குமாரின் பாரதி ஆவணப்படத்திற்குமான உள்ளடக்க முரன்பாடுகளே, இன்றைய சமூக நிலை யதார்த்தங்களாக விரிவடைந்து, அரங்கினுள் விமர்சன தரவுகளை ஏற்படுத்திக் கொடுத்தன. பாரதியின் மீது அப்பியிருந்த "மகாகவி" என்கிற புனைவை தோலுக்கிற நேரத்தில் எல்லாம் பலர் பதற்றமடைந்தனர். பாரதி புதிதாக என்ன சொன்னார் என்ற கேள்வி வரலாற்று மௌனமே. பாரதியின் அனைத்துச் சிந்தனைபாடுகளும் அவருக்கு முன்பே சமூகத்தில் பல பேரால் முன்மொழியப்பட்டனவே என்ற தோழர் ஒருவரின் துல்லியமான வரலாற்று நினைவு விவாதம் - விமர்சனத்தை சரியான தளத்திற்கு நகர்த்திச் சென்றது.

இறுதியில் அகிரா குரோசாவா என்கிற ஜப்பானிய இயக்குனரின் "ஏழு சாமுராய் வீரர்கள்" திரையிடப்பட்டும், அரங்கின் நேரமின்மையால் இடையிலேயே நிறுத்தப்பட்டது. இது கால ரீதியாக சரியாக இயங்குவது குறித்த அனுபவத்தை தந்தது. இவ்வரங்கை நேர்த்தியாக நேர் செய்ய உதவியதில் உணவு ஏற்பாடு செய்த நண்பர்கள், தேனீர் ஏற்பாடு செய்த நண்பர்கள், மற்றும் மனேஷ், அறிமுகக் குறிப்புகள் வாசித்து பார்வையாளருக்கு வேற்றுமொழி படம் பார்ப்பதில் கூடுதலாக சிறு உதவியாக இருந்த ஸ்டாலின், புதியதடம், மேகவண்ணன், குமரன்தாசு, கருணாகரன், கலை இலக்கிய பெருமன்ற தோழர்கள் இன்னும் பெயர் தெரிந்த, தெரியாத நண்பர்களின் உழைப்பும் பங்களிப்பும் இன்றி இவ்வரங்கு சாத்தியமாகி இருக்காது என்பதை குறிப்பிட வேண்டும்.

பின் குறிப்புகள் : 1.அதிர்வுகள் என்ற தலைப்பில் சில மொழியாக்க கவிதைகளை விஸ்வாமித்திரன் அரங்கில் சுவரொட்டியிருந்தார்.

2.தொரட்டி "சிற்றிதழ் - தொகுப்பிதழ்" ஸ்டாலினால் பார்வையாளர்களின் வாசிப்புக்குத் தரப்பட்டது.

3.புதிய தடம் உட்பட சினிமா பற்றின விமர்சனப் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

## சிதறும் சிரிப்பு

"ஏங்க
இந்த ஏனத்துல ஊத்துங்க"

"யண்ணா....யண்ணா....
எனக்கு கொஞ்சம் கூழுண்ணா"
"இந்த குண்டான்ல ஊத்துலே"
"யப்பா....ராசா....
கஞ்சி கொஞ்சம் ஊத்துப்பா"
மாரியம்மன் கோயிலின்
மகோன்னத திருவிழாவில்
என் மக்கள்.

கஞ்சிக்கும் கூழுக்கும்
கையேந்திக் கெஞ்ச
மாரியம்மா மதம்
மமதையில் சிரிக்கிறது!
இல்லாதவர்களாயிருந்த
ஏழைகளைப்
பிச்சைகாரர்களாக்கிவிட்ட
பெருமையில்
கல்
கைகொட்டிச் சிரிக்கிறது!

ஏந்தும் கரங்கள்
ஒருநாளில் எழும்
சிரிக்கும் கல் விரைவில்
சிதறி விழும்.

**–அன்பாதவன்**

வெளிவர இருக்கும் 'செம்பழுப்பாய்ச் சூரியன்' தொகுப்பிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

# தலித் விருதுகள்

## க.சுப்பையா

உலகின் தலைசிறந்த தத்துவ மேதைகளில் ஒருவர் பெட்ரன்ட்ரசல். நான் ஏன் கிறித்துவனல்ல? (Why I am not Christin) என்கிற நூலை எழுதி ஏசு கிறிஸ்துவை விசாரணைக் கூண்டில் ஏற்றினார். குலை நடுங்கிப்போன ஏகாதிபத்திய வாதிகள் ரசலைச் சரிக்கட்ட இரண்டுமுறை அவருக்கு நோபல் பரிசு வழங்கினார்கள். என் முடிவில் மாற்றம் இல்லையென்று நோபல் பரிசை ஏற்க மறுத்து விட்டார். சிலிக்குயில் என அழைக்கப்படும் பாப்லோ நெருடா விற்கு ஒருமுறை நோபல் பரிசு வழங்கப்பட்டது. எனது விடுதலைச் சிந்தனையை காயடிக்கவே நோபல் பரிசு வழங்கப்படுகிறது என்று ஏகாதிபத்தியவாதிகளை அம்பலப்படுத்தி நெருடா நோபல் பரிசை நிராகரித்து விட்டார்.

உலகைச் சுரண்டுகிற ஏகாதிபத்திய சக்திகளால் உயர்வாகக் கருதப்படும் உலகின் மிக உயர்ந்த விருதே நோபல் பரிசு. இப்பரிசை ஏற்கமறுத்த பெட்ரண்ட்ரசல் உலகப்புகழ் பெற்ற நாத்திகர். பேராசான் லெனினை மிகவும் நேசித்த சிலி நாட்டின் தேசியக் கவிஞர் பாப்லோ நெருடா. இவ்விருவரும் நோபல் பரிசை ஏற்க மறுத்ததன் காரணம் எளிதானது. மக்களை ஒடுக்கு கிற, சுரண்டுகிற அதிகார வர்க்கத்தினரும் அவர்களுடன் சமரசம் செய்து கொள்கிற பிழைப்புவாதிகளும் வழங்குகிற நோபல் பரிசு உள்ளிட்ட பிற எந்த ஒரு பரிசும் அல்லது விருதும் மக்களின் விடுதலை என்கின்ற உன்னத லட்சியத்திற்கான இலக்கியங்களை படைக்கும் சிந்தனையாளர்களுக்கு மயிறுக்குச் சமமானவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

உரிமைக்காகப் போராடும் மக்களை சுட்டுக் கொல்லுகிற போலீசுக்கும், இராணுவத்தினருக்கும் ஆளும் வர்க்க பாசிஸ்டுகள் விருதுகள் வழங்கி கவுரவிக்கின்றனர். அரசியல் எதிரிகளை அழித்தொழிக்கிற ரௌடிகளுக்கு கட்சியின் முக்கியப் பதவிகளை ஓட்டுக் கட்சித் தலைவர்கள் பரிசாக வழங்குகின்றனர். தொழிற்சங்கப் போராட்டங்களில் முதாலாளிகளுக்கு ஆதரவாகப் செயல்படும் கருங்காலிகளுக்கு உயர்பதவி மற்றும் கூடுதல் சம்பளம் வழங்கி அவர்களை விசுவாச ஊழியர்கள் என்று முதலாளி கௌரவிக்கிறான். தேசிய இனங்களின் பன்பாட்டை சிதைத்தும், இந்துமதப் பண்பாட்டை உயர்த்திப் பிடித்தும் எழுதுகிற பிழைப்புவாத இலக்கிய கோமாளிகளுக்கு சாகித்ய அகாதமி, ஞானபீட விருது போன்றவற்றை இந்திய பார்ப்பன அரசு வழங்கி கௌரவிக்கிறது. இதிகாச, புராண மலக்குட்டைகளில் மூழ்கித்திளைக்கும் பட்டிமன்ற கல்லூரிப் பேராசிரிய கூலிப் பேச்சாளர்களுக்கு சித்தர், பித்தர், ஞானி, யோனி என்கிற விருதுகளை பழமைவாத சீர்திருத்த அமைப்புகள் வழங்குகின்றன.

இந்த வகையில் பரிசு கொடுப்பவர்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது சாதிய ஒடுக்குமுறை உள்ளிட்ட சுரண்டல் அமைப்பை உறுதியாகக் கட்டிக்காப்பது மற்றும் அவற்றை சேதாரமில்லாமல் தமது சந்ததியினருக்கு பழைய ஒழுங்கை விட்டுச் செல்வது என்கிற நோக்கில் இதற்கான கருத்தியல் தளத்தில் இயங்கும் சந்தர்ப்பவாத, பிழைப்புவாதச் சக்திகளுக்கு பரிசுகளும், விருதுகளும் வழங்கி கவுரவிப்பது என்பதாகும். பரிசு மற்றும் விருது பெருபவர்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது முதலாளியச் சிந்தனை யிலிருந்து மீள முடியாமலும், தனிநபர் சாகச மற்றும் கவர்ச்சி மாயைகளில் மயங்கிக் கிடப்பதும் பொறுக்கி அரசியல் வழிப்பட்ட சமரசப் போக்குகளில் உடன்படுவதும், உயர்ந்த லட்சியத்திற்காக தன்னை அர்ப்பணம் செய்து கொள்ள முடியாத பலவீனம் போன்றவைகளே காரணமாகும். இந்த இரண்டு பிரிவினருக்கமான ஒற்றுமை என்பது ஒடுக்குகிறவர்கள் அதனை நியாயப்படுத்துகிறவர்கள் என்பதாகும். வேற்றுமை என்பது தமக்குறிய தளங்களில் நின்று வெவ்வேறு நிலைகளில் தமது துரோகங்களைச் செய்கிறார்கள் என்பதாகும்.

கடந்த இருபது ஆண்டுகளில் ஆளும் வர்க்கம் வழங்குகிற அரசின் உ்யர் விருதுகள் கொடுக்கப் படுவதில்லை. மாறாக வாங்கப்படுகிறது. விருது கொடுப்பதற்கு அதனைப் பெறுபவரின் நெடிய உழைப்பும், அதற்குரிய தரவுகளும் தேவைப்படுகிறது. வாங்குவதற்கோ கொடுப்பவர்களின் கருணையே போதுமானது. தாம் நிற்கும் தளத்தில் உள்ள சக மனிதர்களை அதிகாரம் செலுத்துவதற்கு விருது வாங்குவது சிலருக்கு அவசியமாகிறது. விருது பெற்றவர்கள் விருது பெறாதவர்களுக்கு குருவாகவும், விருது பெறாதவர்கள் விருது பெற்றவர்களுக்கு சீடராகவும் நடந்து கொள்ள வேண்டுமென்கிற எழுதப்படாத நடைமுறை இலக்கிய மேடைகளில் தினந்தோறும் அரங்கேறிவருகிறது. விருது பெற்றவர்கள் அவ்விருதை ஓர் ஆயுதமாக பயன்படுத்தி அரசின் சலுகைகளை மிகுதியாக அனுபவிப்பதில் பெரும் சாதனையே படைத்து வருகிறார்கள். அரசு விழாக்கள், வெளிநாட்டுப்பயணம் போன்றவற்றில் முன்னுரிமை பெறுகிறார்கள். தற்காலத்தில் விருது பெற விரும்புகிறவர்கள் அதிகம் உழைக்க வேண்டியதில்லை என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாறாக இரண்டு வழிகளைப் பின்பற்றினால் விருது பெற்று விடலாம் என்கிற புதியவழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதல் வழி அதிகார வர்க்கத்தின் செல்லப்பிள்ளைகளாகவும், ஊது குழல்களாகவும் நடந்து கொள்வது பிரிதொரு வழி அதிகார வர்க்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டு கொள்ளாமல் மௌனத்தை கடைப்பிடிக்கும் ஊமைகளாக நடந்து கொள்வது.

பரிசு அல்லது விருது வழங்குவது ஒரு தொழிலாளியை அல்லது இலக்கியவாதியை அவனுடைய தளத்தில் அவன் மேலும் கூடுதலான சாதனைகள் நிகழ்த்துவதற்கு அளிக்கப்படும் உற்சாகம் என்பதான ஓர் கருத்து முன்வைக்கப்படுகிறது. இக்கருத்து மிகவும் தவறானது. உற்பத்தி நடப்பது மக்களின் தேவைக்காக என்றில்லாமல் முதலாளிகளின் லாபத்திற்காக என்கிற சமூக அமைப்பில் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படுவதற்கு வர்த்தக பின்னணி உண்டு. முதலாளித்துவச் சமூக அமைப்பில் ஒரு தொழிலாளிக்கு பரிசு வழங்குவது அவனது உழைப்பின் உபரியிலிருந்து முதலாளி பெரும் லாபத்தில்

www.padippakam.com

கண்ணுக்குத் தெரியாதஅற்பமான பகுதியாகும். இதைப்போலவே ஓர் பிழைப்பு வாத இலக்கிய வாதிக்கு வழங்கும் விருது என்பது சமூக ஒடுக்கு முறையை வெளிப்படுத்தும் அறிவுக்கூர்மையை முனை மழுங்கச் செய்வதற்காக வழங்கப்படும் கூலி என்பதாகும்.

இன்றைய அநீதியான சமூக அமைப்பில் முற்போக்கான எத்தகைய ஒரு படைப்பும் அதற்குரியவரை கௌரவப்படுத்துவதற்குரியதல்ல. மாறாக அப்படைப்பின் மூலம் உழைக்கும் மக்களை அணிதிரட்டவும், எதிரிகளுடன் மோதவும், தமது சந்ததியினரின் சுதந்திரமான எதிர்கால வாழ்விற்கு செய்யப்படும் தியாகம் என்றே கருதப்பட வேண்டும். இந்த நிலையில் தலித்துகள் மத்தியில் பரிசு கொடுப்பதும், விருது பெறுவதும் ஆகிய புதிய போக்குகள் நடைபெற்று வருகிறது. அடிப்படையில் தியாகங்களை மதிப்பதும், கௌரவிப்பதும் ஏற்கக் கூடியதுதான். என்றாலும் வடிவம் உள்ளடக்கம் ஆகியவற்றில் முதலாளிய வகைகளை தலித்துகள் பின்பற்றும் போக்கைத் தவிர்க்க வேண்டும்.

தலித்துகள் மத்தியில் விருது வழங்கும் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்க வேண்டும். அவைகள் இழப்பை உள்ளிட்ட தியாகங்களின் அடிப்படையில் அமைய வேண்டும். தலித்துகளுக்கு விருது வழங்கும் தகுதிநிறுவனங்களுக்கு கிடையாது. மக்கள் திரள் இல்லாது வெறுமனே பணத்தைச் சார்ந்து தனிமனிதர்களால் நடத்தப்படும்குழுக்களுக்கும் விருது வழங்கும் தகுதி கிடையாது.கருத்துப்பணியோடு களப்பணியிலும் பாடுகளை எதிர்கொண்டு காயப்பட்ட மக்கள் அமைப்புகளுக்கே தலித்துகளுக்கு விருது வழங்கும் தகுதி உண்டு. இந்த வகையில் கீழ்கண்ட லட்சியங்களின் அடிப்படையில் தலித் விருதுகளை வகைப்படுத்தலாம்.

* சேரிகளில் நெருப்பு வைக்கும் சாதி வெறியர்களின் கரங்களைத் துண்டிக்கும் தலித் போராளிகளுக்கு தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவு விருது வழங்கலாம்.
* பறையடிக்கச் சொல்லி பலாத்காரம் செய்யும் சாதிவெறியர்களோடு மோதும் தலித் போராளிகளுக்கு குறுங்குடி பாண்டியன் நினைவு விருது வழங்கலாம்.
* தலித் மக்களின் குலதெய்வ வழிபாட்டை தடுக்கும் சாதிவெறியர்களுடன் மோதி காயம்பட்ட தலித் போராளிகளுக்குஉஞ்சனை மற்றும் குறிஞ்சாக்குளம் தலித் தியாகிகள் நினைவு விருது வழங்கலாம்.
* தலித் மக்களின் கூலிப்போராட்டத்தை ஒடுக்கும்பண்ணைகளை கணக்குத் தீர்க்கும் தலித் போராளிகளுக்கு வெண்மணி மற்றும் பறையடிக்குப்பம் தலித் தியாகிகள்நினைவு விருது வழங்கலாம்.
* நில உரிமை கோரிப் போராடும் தலித்துகளைக் கொல்லும் சாதி வெறியர்களை ரத்தச்சேற்றில் நனைத்தெடுக்கும் தலித் போராளிகளுக்கு சென்னகரம்பட்டி தலித் தியாகிகள் நினைவு விருது வழங்கலாம்.
* கிராமங்களில் தலித் மக்களுக்கு தனி டம்ளர் வைக்கும் தேனீர் கடைகளை அடித்து நொருக்கும் தலித் போராளிகளுக்கு தோழர் பாலன் நினைவு விருது வழங்கலாம்.
* தலித் மக்களின் அரசியல் உரிமைகளைத் தடுக்கும்சாதி வெறியர்களை பழிவாங்கும் தலித் போராளிகளுக்கு மேலவளவு தியாகிகள் நினைவு விருது வழங்கலாம்.
* தலித் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்யும் காக்கிச்சட்டைகளின் ஆண்குறியை அறுத்தெறியும் தலித் போராளிகளுக்கு தளவாசல் தங்கம்மா நினைவு விருது வழங்கலாம்.
* பார்ப்பனிய நச்சிலக்கியத்திற்கெதிராய் ஒடுக்கப்பட்டோர் இலக்கியங்களை உயர்த்திப்பிடிக்கும் தலித் படைப்பாளிகளுக்கு தோழர் டேனியல் விருது வழங்கலாம்.
* இடஒதுக்கீடு மூலம் உயர்வு பெற்ற பண்ணைகள், பார்ப்பனர்கள் உள்ளிட்ட ஆதிக்கச் சாதியினருக்கு அடியாளாய், எடுபிடியாய், கைக்கூலியாய் சீரழிந்து தலித்துகளை பிரித்து நிறுத்தும் தலித் துரோகிகளை தூக்கிலிடும் தலித் போராளிகளுக்கு அறிஞர் அம்பேத்கார் நினைவு விருது வழங்கலாம்.

இத்தகைய விருதுகளே தலித் மக்களுக்கு பொருத்தமானவை. எதிரிகள் வழங்கும் விருதுகள் எமது செருப்புக்குச் சமமானவை. எதிரிகளிடம் விருது பெறும் தலித்துகளை வரலாறு முறையாகப் பதிவு செய்கிறது. துரோகிகளை தண்டிக்க வரலாறு நம் பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் நினைவுபடுத்தும். நம் பிள்ளைகள் தண்டணை வழங்குவார்கள். ■

---

பாரதிதாசனுக்கும் பாவேந்தர் என யாரும் பட்டம் கொடுக்கவில்லை அவரே தன்னை சொல்லிக்கொண்டார். 'நானொரு பாவேந்தன்' என பாட்டு ஒன்றில் அவரே சொல்கிறார் 'பில்கணீயம்' என்ற காவியத்தை தமிழில் 'புரட்சிக்கவி' என்று ஆக்கினார். உடனே பாரதிதாசனை புரட்சிக் கவிஞன் என்றும் அழைக்கத்தொடங்கினர்

வானம்பாடி இயக்கத்தை குறிப்பிடாமலும் தமிழில் எந்த இலக்கிய நிகழ்ச்சியும் நடக்க முடியாது என்ற சூழல் உருவாகிவிட்டது என்றார் ஒருவர். இதுவரை எந்தக் கூட்டத்திலும் வானம்பாடி பற்றி நான் பேசியதே இல்லை.

என்னை பஞ்சாங்கம் என்று அழைக்கிறார்கள் நான் பஞ்சாங்கம்தான் ஆனால் எனக்கும் எதையாவது உடைக்க வேண்டும், கிழிக்க வேண்டும் என்று தோன்றுகிறது

-ஞானக்கூத்தன்

(அமிர்தம் சூர்யாவின் கவிதை நூல் அறிமுக கூட்டத்தில்)

தினமணிக்கதிர் 4-2-2001

*டேய் ஞானக்கூத்தா!*

'மகாகவி' சுப்பிரமணிய பாரதி(கவிப்பேரரசு, சிற்றரசு, கவிக்கோ, பெரும்கவிக்கோ எல்லாம் இம்மலையின் முன் மடுக்கள்) 'தமிழ் தாத்தா' உ.வே சாமிநாதஅய்யர்(தமிழுக்கே தாத்தா!) 'கலைஞானி' கமலகாசன்(கலை உலகின் ஒரே ஞானி!) இவர்களுக்கெல்லாம் எப்பொழுது, எதற்காக எவரால் இப்பட்டங்கள் தரப்பட்டிருந்தாலும், மரியாதையாக இனி இக்கிரீடங்களை மெரினா கடற்கரையில் சமாதிகளோடு சமாதிகளாக குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஆணவம் இல்லாமல் விட்டு விடுதலையாகி நிற்கச்சொல். பாரதிதாசனை பாவேந்தர் என்றோ புரட்சிக் கவிஞர் என்றோ அல்ல கனக சுப்புரத்தினம் என்றே நாங்கள் சுயமரியாதையோடு இனி அழைத்துக் கொள்கிறோம்.

மணிக்கொடி, கசடதபற, கணையாழி கூடாரத்திற்கு எதிராக கருமருந்து செல்களை தூவியபடி உங்கள் உச்சி குடுமிகளுக்கு மேல் வட்டமடித்து பறந்து திரிந்த வானம்பாடி இயக்கத்தை குறிப்பிட்டு பேச உன்குருதியில் பச்சைத் துணிவு இருக்குமா என்ன? எங்களுக்கும் வருடா வருடம் போகிப் பண்டிகை வருகிறது. பழம் பஞ்சாங்கத்தையெல்லாம் கொழுத்த வேண்டும் என்றுதான் நினைக்கிறோம் ஆனாலும் நிச்சயம் ஒரு நாள் போகி கொண்டாடத்தான் போகிறோம் உடைக்கவோ கிழிக்கவோ இல்லை. கொளுத்தத்தான் எங்களுக்கு தோன்றுகிறது.

- கா. இளம்பரிதி



படிப்பகம்

www.padippakam.com

திரை விமர்சனம்

# ப்ரியமானவளே

**பெண்களின் பெயரால் – ஆண்களுக்காக ஆண்களால் நிகழ்த்தப்படும் கதையாடல்கள்**

சரத் டேனியல்

இன்றைய தமிழ்த்திரைப்படம் என்பவை தேர்வு செய்யப்பட்ட காட்சிகளின் ஒருவகைத் தொகுப்பே. யதார்த்தத்தில் நிகழ்ந்த அல்லது நிகழ வேண்டும் என தான் விரும்புகிற பல்வேறு சம்பவங்களை படைப்பாளி தனது விருப்பப்படி நம்முன் கோர்வையாக அடுக்கிக் காட்டும் காட்சிகளே திரைப்படம்.

படைப்பாளியின் சிந்தனையில் உள்ள கதையாடல்கள் பல்வேறு எதிர்வுகளும் இணைவுகளும் கொண்ட பாத்திரங்களின் உரையாடல்களாக காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்காட்சிகள் பார்வையாளர்களிடம் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள சிந்தனைகளுடன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியையோ சோகத்தையோ அல்லது படைப்பாளி விரும்பும் ஏதோவொரு நிலையை ஏற்படுத்தலாம்.அல்லது காட்சிப்பார்வையாளருக்கு உடன்பாடானதாய் இல்லாமல் முரண்பட்டு சிந்தனையைத் தூண்டலாம், வெறுப்போ எரிச்சலோ கோபமோ கூட ஏற்படுத்துவதாக அமையலாம். படைப்பாளி எதை எதிர்பார்த்து காட்சிகளை அடுக்கினாரோ அது பெரும்பான்மையான பார்வையாளருக்கு ஏற்பட்டு விட்டால் அது வெற்றிகரமான இயக்கம்-படம் எனக் கணக்கிடப்படும்.

தமிழக மக்கள் மத்தியில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்டு வந்துள்ள இந்துத்துவ சிந்தனை மரபிற்கு ஏற்பவும் அதேசமயம் சமூக இயக்கப்போக்கில் வரலாற்று ரீதியில் ஏற்பட்டு வருகின்ற மாறுதல்களை உள்வாங்கி (தனது நோக்கத்திற்கு) தேவைக்கு ஏற்ப கலந்தும் கொடுக்கும் போது பார்வையாளர்களின் கவனம் சிதறாமல் காட்சிகளில் பதிகிறது.

தமிழ்த்திரைப்படம் எதிர்வுகளாக நிறுத்தி விவாதித்து வரும் பல்வேறு அம்சங்களில் ஒன்று இந்தியப் பண்பாடு அந்நியப் (அய்ரோப்பிய) பண்பாடு என்பதுமாகும். நீண்ட காலமாக தொடருகிற இவ்விவாதம் காலத்திற்கு ஏற்ப மாறுதலடைந்து வந்துள்ளது. பட்டிக்கடா பட்டிணமா?-வில் போன்ற சூழல், நாயக நாயகியர், கதை, காட்சி ஆகியவை "படையப்பா"வில் சித்தரிக்கப்படவில்லை. அனைத்தும் மாறியுள்ளன. ஆனால் அதே எதிர்வு இந்தியப் (தமிழ்) பண்பாடு அய்ரோப்பிய பண்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த எதிர்வுகளில் மற்றொன்றும் கவனிக்கத்தக்கது. இந்தியப் பண்பாட்டின் பிரதிநிதியாக ஆணும் அதாவது கணவனும் அய்ரோப்பிய பண்பாட்டின் பிரதிநிதியாக பெண்ணும், அதாவது மனைவியும் நின்று விவாதிப்பதை பார்த்து வருகிறோம். பட்டிக்காடா பட்டிணமா?, சகலகலா வல்லவன், படையப்பா... என ஒரு பட்டியலே இதற்கு உதாரணமாக சொல்ல முடியும்.

இந்தப் பண்பாட்டு போராட்டம் அனைத்தும் தழுவிய தன்மையில் கட்டமைக்கப்படுவதில்லை. மாறாக படைப்பாளியின் பார்வை மற்றும் முன்தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் படைப்பாளி தான் விரும்பும் பண்பாட்டின் வெற்றிக்கும், வெறுக்கும் பண்பாட்டின் தோல்விக்கும் ஏற்ப வாதங்களை (காட்சிகளை) அடுக்குகிறார். படைப்பாளி என்பவர் முரண்பட்ட இருபண்பாடுகளுக்கும் அல்லது இருபண்பாடு -களின் முரண்பட்ட அம்சங்களுக்கும் தொடர்பில்லாத மூன்றாம் மனிதன் அல்ல. மாறாக ஒருபக்கத்தைச் சேர்ந்த அவரே மறுபக்கத்து பாத்திரங்களுக்குள்ளும் புகுந்து பேசுகிறார். இந்த உரையாடல் திரையில் முடிவற்றதல்ல, ஒன்றின் வெற்றியுடனும் மற்றதின் தோல்வியுடனும் உரையாடல் முடித்து வைக்கப்படுகிறது.

படைப்பாளி கொண்டுள்ள கருத்தாக்கம், அதே கருத்தாக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்ட பார்வையாளர் மற்றும் பலன் பெறுவோருக்கு இவ்வெற்றி மகிழ்ச்சியையும் எதிர்கருத்தினை கொண்டுள்ளவர்களுக்கு(மற்றதின் பக்கம் நிற்பவர்களுக்கு) வருத்தம்/ கோபத்தினை தோற்றுவிக்கலாம்.

ஆண்களின் ஆதிக்கத்தில் உள்ள தமிழ்த்திரை உலகில் ஆண் இயக்குனர்கள், கதைவசனகர்த்தாக்கள் பெண்களுக்காகவும் தாங்களே பேசிவருகிறார்கள். அப்படி சமீபத்தில் பேசிய படம் ப்ரியமானவளே. ஆனால் ஒரு மாறுதல். பட்டிக்காடா பட்டிணமா, சகலகலா வல்லவன், படையப்பா மாதிரியல்லாமல் அய்ரோப்பிய பண்பாட்டிற்காக பேசுபவனாக ஆணையும், இந்திய(தமிழ்) பண்பாட்டிற்காக பேசுபவளாக பெண்ணையும் இடம் மாற்றியுள்ளனர். அதாவது பெண்ணுக்காக ஆணையும், ஆணுக்காக பெண்ணையும் இடம் மாற்றி பேச வைத்துள்ளனர். பேச வைத்துள்ளனர்.

கதை : அமெரிக்காவில் கல்வி (பண்பாடு) கற்று திரும்பும் கதாநாயகன்தன் தகப்பனின் நெருக்குதல் காரணமாக "ஒரு வருட திருமண ஒப்பந்தத்திற்கு" பெண் தேடச் சொல்கிறான். ஏழைக் கதாநாயகி தன் குடும்பத்தில் அக்கா வாழாவெட்டியாக வீட்டில் இருப்பதனாலும், தன் தங்கை திருமணத்திற்கு முன்பே காதலித்து கருவுற்றிருப்பதனாலும், தம்பி வேலையின்றி இருப்பதனாலும் பாதிக்கப்பட்டுப் போன குடும்ப கௌரவத்தை (அதாவது ஆணாதிக்க நலனுக்காக கற்பிக்கப்படும் குடும்ப கௌரவத்தை) காக்கும் பொருட்டு நாயகனின் ஒருவருட திருமண வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு உடன்படுகிறாள்.

ஆனால் நாயகி சிந்தனையளவில் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்' என்று வெறும் தமிழ் பெண்ணாக சாகும் வரை இதே கணவனுடன் வாழவேண்டும் என விரும்புபவளாக இருக்கிறாள்.

கணவன் விபத்திற்குள்ளாகி காயமடையும் போது உருகி உருகி பணிவிடை செய்வதிலும், தன் கணவனின்

www.padippakam.com

நலனிற்காக கடவுளிடம் வழிபடுவதிலும், முழங்கால் தேய்ந்து இரத்தம் கசிய நேர்த்திக்கடன் செய்வதிலும் கடந்த 50 ஆண்டுகால சினிமா நாயகிகளின் தொடர்ச்சியாகவே படைக்கப்பட்டுள்ளாள்.

(எச்சரிக்கை 1: இவ்வாறு முட்டி தேய்ந்து இரத்தம் சிந்தாத, தங்களுக்காக கோயில் தரையில் உருளாத, மண் சோறு தின்னாத மனைவிகளின் கணவன் பற்று/கற்பு சந்தேகத்திற்கு இடமானதாக இனி நோயுரும் கணவன்களால் சிந்திக்கப்படலாம்.)

கதாநாயகனோ தன் மனைவியை நண்பராக காணும் அமெரிக்கப் பண்பு (அமெரிக்கா பற்றிய கற்பிதம்) உடையவனாக இருக்கிறான். தனக்காக காத்திருக்க வேண்டியதில்லை பசித்தால் சாப்பிட்டு விடலாம் என்கிறான். தன் மனைவியின் சமையல் திறமையைப் பாராட்டி 5 நட்சத்திர ஓட்டலின் ஹெட்-குக் ஆக நீ பொருப்பேற்றால் பல ஆயிரம் சம்பளம் வாங்கலாம் என்கிறான்.

ஒரு கணவன் என்பவன் மனைவின் பணிவிடைகளில் மகிழ்ந்து அன்பு (ஆதிக்கம்) செய்பவனாக அவளது சிந்தனையில் கட்டமைக்கப்பட்டுள்ள கற்பிதத்திற்கு மாறாக அவன் நட்புடன் பழகுவது அவளது கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

இந்நிலையில் ஒருவருட ஒப்பந்தம் முடிவுக்கு வருகிறது. நாயகன் நாயகியை அவளது தாய் வீட்டில் கொண்டு விடுகிறான்.தன் கணவனின் விருப்பத்தை மறுத்துச் சொல்ல முடியாத தமிழ்ப்பண்பு படைத்த மனைவியானவள்(நாயகி) மறுசொல் சொல்லாமல் தன் தாய்வீடு செல்கிறாள்.

பின்பு கதை மாறுகிறது. நாயகி தன் உபசரிப்பு, அன்பு-பணிவிடைகளின் மூலம் தனது கணவனின் மனசை மாற்றி விடலாம் அவன் தன்னை தன் தாய்வீட்டிற்கு அனுப்ப மாட்டான் என நினைக்கிறாள். ஆனால் அவன் அவளது உபயோகத்தை புரிந்து கொள்ள இடைவெளி தேவைப்படுகிறது. நாயகி தன் தாய் வீட்டிற்கு சென்ற பிறகு கடந்த ஒருவருடத்தில் ஒரு தமிழ் பெண்ணின் பணிவிடைகளில் சுகம் கண்டு விட்ட நாயகன் (ஒரு அடிமையின் சேவையில் சுகம் கண்டு விட்டதால், ஒரு பெண்ணின் உழைப்பைச் சுரண்டி சுகம் கண்டுவிட்டதனால் ) தன் மனைவி அருகில் இல்லாத போது அவளது மதிப்பை உணர்கிறான். ஆனால் திரையில் ஒருஅடிமையைத் தேடிச்செல்லும் எஜமான் என்பதாக காட்டப்படவில்லை. மாறாக இந்து (தமிழ்)ப் பண்பாடு பற்றி ஒரு பிச்சைக்காரனின் வாய்மொழியால் தெளிவு பெறுவதாகவும், கோயில் குருக்கள் ( பார்ப்பணன்) வாய்மொழியால் தன் மணைவியின் பெருமை பற்றி கேள்வியுற்று இந்தியப் பண்பாட்டிற்கு நாயகன் திரும்புவதாக காட்டப்பட்டுள்ளது.

(எச்சரிக்கை 2: சமீப காலத்தில் பார்ப்பணர்கள் திரையில் தோன்றி குடும்பம், கற்பு, திருமணம், மறுமணம், பற்றிய குழப்பத்தில் தவிக்கும் நாயக, நாயகியருக்கு அறிவுரை வழங்குவது அதிகரித்து வருகிறது. (எ-டு) ஆனந்தப்பூங்காற்றே, சேது, ரிதம், ப்ரியமானவளே,....பூலோக கடவுளர் என்ற கற்பிதத்தின் மீள் உருவாக்கமா ?. )

தன் மனைவியைத் தேடிச் சென்று வீட்டிற்கு அழைக்கிறான் நாயகன். நாயகி 'என் உணர்வுகளை மதிக்காத உன்னுடன் இனி சேர்ந்து வாழமுடியாது' என்கிறாள். பின்பு நாயகன் நாயகியை தன் வசம் திருப்புவதற்கு தன் பணத்தை செலவிட்டு பல முயற்சிகள் செய்தும் பலனின்றி இறுதியாக சினிமாத்தன்மான சம்பவங்கள் நிகழ்ந்து இருவரும் இனைந்து தமிழ் குடும்பப் பெருமையை நிலை நாட்டுகிறார்கள் - சுபம்.

இத்திரைப்பட இயக்குனர் அய்ரோப்பிய-ஏகாதிபத்திய கலாசாரத்தையும், இந்திய (தமிழக) கலாசாரத்தையும் எதிர்வுகளாக நிறுத்தி இவ்விருவேறு கலாச்சார சூழலில் வாழ்பவர்கள் குடும்ப உறவு கொள்ளும் போது தோன்றும் முரண்களாக சிலவற்றை படம் பிடித்துக் காட்டி அமெரிக்க கலாச்சாரத்தை மேன்மையானதாகப் புரிந்து கொண்டிருந்த நாயகன் பின்பு தன் தவறை உணர்ந்து அதாவது தமிழ்குடும்பப் பண்பாட்டின் மேன்மையுணர்ந்து மனம் திருந்துவதாக அமைத்துள்ளார்.

இதனை இப்படியும் சொல்லலாம். ஏகாதிபத்திய/ முதலாளிய பண்பாடு, வாழ்முறையை விட நிலப்பிரபுத்துவ / இந்துத்துவ தமிழ்பண்பாடு, குடும்ப வாழ்முறை ஆண்களுக்கு / ஆணாதிக்கத்திற்கு மிக லாபமானது என இயக்குனர் உணர்த்த முயற்சிக்கிறார்.

இதற்காக அமெரிக்கப் பண்பாடு என சிலவற்றை பொறுக்கி எடுத்து இயக்குனர் நம்முன் அடுக்குகிறார். அதுபோலவே இந்துத் தமிழ்ப்பண்பாடு எனவும் சிலவற்றை தேர்வு செய்து நம்முன் அடுக்கி எது சிறப்பானது என்ற கேள்வி எழும் விதமாக காட்சியை அமைத்துள்ளார்.

இக்கதை(காட்சி) யாடலில் நாம் சுட்டிக்காட்ட விரும்புவது அய்ரோப்பிய (முதலாளிய) பண்பாட்டைவிமர்சித்து இந்துத்துவ தமிழ் பண்பாட்டை உயர்த்தும் இயக்குனர் ஒரு இந்துத்தமிழன் என்பதையும் "கனவனே கண்கண்ட தெய்வம்" என நிலை நிறுத்த முயலும் இயக்குனர் ஒரு ஆண்(கனவன்) என்பதையுமே, அதாவது முன்னிறுத்தப்படும் எதிர்வுகளில் எதிர்க் கூறுகளின் உண்மையான குரல் இங்கு ஒலிக்கவில்லை ஒருவரே மாற்றுகளின் பெயரால் குரல் மாற்றி பேசுகிறார் என்பதையே இங்கு நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்

அதேபோல் மற்றொன்றையும் சுட்டலாம். அமெரிக்க / அய்ரோப்பிய பண்பாட்டிற்கு எதிராக குரல் கொடுக்கும் இவர்கள் உண்மையில் குடும்ப / ஆண்-பெண் உறவுகளில் ஏற்படும் மாறுதல்களை மட்டுமெ எதிர்க்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. மற்றபடி பிற பொருளாதார அரசியல் துறைகளில் அமெரிக்க / அய்ரோப்பிய நாடுகள் ஏற்படுத்தும் மாறுதல்களை அங்கீகரிக்கவே செய்கிறார்கள். பொருளாதார/ அரசியல்/ கல்வி போன்ற துறைகளில் ஏற்படும் மாற்றங்களே குடும்ப உறவு / ஆண்-பெண் உறவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதை இந்த முட்டாள்கள் முதலில் புரிந்து கொள்ளட்டும். ■



படிப்பகம்

www.padippakam.com

# இட ஒதுக்கீட்டின் இன்றைய நிலை

வங்கனூர்.வீ.ஏழுமலை

இன்று இந்தியா சுதந்திரப் பொன்விழாவைச் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறது. இடஒதுக்கீடு சட்டம் அமுலுக்கு வந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கிறது. இந்த இடஒதுக்கீடு தலித் மக்களுக்கு சரியான முறையில் அளிக்கப்படுகின்றதா? இடஒதுக்கீடு அளித்ததின் உள்நோக்கம், உண்மை நோக்கம் நிறைவேறி உள்ளதா? நிச்சயமாக இல்லையென்றே சொல்லலாம். இந்தியாவை ஆண்ட, ஆளும் கட்சிகள் அனைத்தும் இந்த இடஒதுக்கீட்டை சரியான முறையில் அளித்திருந்தாலே, நமது நாடு என்றோ முன்னேறியிருக்கும்.

இன்று வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களில் மூன்றில் இரண்டு சதவிகிதம் இந்த மண்ணின் மைந்தர்களான தலித் மக்கள் அடங்குவார்கள். இவர்களை முன்னேற விடாமல் செய்தது, இவர்களுக்குரிய இடஒதுக்கீட்டை அளிக்காமல் முடக்கியது, ஏட்டில் இருக்கும் அரசியல் சட்டத்தை மக்களின் வாழ்க்கை வரை கொண்டு வராமல், பாராளுமன்ற, சட்டமன்றத்திற்குள்ளேயே அடைத்து வைத்து செயல்படுத்த முடியாமல் முடங்கிப் போகச் செய்தவர்களும், செய்து கொண்டிருப்பவர்களும் இந்த அரசியல் தலைவர்கள் தான் ஆவர். இடஒதுக்கீட்டைப் புறக்கனித்து விட்டு இங்கே எந்த அரசியல், சமூக கட்சியும் சமூகநீதியைப் பற்றி பேசிவிட முடியாது. அதேசமயம் தலித் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணாமல், இந்தியாவை வளமான நாடாக மாற்றுவோம் என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலம் தான்.

இடஒதுக்கீடு கூடவே கூடாது என்று பேசுகிற ஒரு சில தலைவர்கள் கூட, சாதிய அத்துமீறலையும், அடக்குமுறையையும் கண்டிக்க முன்வருவார்களா? பொருளாதார ரீதியில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று அங்கலாய்ப்பவர்கள், பொருளாதார ரீதியிலும் பின்தங்கியுள்ளவர்கள் தலித்துகள் என்பதை அறிவார்களா? அவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளதால் தானே சமூகத்திலும் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். தலித் மக்களை அனைத்து வகையிலும் முன்னேற்ற டாக்டர் அம்பேத்கர் கண்டெடுத்த இந்த இடஒதுக்கீடு இன்று நான்கில் மூன்று பங்குகள் பயன்படுத்தப்படாமலே பாழ்பட்டு போய்க்கொண்டிருக்கிறது. எதற்கும் உதவாத இணை, துணை, ஒருசில அதிகாரிகள் ஆகிய பதவிகளைக் கொடுத்துவிட்டு, நான்தான் தலித்களுக்கு உண்மையாக பாடுபடுபவன் என்று ஒருசில அரசியல் கட்சிகள் தலித் மக்களின் வாக்குகளை வாங்க வாய் கிழியப் பேசுகின்றது.

இன்றைய நிலையில் இடஒதுக்கீட்டை ஆய்ந்து நோக்கினால் அதிர்ச்சியே தருகிறது. இன்றைய அரசியல் கட்சிகள் கூட தலித் மக்களை இழிவுபடுத்தி அவர்களின் வாழ்வுரிமையான இடஒதுக்கீட்டை அபகரித்து வருகிறது. இவர்கள் ஏமாற்றுவது தலித் மக்களை மட்டுமல்ல, அனைத்திற்கும் அடிப்படையான அரசியல் சட்டத்தையும் சேர்த்து தான். இதுவரை எந்த அரசும் எந்த துறையிலும் 18 % இடஒதுக்கீட்டை முழுமைப்படுத்தியது இல்லை. துப்புரவு பணியாளர் துறையைத் தவிர, என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியாளர் குழு ஆய்வு செய்ததில் 239 பல்கலை கழகங்களிலும், 7000 கல்லூரிகளிலும் உள்ள 3 லட்சம் ஆசிரியர்களில் வெறும் 2 சதவிகிதம் தான் தலித்துகள் உள்ளார்கள் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது. தலித்துகள் பேராசிரியர் பதவிக்கு படித்து முன்னேறுவதில்லை என்று ஒருசிலர் கூறுகிறார்கள் இதுவரை 2000-க்கும் மேற்பட்ட தலித்துகள் டாக்டர், ஆய்வாளர் பட்டம் பெற்றும் வேலையின்றி உள்ளார்கள் என்பதும், இவர்களை பணியில் அமர்த்தாமல் அரசும் காலம் தள்ளி தலித்துகளின் வயிற்றில் அடித்துக் கொண்டுள்ளது என்பதையும் நாசகக்காரர்கள் அறிவார்களா?

இந்தியாவின் மிக உயர்ந்த பல்கலைக்கழகமான தில்லி பல்கலைகழகம் 2 சதவிகித்திற்கு குறைவாகவே இடஒதுக்கீடு செய்துள்ளது. இன்னும் ஒருசில பல்கலைகழகங்களில் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதே இல்லையென தைரியமாகச் சொல்லலாம். சமூக நீதியை முன்னெடுத்துச் செல்லும் முதல் மாநிலம் என்று பேசும் தமிழ்நாட்டில் 800 பேராசிரியர்களில் 72 பேர்தான் தலித்துகள்என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. சென்னை அடையாறில் உள்ள மத்திய தொழில் நுட்ப கல்வி நிறுவனமான ஐ.ஐ.டி.யில் உள்ள 420 பேராசிரியர்களில் தலித்துகள் 2 பேர் மட்டுமே என்பது வேதனைப்பட வேண்டிய விசயம். பிற்படுத்தப்பட்டவர்கள் 20 பேர் ஆவர். ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் இந்நிறுவனத்திற்கென ஒதுக்கும் நிதி ஆண்டிற்கு 40 கோடி என்பது தான்வெட்கப்பட வேண்டிய காரியம். இது யாருடைய பணம், தலித், பிற்படுத்தப்பட்ட மக்களின் வரிப்பணம் தானே. இவர்களுக்குறிய இடஒதுக்கீட்டை சரியான முறையில் தராமல், வரிப்பணத்தை மட்டும் சரியான முறையில் வசூலித்து விட வேண்டும். இது என்ன அநியாயம்?

இன்று மிகவும் உயர்ந்த பதவியான, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், மற்றும் நீதிபதி ஆகிய பதவிகளில் தலித்துகளை பார்ப்பது மிகவும் அரிதாகவே உள்ளது. இந்தியாவில் இன்று உள்ள 6000 ஐ.ஏ.எஸ் பதவிகளில் 3000 பேரும், 4000 ஐ.பி.எஸ் பதவிகளில் 3000 பேரும் முன்னேறிய வகுப்பினர் மட்டுமே உள்ளனர். மீதம் உள்ள பாதியில் தான் தலித், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மலை வாழ் சாதியினர், பழங்குடியினர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

18 உயர்நீதி மன்றங்களில் உள்ள 600 உயர் நீதிபதிகளில் பழங்குடியினர் 12 பேரும் தலித்துகள் 20 பேரும் பிற்படுத்தப்பட்டவர் 100 பேரும் மட்டுமே உள்ளனர். மீதமுள்ள 468 பேர் முன்னேறிய வகுப்பினர் ஆவர். மேலும் 1987ஆம் ஆண்டின் கணக்குப்படி மத்திய அரசுப் பணியில்

www.padippakam.com

முதல் வகுப்பில் 8% ம் இரண்டாம் வகுப்பில் 10% ம் மட்டும் தான் தலித் உள்ளனர். ஆக மீதமுள்ள 18 சதவிகித்தை இன்று வரை எந்த அரசும் பூர்த்தி செய்யவில்லை. பொதுத்துறை நிறுவனங்களில் முதல் வகுப்பு பணியில் 5 சதவிகிதமும், இரண்டாம் வகுப்பு பணியில் 6 சதவிகிதமும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அதிகாரிகளாக 7 சதவிகிதமும் தான் உள்ளார்கள். மீதமுள்ள சதவிகிதத்தை பூர்த்தி செய்யாமலே உள்ளனர்.

தமிழக அரசின் முக்கிய 144 துறைகளில் ஏ பிரிவில் 7 சதவிகிதமும், பி பிரிவில் 12 சதவிகிதமும், சி பிரிவில் 14 சதவிகிதமும் தான் தலித்துகள் உள்ளனர். எந்தக்காரணத்தினால் மீதமுள்ள சதவிகிதத்தை தமிழக அரசு நிரப்பாமல் உள்ளது என்று இன்றுவரை தெரியவில்லை. தெரிவிக்கவும் இல்லை.

தமிழக அரசின் அச்சாணியாக விளங்குபவர்கள், அரசின் அனைத்துச் செயல்களையும், திட்டங்களையும் செயல்படுத்தக்கூடிய திறன் படைத்தவர்கள், நிதி நிலையை நிர்மாணிக்கின்றவர்களான தலைவர், செயலாளர், இயக்குனர் ஆகிய பகுதிகளில் தலித்துகள் வெறும் மூன்று சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளனர்.செயலர் 2.5 சதவிகிதமும், இயக்குனர் 3.9 சதவிகிதமும், தலைவர் 3.3 சதவிகிதமும், ஆணையர் 1.9 சதவிகிதமும் தலித்துகள் உள்ளனர். ஆளுகிற எல்லா அரசும் தலித் மக்களை எந்த அளவிற்கு ஒடுக்கி வைத்துள்ளது என்பதற்கு இதுவே சாட்சி.

நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கின்ற துறையான கல்வித்துறையில் 17 சதவிகிதமும், செயலகத்துறையில் 10 சதவிகிதமும், தொழில்சார் துறையில் 11 சதவிகிதமும் தான் தமிழ்நாட்டில் தலித்துகள் உள்ளனர். வருகின்ற எந்த அரசும் தலித் மக்களின் முன்னேற்றத்திற்கு புதிய புதிய திட்டங்களை தீட்டத் தேவையில்லை. அவர்களுக்கு புதிய சலுகைகளையும், இலவசம் என்ற பெயரில் புதிய திட்டம் எதனையும் அறிவிக்கத் தேவையில்லை. தலித் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும் என்று துடிக்கும் ஓர் உண்மையான அரசு செய்ய வேண்டிய முதல் காரியம் தலித் மக்களுக்குரிய இடஒதுக்கீட்டை சரியான முறையில் அளிக்க வேண்டும்.

தலித் மக்களுக்குறிய இடத்தை விரைவில் தலித் மக்களைக் கொண்டே நிரப்ப வேண்டும். இதனை செய்து விட்டால் நாட்டில் வேலையின்மை பிரச்சினை குறையும். ஏனெனில் வேலையின்றி நாட்டில் தவித்துக் கொண்டிருப்பது தலித்துகள் தான். இந்த இடஒதுக்கீட்டை சரியான முறையில் நிரப்பப்படாமல் இங்கு எந்தக் கட்சியும் தேசியம், ஜனநாயகம், சமத்துவம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவைகளைப் பற்றிப் பேச முடியாது. அப்படி பேசுகின்ற தகுதி எந்தக்கட்சிக்கும் ஆட்சிக்கும் இல்லையென்றே சொல்லலாம்.

தலித்துகள் முன்னேற வழிவகுக்காமல் நாங்கள் வழிமையான பாரதம் காண்போம் என்பதும், தொழில் முன்னேற்றத்தில் அமைரிக்காவிற்கு அடுத்தபடியாக உள்ளோம் என்பதும், அறிவியலில் ஜப்பானுக்கு கொஞ்சம் கீழே உள்ளோம் என்பதும் காகிதப்பூவிற்குள் தேனெடுக்க நினைத்த கதைதான். தமிழ்நாட்டில் நான் பெரியாரின் விரலைப்பிடித்துக்கொண்டு வளர்ந்தவன், அண்ணாவின் இதயத்தில் இருந்தவன், சமூக நீதியை நானதான் காப்பாற்றி கரைசேர்த்தவன் என பேசுபவர்கள் கூட இடஒதுக்கீடு என்றதும், காந்தியின் குரங்காய் கண்ணையும், காதையும், வாயையும் மூடிக்கொண்டு மௌனவிரதம் இருக்கிறார்கள்.

மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் தலித் மக்களுக்கென ஆண்டிற்கு 840 கோடி ருபாய் ஒதுக்குகிறது. ஆனால் அது ஒடுக்கப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்படுவதனால், ஒதுக்கப்பட்ட நிதி உடனே வேறு துறைக்கு மாற்றப்பட்டு ஒதுக்கப்படுகிறது. இடஒதுக்கீடு சட்டத்தை நாடாளுமன்றத்தில் அம்பேத்கார் அறிமுகப்படுத்திப் பேசும்போது, "இந்தியாவின் கடைசி தலித்மகன் முன்னேறுகின்ற அந்தநாள் வரைக்கும் இந்த இடஒதுக்கீடு இருந்தே தீரும்" என்றார். ஆனால் இன்று அந்த இடஒதுக்கீடு கேள்விக்குறியாக உள்ளபோது தலித் மக்கள் முன்னேறுவது எப்படி? தலித் மக்களின் இடஒதுக்கீட்டில் பாதியை தலித் அல்லாதவர்கள் தலித் என்று பொய் சாதி சான்றிதல் பெற்று யாருக்கும் தெரியாமல் அனுபவித்து வருகின்றனர். தலித் மக்களின் உடைமைகளையும், உடலையும் தொட்டால் தீட்டு என்கின்ற இவர்கள் அவர்களின் உரிமையை மட்டும் அபகரித்துக் கொள்கின்றனர், அனுபவித்து வருகின்றனர். இன்றைய அரசாங்கம் மீதமுள்ள அந்த பாதி இடஒதுக்கீட்டை கூட தலித்துகளுக்கு அளிக்காமல் அலட்சியப்படுத்தி வருகின்றது.

இன்றைய அரசியல் தலைவர்களின் இடஒதுக்கீட்டுக் கொள்கை என்ன தெரியுமா?

இடஒதுக்கீட்டை முழுமையாக எடுத்துவிடவும் கூடாது. அதே சமயம் தலித் மக்களுக்கு இடஒதுக்கீட்டை முழுமையாக அளித்துவிடவும் கூடாது. முழுமையாக எடுத்துவிட்டால் தலித் மக்களின் வாக்குகளை வாங்க முடியாது. அப்படி முழுமையாக நிறைவேற்றி விட்டால் மேல்சாதியினரின் வாக்குகளை வாங்க முடியாது. இதுதான் இடஒதுக்கீட்டில் இன்றைய அரசுகளின் நிலைமை ஆகும். (*புள்ளிவிவர உதவி*: தலித் தகவல் ஒருங்கிணைப்பு) ■

**மடல்**

இரட்டைமலை சீனிவாசன் பற்றிய கட்டுரை மிகவும் அற்புதமாக இருந்தது. தலித்துகளின் மறைக்கப்பட்ட போராட்ட வரலாறுகளை வெளிக்கொனர்வது இன்றைய தேவையிலும் தேவையாக இருக்கிறது. கூடவே, காங்கிரசின் கைப்பாவையாகப் போயிருந்த எம்.சி.ராஜா பற்றிய உண்மையையும் வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். நன்று. இம்மானுவேலின் 'துரோகத்தின் சம்பளம் டாடா சுமோ' கவிதை கொஞ்சம் நெருடலாகத் தோன்றுகிறது. தலித்துகள் இனி யாரைத்தான் நம்பி இறங்குவார்கள் என்ற சந்தேகமும் தயக்கமும் உண்டாகிறது.

அபிமானி, தூத்துக்குடி


படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை:

# பேண்டவனை விட்டு விட்டுப் பீயை நோவானேன்?

**குமரன் தாசு**

சமீபத்தில் கலந்துரையாடல் ஒன்றில் பங்கு பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அது தமிழ் மொழி மீதான ஒடுக்குமுறை தொடர்பான கலந்துரையாடல். இருபது நபர்கள் வரை கலந்து கொண்ட உரையாடல் மிகச் சிறப்பாகவே இருந்தது. பல்வேறு விபரங்களினூடாக சுற்றிச் சென்ற உரையாடலில் என் கவனம் பெறும் ஓர் கருத்தும் வந்து விழுந்தது. 'எதிர்க்கப்பட வேண்டியது பிராமணியம் தானே தவிர பிராமணர் அல்ல'. கலந்துரையாடலின் மையம் தமிழ் மொழியாகையால் போகிற போக்கில் இக்கருத்து உதிர்க்கப்பெற்று கவனிப்பாரற்று பதிவாகியது. இக்கருத்துதிர்ப்புச் செய்தது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாளர் என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது. தோழர் சொல்வது சரிதானா?.

" *பார்ப்பனர் எதிரியல்ல! பார்ப்பனியம் தான் எதிரி!!*
*இக்கருத்தியலை இன்னும் சிலவற்றுக்கும் பொருத்தலாம்.*
*முதலாளி எதிரியல்ல! முதலாளியம் தான் எதிரி!!*
*பண்ணையார் எதிரியல்ல! பண்ணைத்துவம் தான் எதிரி!!*
*அமெரிக்கா எதிரியல்ல! ஏகாதிபத்தியம் தான் எதிரி!!* "

என்ன! எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதிய கட்டுரையை வாசிப்பது போலிருக்கிறதா ? இந்த இடத்தில் ஒரு உண்மையைச் சொல்லித்தான் தீர வேண்டும். சிறுவயதில் என்னிடம் இருந்த பார்ப்பன எதிர்ப்பை மொன்னையாக்கி பார்ப்பனர் மீது கழிவிரக்கம் ஏற்படுத்தியதில் ஜெயகாந்தனது புத்தகங்களுக்கும் முக்கியப் பங்குண்டு.

அப்பொழுது எனக்கு பத்து வயதிருக்கும். எங்கள் ஊர் பெரிய கோயிலைச் சுற்றி நான்கு ரதவீதிகளும் பார்ப்பன் வீடுகளால் நிறைந்திருக்கும். அவர்கள் வீட்டு கொல்லைப்புறச் சுவர்களை ஒட்டி சந்தொன்று இருக்கும். மலம் எடுக்கவும் பிற வேலைகளுக்காகவும் அச்சந்தும் குப்பைகளைக் கொட்ட அவர்கள் வீட்டு சிறிய கொல்லைப்புற கதவுகளும் பயன்பட்டன.

அய்யர் வீடுகளின் தலைவாசல் கதவிற்கும் கொல்லைப்புற கதவிற்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 200 அடியாவது இருக்கும். அந்தஅளவிற்கு வீடுகள் நீளமானவை. எங்களது ராஜ்யம் அந்த அய்யர் வீட்டு கொல்லைப்புறச் சந்து தான். அய்யர் வீட்டு கொல்லையில் எழுமிச்சை, கொய்யா, தென்னை,செம்பருத்தி இன்னும் ஏதேதோ செடிகொடிகள் எல்லாமுமிருக்கும்.

அய்யர் வீட்டு ஆளுயரக் கொல்லைச் சுவரின் காரை ஆங்காங்கே பெயர்ந்திருக்கும் அது கால் வைத்து ஏறுவதற்கு வசதியாக இருக்கும். நானும் என்னையொத்த சிறுவர்களும் மலம் கழிக்க அச்சந்துக்குள் புகுந்து விட்டால் திரும்ப எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும். மலம் கழித்து விட்டு தட்டான் பிடித்து விளையாடிவிட்டு இறுதியாக அய்யர் வீட்டு கொல்லையில் ஆள் இல்லாவிட்டால் எழுமிச்சை பறித்து தின்பது வழக்கம். எங்களது எழுமிச்சை பறிப்பிற்கு இடைஞ்சலாக ஆள் யாரும் கொல்லையில் நின்று விட்டால் எங்களுக்கு கோபம் வந்து விடும். அங்கு கிடக்கும் பெரிய கற்களை எடுத்து கொல்லைச் சுவரை ஒட்டி அய்யர் போட்டு வைத்திருக்கும் தாவாரத்தில் டமால் எனத் தூக்கிப் போட்டு விட்டு ஓடுவோம். அல்லது கொல்லைப்புற மரக்கதவு மீது ஓசை எழ சர் சர் என கல்லெரிந்து விட்டு ஓடுவோம். அய்யர் ஏதேதோ திட்டிக்கொண்டு கொல்லைக் கதவை திறப்பதற்குள் நாங்கள் வீடு வந்து சேர்ந்திருப்போம். இது போல் ஒருநாள் இருநாள் அல்ல பல மாதங்கள் செய்திருக்கிறோம்.

மற்றொரு சம்பவம் : நவராத்திரி வந்து விட்டால் அய்யர் வீடுகளில் எல்லாம் கொலு வைத்திருப்பார்கள் நானும் என் தெருப் பிள்ளைகளுடன் சிறு கிண்ணத்தை தூக்கிக் கொண்டு செல்வதுண்டு. அய்யர் வீடுகளில் ஒரே வெளிச்சமாக இருக்கும் பொம்மைகளாக அடுக்கி வைத்திருப்பார்கள். அப்போது எனக்கு ஆறு ஏழு வயதிருக்கும் ஆகையால் அதிகமாக ஒன்றும் நினைவில் பதிவாகவில்லை. அய்யர் வீட்டு பெண்கள் எங்களது கிண்ணங்களில் சுண்டலைப் போடுவார்கள். ஒவ்வொரு வீடாகப் போவோம் சில வீடுகளில் எங்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் விரட்டும் போது அல்லது கோபமாக பேசிவிட்டு ஏதேனும் போடும் போது குய்யென்று, அவர்களுக்கு மேலும் கோபம் ஏற்படுமாறு சப்தம் எழுப்பியவாறு ஓட்டமாக ஓடிவந்து விடுவோம்.

மற்றொன்று.. அப்போது எனக்கு வயது 14 இருக்கும். மாசிசிவராத்திரிக்கும், ஆடிஅமாவாசைக்கும் கோயில் திருவிழாவிற்கு பத்து நாட்களுக்கு கதாகாலட்சேபங்களும், கர்நாடக இசைக்கச்சேரிகளும் நடைபெறும். இடையே ஓரிரு நாட்களுக்கு மட்டும் திரையிசைக் கச்சேரிகள் நடக்கும் அன்று மட்டும் அனைத்து சாதி மக்களும் திரளாக கூடுவர். மற்ற நாட்களில் அய்யர்களும் மாமிகளும் மட்டுமே கூடுவர். நானும் என் நன்பர்களும் அதுபோன்ற அய்யர் கச்சேரிகளுக்கும் சென்று விடுவோம். ரசனையெல்லாம் ஒரு மண்ணும் கிடையாது. அய்யர்களுக்கு கடுப்பேற்றுவதற்கென்றே செல்வோம். அய்யர்கள் ரசித்து தலையாட்டும் போது நாங்களும் அவர்களுக்கு நிகராக தலையாட்டுவோம். பத்தாக்குறைக்கு தொடையில் வேறு தட்டிக்கொள்வோம். கச்சேரி செய்பவருக்கு உரைக்கும் அளவிற்கு அவருக்கு முன்பாக உட்கார்ந்து கொண்டு நாங்கள் செய்யும் ஓவர் ஆக்சன் அருகில் அமர்ந்திருக்கும் அய்யரையும் ஒருமாதிரியாக பார்க்க வைக்கும். எங்களுக்கு அதுதானே வேண்டும். நாங்கள் விடாமல் தலையாட்டுவோம். சரி போகட்டும் என்று அய்யர்கள் தங்கள் ரசிப்பைத் தொடர்வார்கள். அத்துடன் விடுவதில்லை நாங்கள்.

எங்கள் அருகில் கண்கள் கிறங்க ரசித்துக் கொண்டிருக்கும் அய்யரைத் தட்டி மணி என்ன? என்று கேட்போம். அவர் கையில் கடிகாரம் கட்டியிருக்க வேண்டும் என்ற கணக்கெல்லாம் எங்களுக்கில்லை. கையில் கடிகாரம் இல்லையென்று கையைக் காட்டினாலும் விடுவதில்லை.

www.padippakam.com

சும்மா ஒரு உத்தேசமாக சொல்லுங்களேன் என்று கேட்போம். அவர் கோபப்பட்டு முறைத்தால் தான் எங்களுக்கு திருப்தி ஏற்படும். அதற்கு மேல் சிரிப்பை அடக்க முடியாது. எழுந்து ஒவ்வொருவராக ஓடிவந்து விடுவோம். இது போல் இன்னும் எவ்வளவோ நிகழ்ச்சிகளை அடுக்கிக்கொண்டே செல்ல முடியும் உச்சபட்சமாக தன் பூனூலை அத்துப் போட்டு விட்டு கையில் கிடைத்த கருங்கல்லை எடுத்துக் கொண்டு 'உங்களைக் கெல்லாம விடமாட்டேன்டா, இல்லாட்டி நான் பாப்பானே இல்லடா' என்று துரத்திய அய்யரின் கண்ணில் படாமல் மாதக்கனக்காக மறைந்து திரிந்த சம்பவம் வரை உண்டு.

ஏன் இப்படியெல்லாம் நாங்கள் நடந்து கொண்டோம் என இப்போது யோசிக்கும் போது அவ்வாறு செய்யத் தூண்டியது எங்கள் வாழ்க்கைச் சூழல் தான் என்று புரிகிறது. இந்த செயல்களையெல்லாம் யாரும் சொல்லிக்கொடுத்து நாங்கள் செய்யவில்லை. அல்லது எந்தப்புத்தகத்தையும் படித்துவிட்டு நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. சமூகத்தில் எங்களுக்கு மேலாக இருந்து கொண்டும், எங்களுக்குப் புரியாத பல்வேறு பழக்கவழக்கங்களை வைத்துக் கொண்டும், எங்களுடன் கலக்காமல் ஒதுங்கியும் (எம்மை ஒதுக்கியும்) வசதியுடன் வாழ்ந்தார்களே அந்த வாழ்க்கை முறைதான் இயல்பாகவே எங்களை இப்படி செய்யத்தூண்டியது என்று இப்போது புரிகிறது.

இதேபோல் உங்கள் ஒவ்வொருவருக்கும் கூட அனுபவங்கள் இருக்கும். உங்களை மேலாதிக்கம் செய்தவர்களுக்கு எதிராக நீங்கள் என்னென்ன செய்தீர்களோ! என்னாலும் என் நண்பர்களாலும் இவ்வாறு தான் நடந்து கொள்ள முடிந்தது.

இப்படிப்பட்ட சூழலில் வளர்ந்த என்னை, தங்களை கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டவர்களே திராவிட எதிர்ப்பை மையமாகக் கொண்டு, என்னிடம் இருந்த பார்ப்பன எதிர்ப்புணர்வை மழுங்கடித்தனர். அய்நூறு குடும்பங்களுக்கு மேல் பார்ப்பனரைக் கொண்டிருந்த எங்களூரில் கம்யூனிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் முக்கிய பொறுப்பு வகித்ததும் அவர்கள் பின்னே பிற்பட்ட சாதியினர் அணிதிரண்டதாலும் பார்ப்பன எதிர்ப்பு ஓர் அரசியல் இயக்கமாக வளர்ச்சி பெற இயலவில்லை. மேலும் பார்ப்பனர் மற்றும் பி.சி இருவரும் கூட்டு சேர்ந்து காள்ளையடிக்கும் தொழில் நிலமை நிலவியதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே. அதனால்தான் பொதுஉடமை இயக்கம் வளர்ச்சி பெற்ற அளவிற்கு திராவிடர் கழகம் வளர்ச்சி பெற முடியாமல் போயிற்று.

எங்கள் பகுதியில் இருந்த திராவிடர் கழகம் பார்ப்பனரை எதிர்த்தது ஆனால் பார்ப்பனரல்லாத பிற்பட்ட வகுப்பில் பிறந்தவர்கள் பார்ப்பனிய மயமாகிப்போனதையோ, அன்றாட வாழ்வில் தன்கட்சிக்காரன் வட்டிக்குவிட்டு பிறரைக் கடுமையாகச் சுரண்டி கொழுப்பதையோ கண்டுகொள்ளவில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு திராவிடர் கழகச் சார்பாளர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் சொன்ன விசயத்தை இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

அவர் சொன்னார் "முன்பெல்லாம் தீபாவளியன்று விடிந்தும் விடியாமலும் (அதிகாலையில்) மேளகாரன் (இசைவெள்ளாளர்) சாஸ்திரி வீட்டில் தன் முதல் நாயன வாசிப்பைச் செய்து விட்டு தீபாவளி காசிற்கு கைநீட்டுவான். ஆனால் இன்று சேர்வை மகன் வீட்டில்தான் தன் முதல் வாசிப்பைச் செய்கிறான்'. என்று மகிழ்ச்சி பொங்க பெருமையுடன் சொல்லிக் கொண்டார். ஏனென்றால் அவர் அந்த சாதியில் பிறந்தவர் மேலும் தன் பெயருக்குப் பின்பு சேர்வை என்று போட்டுக் கொள்வதுடன் தன் சாதிச் சங்கத்தில் முக்கிய பொறுப்பும் வகித்தார். இன்றும் கூட இருப்பார் என நினைக்கிறேன்.

அவ்வாறு அவர் பெருமைப்பட்ட போது நான் இப்படி கேட்டு வைத்தேன் 'சரி அன்றைக்கு அய்யர் வீட்டில் கையேந்தினர். இன்று உங்களிடம் கையேந்துகின்றனர் உங்களுக்குப் பெருமைதான் ஏனென்றால் அய்யர் இடத்திற்கு நீங்கள் வந்து விட்டீர்கள். ஆனால் தீபாவளி அன்று கூட தங்கள் பிள்ளை குட்டிகளுடன் உங்களைப் போல் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்க முடியாமல் வீடு வீடாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார்களே இது கொடுமையாக உங்களுக்குத் தெரியவில்லையா?!" என்று நான் கேட்டதற்கு தன் மீசையை முறுக்கிக் கொண்டு ஏதேதோ சொன்னார் அவர்.

சரி திராவிடர் கழகத்தவர் போக்கு இது. கம்யூனிஸ்ட் கட்சியினரது போக்கு அது இன்னும் மோசம் தி.க.காரர்களாவது பார்ப்பனர்களை எதிர்த்துக் கொண்டு பார்ப்பனமயமாயினர். மார்க்சிஸ்டுகள் பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனிய மயமாயினர். ஒரு உதாரணம் சொல்கிறேன்.

அவர் ஒரு கம்யூனிஸ்ட் (என்று சொல்லிக்கொண்டார். எல்லோரும் நம்பினோம்) அவரிடம், என் தோழன் ஒருவன் ம.க.இ.க. வின் புரட்சிகரத் திருமணம் பற்றி கருத்து கேட்டுள்ளான். அதற்கவர் அதெல்லாம் தவறு நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அது எல்லாம் புரட்சிக்கு பின்புதான் செய்ய வேண்டும் என்று விளக்கம் கூறியுள்ளார். பிறகொருமுறை நான் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது இதுபற்றி விளக்கம் கூறினார் 'ஆமாம் அப்படி சொன்னேன். புரட்சிகரத் திருமணம் சரிதான் என்றால், நாளைக்கு வந்து உன் பெண்ணையே கொடு என்பார்கள் எதற்கு வீண் வம்பு' என்றார். இவ்வளவுக்கும் அவரும் கூட பிற்பட்ட வகுப்பில் பிறந்தவர்தான். இப்படித் தான் இருந்தார்கள் பேசும் அரசியல் தன் குடும்ப நலனுக்கு விரோதமாகப் போய்விடாமல் பார்த்துக்கொண்டார்கள் அல்லது தன் குடும்ப, சாதிய, மத நலனுக்கு ஏற்றவாறு அரசியலை மாற்றிப் பேசினார்கள்.

இப்படிப்பட்டவர்களைத்தான் என் சூழலில் கண்டேன். கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர்களாக இருப்பர், பூணூல் போட்டுக் கொள்வார்கள், தங்கள் குடும்ப வைதீகச் சடங்குகளை முன்னின்று நடத்துவார்கள். அகமண முறைப்படி திருமணம் செய்வார்கள். மார்க்சியம் பேசும் பிற்பட்ட சாதி கம்யூனிஸ்ட் தன் சாதிச் சங்கத்தில் பதவி வகிப்பான், தன் தெரு கோவில் திருவிழாவில் தலைமை வகிப்பான். இன்னும் சற்றே மேலே போய் சாமியும் ஆடுவான். அவனுக்கு மே தினமும் கோவில் திருவிழாவும் ஒன்றுதான்.


படிப்பகம்

www.padippakam.com

அதேபோல் என் சூழலில் பெரியாரியம் பேசியவனின் நடைமுறையும் வேறாய் இல்லை.

உண்மையில் மார்க்சியத்திற்கும், பெரியாரியத்திற்கும் இவர்கள் செய்தது எல்லாம் துரோகமிழைத்ததைத் தவிர வேறில்லை. பார்ப்பனியம் என்பதை ஒருவாழ்க்கை முறை என்று இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பார்ப்பனரை எதிர்த்த தி.க.வினர் பார்ப்பனரை எதிர்ப்பதற்கு காரணமான பார்ப்பனியத்தை யார் கடைப்பிடித்தாலும், கட்டிக்காத்தாலும் அவர்களையும் எதிர்ப்பது என்பதை மறந்து, கடந்த காலத்தில் பார்ப்பான் கடவுளை தோற்றுவித்தான், வர்ணத்தைத் தோற்றுவித்தான், வேதத்தை எழுதினான் என்று கடந்த கால கொடுமைகளுக்காக எதிர்த்து நிகழ்காலத்தில் அதே கொடுரங்களின் வழியே தாங்கள் நடை போட்டார்கள்.

மார்க்சிஸ்டுகளும் பார்ப்பனியத்தை வாழ்க்கை முறையாகக்காணாமல் வாழ்க்கைக்கு வெளியே எங்கோ இருப்பதாக நினைத்துக் கொண்டு தாங்களும் அதே பார்ப்பனிய வழிப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டார்கள். இதன் எதிர்விளைவு மார்க்சியத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவமாக கருதாமல் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மாற்றினார்கள். தங்களது அன்றாட வாழ்க்கைக்கு பார்ப்பனியத்தையும் வைத்துக் கொண்டார்கள். இவ்வாறு நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டாத ஆபத்தில்லாத தத்துவமாக மாற்றிக் கொண்டதன் காரணமாகத்தான் இங்கு பூனூல் கம்யூனிஸ்டுகளும், திராவிடர் கழக சேர்வைகளும், மார்க்சியத் தேவர்களும் வலம் வர முடிந்தது.

அப்படியானால் எந்தஒரு பிராமணனும், மேல்சாதி இந்துவாகப் பிறந்தவனும் மார்க்சியமோ, பெரியாரியமோ பேசக்கூடாதா? கம்யூனிஸ்ட் கட்சியில் சேரக் கூடாதா? நாம் அப்படிச் சொல்லவில்லை. பெரியாரியம் பேசுபவன், மார்க்சியம் பேசுபவன், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினன் எப்படி சாதியத்தைக் கடைப்பிடிக்க முடியும்? எப்படி பார்ப்பனியத்தை கடைப்பிடிக்க முடியும்? தான் ஒரு பிராமணன் என்று எப்படி சொல்லிக் கொள்ள முடியும்? அல்லது மேல்சாதி இந்து என்று எவ்வாறு சொல்லிக் கொள்ள முடியும் என்று கேட்கிறோம்.

அவ்வாறு கடைப்பிடிப்பவன், சொல்லிக்கொள்பவன், அல்லது உணர்பவன்அவனுக்கும் கீழே வாழும் மக்களால் எதிர்க்கப்படுவது தவிர்க்க முடியாதது என்கிறோம்.

பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் படிக்காத வயதில் இயல்பாக என்னிடமும், என்னையொத்த சிறுவர்களிடமும் பார்ப்பன எதிர்ப்பு இருந்திருக்கிறது. அதேபோல் எங்களுக்கு கீழே வாழ்ந்தவர்கள் மீது ஒருவித ஆதிக்கமும் இருந்திருக்கிறது. (காண்க: 'ஒணானியம்' *உரிமைப்போராட்டம்* இதழ் 1) காரணம் வாழ்நிலை இதனை Dr அம்பேத்கார் மிகச்சிறப்பாக விளக்குகிறார்.

"பிராமணர் முதல் பறையர் வரை மேல்சாதி கீழ்சாதி என்ற அடுக்குகள் உள்ளன. இந்தப்படிநிலை வரிசையில் எங்கோ ஓர் இடைநிலையில் இருக்கும் ஒருசாதி தனக்கு மேலே உள்ள சாதிகளின் ஆதிக்கம் குறித்து அதிருப்தி கொண்டிருப்பதோடு அத்தகைய சாதிகளின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் விரும்புகிறது. அதோடு மட்டுமின்றி தனக்கு கீழேயுள்ள சாதிகளின் மீது ஆதிக்கம் கொண்டிருப்பதோடு அத்தகைய கீழ் சாதிகள் தமக்கு நிகராக மேலேறி வருவதை கடுமையாக எதிர்க்கிறது."

இந்த நிலையை டாக்டர்.அம்பேத்கார் பன்மப்படிநிலை என விளக்குவார். ஆக ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பிற்கு உள்ளாக கூடாது என்று விரும்புகிறவன் தன் சாதியை, அதனால் தான் அடைகிற சமூக மதிப்பை, உற்பத்தியில் பெறும் நுகர்வைத் துறந்து வெளியேறி ஒடுக்கப்படுகின்ற மக்களுடன் ஒன்று கலந்து சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. அதுவன்றி தன் சாதியில் இருந்து கொண்டு அதாவது தனக்குக் கீழே படிநிலையில் சாதிகளை வைத்துக் கொண்டு தான் எவ்வித சாதி ஒடுக்கு முறையையும் மேற்கொள்ளவில்லை என்பதோ, சாதி ஒழிவதில் தனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை என்பதோ வெறும் பம்மாத்து ஆகிவிடும்.

அதாவது ஒரு அருந்ததியர் அல்லது பறையர் இருப்பது போல் நானும் ஒரு பிராமணன் அல்லது முக்குலத்தோன் அல்லது வெள்ளாளன் என்று இருந்து விட்டு போகிறேன் என்று எவனும் எளிதாகச் சொல்லிவிட முடியாது. இச்சமூகத்தில் பறையனாக இருப்பதும் பார்ப்பனனாக இருப்பதும் ஒன்றல்ல. ஆனால் கலந்துரையாடலில் பங்கேற்ற மார்க்சிஸ்ட் தோழர் இந்த இடத்தில் தான் தவறு செய்து விட்டார். மிக எளிதாக 'எந்த ஒரு சாதிக்கும் நாங்கள் எதிரியல்ல' என்ற தொனியில்; 'பார்ப்பனர் எதிரியல்ல பார்ப்பனியம் தான் எதிரி' என்று சொல்லிவிட்டார்.

அதாவது ஒரு பார்ப்பனனாக இருப்பதையும், ஓர் இடைநிலைச் சாதியினனாக இருப்பதையும், ஓர் தாழ்த்தப்பட்டவனாக இருப்பதையும் ஒன்று போல் பார்த்துவிட்டார். இதுதான் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் நாம் தொடர்ந்து சந்தித்து வரும் வறட்டு வர்க்கப்பார்வை.

ஒருமனிதன் என்னதான் மார்க்சியம் பேசினாலும் அல்லது பெரியாரியம் பேசினாலும் தான் வாழும் வாழ்நிலை காரணமாக, தான் மேற்கொள்ளும் பிறருடனான உறவு காரணமாக தன் சகமனிதர்களிடம் இருந்து எதிர்ப்பையோ அல்லது நேச உறவையோ சந்தித்தே தீரவேண்டும். அந்த வகையில் இன்று பார்ப்பனியத்தால் பலன் பெறுகின்ற ஒவ்வொரு மனிதனும் அது சரியென்று நினைக்கின்ற ஒவ்வொரு மனிதனும் எதிர்க்கப்பட வேண்டியவன் தான்.

பலன் பெறும் மனிதனை விட்டு விட்டு அல்லது பார்ப்பனியம் வாழ பாடுபடும் மனிதனை விட்டுவிட்டு பார்ப்பனியத்தை தனியாக எதிர்த்துப் போராடுவது என்பது பம்மாத்து வேலையன்றி வேறில்லை. சாதி விசயத்தில் நாம் இப்படி பேசுவது தடாலடியாய் தோன்றலாம் சாதியத்துக்குள் கட்டமைப்பட்டு வந்துள்ள சிந்தனையானது


படிப்பகம்

www.padippakam.com

இதனைக்கேட்டு அதிர்ச்சியுறவே செய்யும். என்வே இதனை சற்று வேறுவிதமாக பரிசீலிக்கலாம்.

நாம் கம்யூனிஸ்ட் கட்சியில் டாடாவை, அம்பானியை இணைத்துக் கொள்வோமா? அல்லது வாண்டையாரை, டி.வி.எஸ்.அய்யங்காரை இணைத்துக் கொள்வோமா? ஏன் இணைத்துக்கொள்வதில்லை?.

ஏனென்றால் அவர்கள் முதலாளிகள், பண்ணையார்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அதன் கொள்கைக்கு எதிரிகள், அப்படி என்றால் கம்யூனிஸ்ட் கட்சியில் வேறு எந்த வர்க்கத்தில் இருந்தும் எவரும் வந்து சேர்வதில்லையா? ஒரு நகைச்சுவைத் துணுக்கை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குருசேவ்வும், சீன கம்யூனிஸ்ட் தலைவர் சூ-என்-லாய் (என நினைக்கிறேன்)யும் சந்தித்துக் கொண்டபோது 'நீங்கள் பிறந்து வளர்ந்த பிரபு குலத்திற்கு(வர்க்கத்திற்கு) துரோகம் செய்து விட்டீர்கள்' என்று சூ-என் லாயிடம் குருசேவ் கூறினானாம். அதற்கு சூ-என்-லாய் கூறினாராம் 'நீங்களும் அப்படித்தான்' என்று. குருஷ்சேவ் தொழிலாளி வர்க்கத்தில் பிறந்தவன் ஆனால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்திற்கு வந்தவுடன் தொழிலாளி வர்க்கத்திற்கு துரோகம் செய்துவிட்டு முதலாளியம் வளர உதவிய திரிபுவாதி அவன் என்பதையே சூ இங்கு நாசுக்காக குறிப்பிடுகிறார்.

இந்த நகைச்சுவைத் துணுக்கு உணர்த்துவது என்ன ? தொழிலாளி வர்க்கத்தில் பிறந்தவர்கள் தங்கள் வர்க்கத்தின் நலனுக்கு துரோகம் செய்வதை கண்டிப்பதும், பிறவர்க்கத்தில் பிறந்தவர்கள் தங்கள் வர்க்கப்பண்பைத் துறந்து விட்டு தொழிலாளி வர்க்கமாக தங்களை மாற்றிக் கொள்வதை வரவேற்பதும் கம்யூனிஸ்ட்களது கடமை என்பதைத் தானே?

ஆனால் சாதியே வர்க்கமாக நிலவிய இச்சமுகத்தில், இன்றும் சாதியம் ஆதிக்கம் செய்யும் இச்சமுகத்தில் மட்டும் பல்வேறு உயர்சாதிகளில் இருந்து வந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த போது எந்த அளவிற்கு தங்கள் சாதிய உணர்வுகளையும், பண்பாடுகளையும் துறந்து ஒடுக்கப்பட்ட சாதியின் உணர்வுகளையும், பண்பாட்டையும் ஏற்றுக் கொண்டார்கள்?

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் பெயருக்குப் பின் தங்கள் மேல்சாதிப் பிறப்பை வெளிப்படுத்தும் விதமாக குப்தா என்றும், நம்பூதிரி என்றும், ராவ், மிஸ்ரா, பட்டாச்சார்யா, ரெட்டி, யாதவ் என்று கூசாமல் போட்டுக்கொண்டார்களே அது எப்படி சாத்தியமாயிற்று. சரி இவர்கள் குப்தா என்றும், நம்பூதிரி என்றும் போட்டுக் கொண்டார்களே அதுபோல் தங்கள் கட்சியில் இருந்த தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் பெயருக்கப் பின் பள்ளர் என்றும், பறையர் என்றும், போட்டுக்கொண்டிருந்தால் இவர்கள் என்ன செய்தி ருப்பார்கள்? அல்லது தங்களைப் போல் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களது பெயருக்குப்பின் சக்கிலியர் என்றும், பறையர் என்றும், பெருமையுடன் போட்டுக் கொள்ளாதது ஏன் என்றாவது யோசித்திருந்தால் இதுபோல் பட்டங்களை தங்கள் பெயருக்குப் பின் போட்டுக் கொண்டிருப்பார்களா?

இதற்கு என்ன காரணம்? ஒன்று சாதியையும் வர்க்கம் போல் எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்று பார்க்கவில்லை. அல்லது இவர்கள் சாதி ஆதிக்கத்தை எதிர்க்காதது போலவே உண்மையில் வர்க்க சுரண்டலையும், ஒடுக்கு முறையையும் எதிர்க்கவில்லை. மேற்கூறிய இருபோக்குகளுமே இங்கு இருந்திருக்கிறது. ஒருபுறம் வர்க்கம், வர்க்கம் என்று சொல்லிக் கொண்டு சாதி ஒழிப்பு பற்றி சிந்திக்காமலும், சாதி ஒழிப்பிற்கான வழிமுறை பற்றி சிந்திக்காமலும் "காந்திய வழியில்தீண்டாமை ஒழிப்பு" பற்றிய மாநாடுகள் நடத்துகிறார்கள்.

மறுபுறம் முதலாளிகள் நோகாமல் முதலாளியத்தை எதிர்ப்பதைப் போலவே சாதி ஆதிக்கவாதிகளை விட்டுவிட்டு சாதிய எதிர்ப்பு பற்றி பேசுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வெளியே நிலமை அவ்வாறில்லை. சாதிய ஒடுக்குமுறைக்குட்பட்டிருந்த மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுகிறார்கள். தங்கள் மீது ஒடுக்குமுறை களைச் செலுத்தும் எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். தங்களுக்கு வரம்புகள் விதிப்பவர்களை எதிர்ப்பதுடன் வரம்புகளையும் தகர்த்தெறிகிறார்கள். நிலமை கட்டுமீறிப் போவதைக்கண்டு போலி கம்யூனிஸ்ட்களும், போலி பெரியாரிஸ்ட்களும், கலங்கிப்போகிறார்கள். சமரசம் பேச வருகிறார்கள். அன்று காந்தி செய்த அதே வேலையை இன்று இவர்கள் செய்ய வருகிறார்கள். ஆதிக்க சக்திகளுக்கு ஆலோசனை சொல்கிறார்கள்.தாழ்த்தப்பட்ட மக்களை தங்களது உபஉறுப்பாகவே வைத்துக் கொள்ள வேகவேகமாக தீண்டாமை எதிர்ப்பு, சமுக நல்லிணக்க மாநாடுகளை நடத்துகிறார்கள். இவர்களைப் போன்றோருடைய இத்தகைய மோசடிகளை தோழர் மா.ஓ. 'ஹீனான் விவசாயிகள் இயக்கம்' என்ற தனது நூலில் அம்பலப்படுத்தியுள்ளார். (கீழ்வரும் பத்திகளில் விவசாயிகள் என்பதை தலித்துகள் என மாற்றி வாசித்துப் பார்க்கவும்)

*"முதலில் விவசாயிகளை இந்த நிலைக்கு விரட்டியவர்கள் உள் ஊர் கொடுங்கோலர்களும், தீய மேட்டுக்குடியினரும், அராஜக நிலப்பிரபுக்களுமே ஆவர். தலைமுறை தலைமுறையாக விவசாயிகளை கொடுமைப்படுத்தவும் அவர்களை தங்கள் காலடியில் போட்டு மிதிக்கவும் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினர். அதனால் தான் விவசாயிகள் பதிலுக்கு இவ்வளவு பலமாக திருப்பித் தாக்குகிறார்கள். எங்கெல்லாம் உள்ளூர் கொடுங்கோலர்களும், தீய மேட்டுக்குடியினரும், அராஜக நிலப்பிரபுக்களும் மிக மோசமான கொடுமைகள் புரிந்தார்களோ அங்கெல்லாம் வித்தியாசமின்றி கட்டு மீறிய கலவரங்களும், கடுமையான குழப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன".*

*"உள்ளூர் கொடுங்கோலர்கள் மற்றும் தீய மேட்டுக்குடியினர் வீடுகளுக்குள் மக்கள் பெரும் கூட்டமாய் நுழைந்து அவர்களுடைய பன்றிகளைக் கொன்றும், உணவுப்பொருட்களை சமைத்தும் தின்று தீர்க்கிறார்கள். அத்துடன் அவர்கள் உள்ளூர் கொடுங்கோலர்களது, தீய மேட்டுக்குடியினரது வீட்டு இளம்பெண்களின் தந்தத்தால் செதுக்கப்பட்ட கட்டில்களின் மேல் விரிக்கப்பட்டுள்ள பஞ்சனைகளில தீய மேட்டுக்குடியினரது வீட்டு*



படிப்பகம்

www.padippakam.com

*இளம்பெண்களின் தந்தத்தால் செதுக்கப்பட்ட கட்டில்களின் மேல் விரிக்கப்பட்டுள்ள பஞ்சனைகளில் படுத்துப்புரள்கிறார்கள், அவர்களுடைய மூடு பல்லக்குகளை உடைத்து நொருக்குகிறார்கள்".*

இங்கு நமது சூழலில் தோழர் மா.ஓ கூறும் அளவிற்கு நாம் (தலித்துகள் ) போய்விடவில்லை.அது வருத்தத்துக்குரியதும்,ஏன் என்ற ஆய்வுக்குரியதுமாகும். நீங்கள் நுழையக்கூடாது என்று சொல்லப்பட்ட பொது இடங்களுக்குள் நுழையவும். தொடக்கூடாது என்று சொல்லப்பட்ட பொது தேர்வடத்தை தொடவும் தான் முற்பட்டடுள்ளோமே தவிர இதுவரை எந்த ஆதிக்க சாதிவெறிபிடித்த கொடுமையாளனின் வீட்டிற்குள் புகவும் அவனது கட்டில் மெத்தைகளில் புரளவும் இல்லை. தலித்துகளது போராட்டம் இன்னும் தற்காப்பு நிலையில்தான் இருக்கிறது . அதற்குள்ளாகவே இங்குள்ள முற்போக்காளர்கள் பாய்ந்து வந்து நமக்கு முன்"சமூக அமைதி" கோசத்துடன் தடையாக நிற்கிறார்கள்.

மேலும் மாஓ சொல்வதைக் கேளுங்கள். "*சமூகத்தில் நடுத்தரப் பிரிவினரிலிருந்து கோமிங்டாங் வலது சாரியினர் வரை இந்த நடவடிக்கையை இது பயங்கரமானது என்று தொகுத்துச் சொல்லாதவர் ஒருவரும் இல்லை. இது அருமையானது இது எவ்விதத்திலும் பயங்கரமானது அல்ல. இது பயங்கரமானது என்பதைத் தவிர வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இது பயங்கரமானது என்பது தெள்வாகவே நிலப்பிரபுக்களின் நலன்களைப் பாதுகாக்க, விவசாயிகளின் எழுச்சிக்கு எதிராகப் போராடுவதற்கான கோட்பாடாகும். இது தெளிவாகவே பழைய நிலப்பிரபுத்துவ ஒழுங்கை நிலைநிறுத்தவும், புதிய சனநாயக ஒழுங்கு உருவாக்கப்படுவதை தவிர்க்கவும் முன் வைக்கப்படும் நிலப்பிரபுத்துவ வர்க்க கோட்பாடாகும். இது ஒரு எதிர்ப்புரட்சிகர கோட்பாடாகும். எந்த புரட்சிகரத் தோழரும் இந்த முட்டாள்தனத்தை எதிரொலிக்கக் கூடாது*'.

ஆனால் இங்கு நமது சூழலில் கம்யூனிஸ்ட் கட்சியில் இத்தகைய முட்டாள்தனத்தை எதிரொலிக்காதவர்கள் தான் குறைவு. கடந்த காலத்தில் தென் மாவட்டத்தில் தலித்துகள் தாக்கப்பட்டபோது அதற்கெதிராக தலித்துகள் தங்களைத் தற்காத்துக் கொள்ள போராடிய போது தலித்துகளுக்கு ஆதரவாக நின்று ஆதிக்க சாதிகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் எத்தனைப்பேர் மாறாக "சமூக அமைதி கெடுகிறதே" என்று தலித்துகளை அமைதி காக்க சொன்னவர்கள் தானே அதிகம்.

இன்னும் சொல்கிறார் தோழர் மா.ஓ "*விவசாயிகள் எல்லாஏகாதிபத்திய வாதிகளையும், யுத்த பிரபுக்களையும், ஊழல் அதிகாரிகளையும், உள்ளூர் கொடுங்கோலர்களையும், தீய மேட்டுக் குடியினரையும் சவக்குழிக்குள் குப்பை கூழங்களைப் போல் தூக்கியெறிந்து புதைத்து விடுவார்கள். ஒவ்வொரு புரட்சிகர கட்சியும், புரட்சிகரத் தோழனும் அவர்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டு, அவர்களுடைய தீர்ப்பின் படி ஏற்றுக் கொள்ளப்படுவர் அல்லது தூக்கி எறியப்படுவர்*".

நன்கு கவனியுங்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சீனப் புரட்சியின் தலைவர் மாஓ அருவமாக பேசவில்லை. எதிரிகளை ஸ்தூலமாக பட்டியலிடுகிறார். எதிரிகளை ஒருவர் விடாமல் சுட்டிக்காட்டுவதுடன் அவர்கள் விவசாயிகளால் சவக்குழிக்குள் தள்ளப்படுவார்கள் என்று உறுதியுடன் கூறுகிறார். இங்கு என்னடா என்றால் "பார்ப்பனர் எதிரியல்ல பார்ப்பனியம்தான் எதிரி" என்று மோடி மஸ்தான் வேலை காட்டுகிறார்கள்.

புரட்சியாளர்களைப் பார்த்து மாஓ சொல்கிறார் "*இங்கு மூன்று வழிகள் தான் உள்ளன விவசாயிகளுக்கு முன் சென்று தலைமை தாங்கி வழிநடத்திச் செல்வதா? தலையைச் சொரிந்து கொண்டும், விமர்சனம் செய்து கொண்டும் தயங்கியபடி அவர்கள் பின் செல்வதா? அல்லது அவர்களை வழிமறித்து எதிர்ப்பதா? ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுக்க ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் நிகழ்ச்சிகள் சீக்கிரம் முடிவு செய்யும்படி உங்களைக் கட்டாயப்படுத்தும்*' தோழர் மாஓ-வின் இந்த மேற்கோள் தலித் பிரச்சினையின் மீது இந்திய கம்யூனிஸ்ட்களின் வழி என்பதற்கும் பொருந்தும்.

இங்கு போலி கம்யூனிஸ்ட்கள் மூன்றாவது வழியை அதாவது வழிமறித்து எதிர்க்கும் வழியை சுதந்திரமாக தேர்வு செய்துள்ளார்கள் ஒரு வேறுப்பாடு "சமூக அமைதி-நல்லிணக்கம்" என்ற பதாகையுடன் தடுத்து நிற்கிறார்கள். இன்னும் சிலர் வேறு வழியின்றி தலையைச் சொரிந்து கொண்டும், விமர்சனம் செய்து கொண்டும் தயங்கியபடி நம்பின்னே வந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நமக்கொரு கேள்வி எழுகிறது தோழர் மா-சே-துங் கூறிய முதல் வழியை கைக்கொள்ளும் அந்த புரட்சிகர கம்யூனிஸ்ட்கள் எங்கே?

10 ஆம் பக்கத் தொடர்ச்சி....

பாமரத்தனமான உத்தி. இந்த இரண்டுக்கும் இடையில் மயங்கிக் கிடக்க இன்றைய மேல்தட்டு, நடுத்தட்டு, அடித்தட்டு, அத்தனைத் தட்டுக்களும் ஆசைப்படும் அவஸ்த்தையை சரியாகப் புரிந்து கொண்டு வெற்றி பெற்று இருப்பவர்களில் பாலகுமாரன் முக்கியமானவர். அப்படிப்பட்ட தெளிவின்மையை தெளிவாக புரிந்து கொண்டு தெளிவில்லாமல் இருப்பது போல் எழுதுவது தெளிவானவர்களையும் தெளிவற்றவர்களாக செய்யும் தெளிவான முயற்சி.

புத்தி உள்ளவன் பிழைத்துக்கொள்வான். இன்ஷா அல்லாஹ்!

— விஜி ஜெயச்சந்திரன்.

கவர்னர் பெத்தா
சிறுகதைகள் தொகுப்பு
ஆசிரியர்: மீரான் மைதீன்
பக்கம் 76. விலை ரூ.25/-
வெளியீடு: திணை வெளியீட்டகம்,
களஞ்சியம் விற்பனையகம்,
பழைய பஸ் நிலையம், தக்கலை -629175

www.padippakam.com

# எதிர்வினை

புதிய தடம் தோழர்களுக்கு,

வணக்கம் அக். இதழ்8 கிடைத்தது. சில விசயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ளவே இந்த கடிதம் மு. மல்லன் அவர்கள் ஜெயலலிதாவை இப்படித்தான் விமர்சிக்கவேண்டுமா? அரசியலில் பொதுவாழ்வில் "ஜெ" போன்றே மோசமான நபர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை எந்த முறையில் விமர்சிக்கிறோமோ, அதே முறையிலேதானே "ஜெ" வையும் விமர்சிக்க வேண்டும். அதைவிட்டு பெண் என்னும் உடம்பாக பார்ப்பது விமர்சிப்பது ஆணையும், பெண்ணையும் சமமெனக் கருதும் மார்க்சியப் பார்வையா? அதுவும் அன்புச்சகோதரி என்று வேறு அழைத்தா அதைக் கேட்க வேண்டும் சும்மாவா சமூக மாற்றத்தை விரும்புகிறவர்களின் ஒழுக்கம் பற்றி தரக்குறைவாக பேசுகிறவர்களுக்கு நல்ல அவல் கிடைத்த மாதிரி, ஆதிக்க சாதியினர் நம்மவர்கள் உயர்பதவியில் இருந்தோ அரசியலில் ஈடுபட்டோ ஏதாவது தவறு செய்தவுடன் "அவன் சாதிபுத்தி போகாது" என்று அந்தக் குறிப்பிட்ட நபரோடு சேர்த்து ஓட்டுமொத்த சாதியினரையும் பிறப்பினடிப்படையில் இழிவுபடுத்துவார்கள்.

இப்படி படிப்பு திறமை எல்லாவற்றையும் ஒதுக்கி பிறப்பால் ஒரு ஆணை இழிவுபடுத்துவது என்பதும் , பெண்ணை உடம்பால் இழிவுபடுத்துவது என்பதும் அடிப்படையில் சனாதன இந்துப்பார்வைதான். மார்க்சியப் பார்வை அல்ல.

இதேபோல்தான், கடைசிப்பக்க (அட்டை) தய். கந்தசாமிஅவர்களின் கவிதையும் அந்தக் கவிதையை அன்றாடம்நிகழும் சாதிய அவலங்களை பற்றி அறிந்தும் அறியாததுபோல் கண்ட இசங்களையும் பேசித்திரியும் அறிவுஜிவிகளின் மீதான கோபமாகத்தான் நான் புரிந்து கொண்டுள்ளேன். இந்த கோபம் நியாயமானதுதான். ஆனால் அந்தக் கோபத்தை வெளிக்காட்டுவது எப்படி? பாலுறவு விசயத்தை எடுத்துக் கொண்டும் பெண்ணின் உடலை வர்ணிப்பதன் மூலமும்தான் வெளிக்காட்ட வேண்டுமா? அல்லது முடியுமா? என்பதேகேள்வி. இதே ரீதியில் தய். கந்தசாமி அவர்களின் நிலையில் இருக்கும் ஒரு பெண் தன்கோபத்தை எப்படிக்காட்டுவதாம்?.

தான் எழுதும் விசயம் பெண்களின் உணர்வைப் புண்படுத்த வாய்ப்பிருக்கிறது. என்ற குற்ற உணர்வோ, தயக்க உணர்வோ சிறிதுமின்றி, கொஞ்சங்கூட நாகரீகமோ, கூச்சமோயின்றி அராஜகமாக எழுதுவது என்பதும் கூட, கண்ட இசங்களையும் விமர்சன வெறியோடு பேசித் திரியும் தய்.கந்தசாமி அவர்கள் வெறுக்கும் - அந்த அறிவு ஜீவிகளுக்கேயுரிய, அகம்பாவ அணுகுமுறைதான் மார்க்சிய அனுகுமுறை அல்ல.மார்க்சிய அணுகுமுறை அல்ல.

இனி தய்.கந்தசாமி அவர்கள் எடுத்துக்கொண்ட விசயத்திற்கு வருவோம். இயற்கையான பல விசயங்களை ஆதிக்கத்திலுள்ளவர்கள், தங்கள் நலனை காத்துக் கொள்வதற்கான கருவியாக மாற்றி விட்டனர். அதில் முக்கியமான ஒன்று பாலுறவு. அதில் இயற்கை ஆணையும், பெண்ணையும் சமமாகவே படைத்துள்ளது. இயற்கையின் விதியில் இதுஒரு நட்பு முரண்பாடு. இந்த முரண் இல்லாவிடில் மனித குலம் அழிந்து விடும். இந்த நட்பு முரனை எதிரியிடம் வஞ்சம் தீர்க்கும் ஒரு நிகழ்வாய் இவர்கள் கட்டியமைத்து விட்டார்கள். இதை ஆணின் வர்க்க கோபத்தை, சாதிய எதிர்ப்பை திசை திருப்பும் ஒரு நல்ல ஆயுதமாகவே பயன்படுத்துகிறது ஆளும் வர்க்கமும் சாதியும்.

இந்த திசை திருப்பலுக்கு நம் கவிஞரும் பலியாகி இருக்கிறார். அதனால் தான், மறைக்கப்பட்ட அந்த உண்மையைச் சொல்வதன் மூலம் தன் அறிவு ஜீவி நண்பனை இழிவு படுத்துவதாய் நினைக்கிறார். ஆனால், உண்மையில் இங்கு இழிவுபடுத்தப்படுவது பெண்கள்தான். ஆதிக்க சாதி "அறிவு ஜீவிகள்" அல்ல. அதோடு இங்கு அந்த மறைக்கப்பட்ட உண்மையை சொல்லி இழிவுபடுத்தும் கவிஞருக்கு, தானும் அதே போல் இழிவுபடுத்தப்பட்டு விடுவோமோ என்ற அச்சமும் அதனால் நம் சாதிப் பெண்களை சற்றே அடக்க ஒடுக்கமாக வளர்த்து "எங்கள் சாதிப் பெண்கள் சாதியை மீறும் தவறைச் செய்யாத குல விளக்குகள்" என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் விசயமும் அடங்கியிருக்கிறது. இது, அடிப்படையில் சாதியைக் காப்பாற்றும், சாதியச் சிந்தனையின் (தன்னையறியா) பாதிப்பிலிருக்கும் சாதி எதிர்ப்புக் குரல். சாதிய சமூகத்தின் மீதான கோபத்தை, இது போன்ற மோசமான விசயத்தை எடுத்துக் கொண்டு, மோசமான முறையில் எழுதக் காரணம் பெண் குறித்த சாதி குறித்த பார்வையில் உள்ள பிற்போக்கு அம்சந்தான்.

சாதியக் கொடுமையை (தான் நேரடியாய் உணர்வதை) அணுகும் அதே கோப உணர்வோடு, பெண்ணடிமைத்தனத்தை அனுக முடியாதுதான். நாம் வாழும் சமூகத்தின் சிந்தனையின் பாதிப்புதான். நாமே இப்படி என்றால் மார்க்சியம் சாதி ஒழிப்பு என்ற எந்தப் பதமும் தெரியாத, ஆனால் தான் தினம் சந்திக்கும் சாதிய இழிவுகளிலிருந்து வெகுண்டு, இச்சமூகத்தின் மீது முரட்டுத்தனமான கோபம் மட்டும் உள்ள நபரை எடுத்துக் கொள்வோம் அதோடு, ஏகாதிபத்திய சீரழிவு கலாச்சாரமும் ஏற்படுத்தியுள்ள, அந்த நபருடைய பெண் பற்றிய மதிப்பீட்டையும் கணக்கிலெடுத்துக் கொள்வோம். அந்த நபர் இந்தக்கவிதைகளை அல்லது இதே பொருளுள்ள கட்டுரை, சிறுகதைகளைப் படித்தால் என்ன ஆகும்? எதிரிகளின் விருப்பந்தான் நிறைவேறும்.

பெண்ணை சகதோழியாய் மதித்து சமூக மாற்றத்திற்கான வேலைகளில் அவளையும் இணைக்க வேண்டும் என்ற புரிதலோ அதை நோக்கிய நகர்தலோ நிகழ்ந்து விடக்கூடாது என்பது தான் நம் எதிரிகளின் விருப்பம். அதைத்தான் இந்தக்கவிதை நிறைவேற்றும்.

"பிற்படுத்தப்பட்டோர்தான் நடைமுறையில்


படிப்பகம்

www.padippakam.com

தீண்டாமையைக் கடைப்பிடிக்கிறார்கள், நாங்கள் மாறிட்டோம், நகரத்தில் சாதியெல்லாம் பார்ப்பதில்லை" என்று தீண்டாமைக்கு எதிர்ப்புக்கு குரல் கொடுப்பது போல் நடித்து பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பது போலத்தான் இந்த விசயத்தை அணுகுவார்கள்.

பொதுவாக சமூக மாற்றம் குறித்துப் பேசுபவர்கள், சிந்திப்பவர்கள், ஆணாதிக்க சொல், செயல் குறித்த தங்களது கருத்துக்களை தெளிவாகச் சொல்லாமல் பட்டும் படாமலும் ஒதுங்கிக்கொள்ளும் ஒரு போக்கு நிலவுகிறது. "இது பொம்பளைங்க சமாச்சாரம்" என்ற ரீதியில் புதியதடத்திலே கூட விசுவின் "அசிங்க அரங்கத்தில்" "பெண்ணுரிமை இயக்கங்கள் கவணிக்கவும்" என்று அடைப்புக் குறியில் போட்டிருப்பதும் கூட அதன் வெளிப்பாடுதான். இந்தப் பார்வையின் மிக மோசமான விளைவுதான் மேற்சொன்ன இரண்டு கவிதைகளும்.

ஆனால் நடைமுறையில் இந்தப் பிற்போக்கு சமூகத்தைக் கட்டிக் காக்க சாதிய அடக்குமுறை போல, சாதிய சிந்தனை போல, பெண்ணடிமைச் சிந்தனையும் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் உண்மை. அதை நன்கு அறிந்தால் தான் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக அழுது புலம்பும் சோ, விசு கோஷ்டிகளே பணிபுரியும் பெண்களுக்கு தனிச்சட்டம் என்றதும் அதற்கும் சேர்த்துக் கூட்டு ஒப்பாரி வைக்கிறது. ஆனால் நாம் தான் அப்படியில்லை.

விமர்சிப்பதற்கு இந்தக்கவிதைகள் மட்டும் தானா? வேறு இல்லையா என்று கேட்காதீர்கள். மாறுபட்ட கருத்தும், விமர்சனமும் வேறு படைப்புகள் மீது இல்லை என்பதுதான் உண்மை. எந்த சிறிய இடத்துக்குள்ளும் சிக்கிக்கொள்ளாமல், படைப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்துங்கள்.

புதியதடம் உருவாகும் போது பழையவற்றின் நல்ல அம்சங்களோடு, பிற்போக்கு அம்சங்களின் பாதிப்பும் இருக்கும் என்ற எச்சரிக்கை உணர்வோடு, நம்மை நாமே நாளும் கடுமையான விமர்சனப் பார்வையோடு அணுகுவதே மார்க்சிய அணுகுமுறை. அப்போது மட்டுமே உண்மையான, சரியான "புதியதடம்" அமையும். வாழ்த்துக்கள்.

இந்திரா,மதுரை.

## தோழர் இந்திராவுக்கு தய். கந்தசாமியின் பதில் மடல்.

அன்பிற்கினிய தோழர் இந்திராவுக்கு வணக்கம். தங்கள் கடிதம் கண்டு அதிர்ந்தேன். எனக்குள் இருக்கிற ஆண் மையச் சிந்தனை வெளிப்பாடானது பெண்களை உறுப்புகளின் தொகுப்பாக வெற்றுடலாக சித்தரிப்பது குறித்த கூச்சமோ குற்ற உணர்வோ இன்றி அருவருப்பாக இலக்கியப்படுத்துவதாகவும் இது மாற்றுப் பார்வையல்ல பிற்போக்குத்தனமான இந்து ஆண் மையப்பார்வையே, தவிரவும் சமூக மாற்றத்தின் சம பங்காளிகளான பெண்களை கொச்சைப்படுத்தி விலகி ஓட வைத்து தன்னை அறியாமல் சாதி, வர்க்க சமூகத்திற்கு சேவை செய்வதே இத்தகைய இலக்கிய முயற்சிகள் என தாங்கள் விமர்சிப்பதாகவே புரிந்து கொள்கிறேன். தங்கள் கருத்து குறித்த எனது நிலைபாடுகளை தோழமையுடன் முன் வைக்கிறேன்.

### பெண் – உடல்

பெண் எல்லா நேரங்களிலும் வெறும் உடம்பாக மட்டும் பார்க்கப் படுவதில்லை. சிதம்பரத்திலும் அந்தியூரிலும் வாச்சாத்தியிலும் பாலியல் வல்லுறவுக்கும், வன்முறைக்கும் ஆளான பெண்கள் யாரும் வெறும் உடம்பாக மட்டும் பார்க்கப்படவில்லை. அங்கே உடலை விடவும் சாதி காத்திரமான பாத்திரம் வகித்ததே உண்மை.

தாமிரபரணிக்கரையில் Dr.கிருஷ்ணசாமியை உடம்பாகப்பார்க்கிற போலீசாருக்கு (கிருஷ்ணசாமி சிவப்பா இருக்கான்னு வந்தீங்களாடீ) நாம் எந்த அடையாளத்தை தருவோம்.

### சமூக மாற்றம் – பெண்கள்.

தென் மாவட்டங்களில் ஆதிக்க சாதி ஆண்கள் அரிவாள் வைத்துக் கொண்டு கலவரம் செய்தால் பெண்கள் மிளகாய்ப் பொடி பயன்படுத்துவார்கள். வட மாவட்ட வன்னியர்கள் தூங்கும் போது கழுத்தறுத்தால் பெண்கள் தலித் இளைஞர்களை வசக்காட்டி விரை நச்சிக் கொல்கிறார்கள். எல்லாக்காலங்களிலும் ஆதிக்க வர்க்கம் தனக்கான ஞாயத்தை பேணுபவர்களாக பெண்களையே நம்பியுள்ளார்கள். கொண்டவனுக்கு (கணவனுக்கு) துரோகம் செய்தாலும் கொற்றவனுக்கு (அரசனுக்கு) துரோகம் செய்யாதே எனும் சேதி பெண்களாலேயே அடுத்தடுத்த தலைமுறை பெண்களுக்கு கையளிக்கப் படுகிறது.

குடிதாங்கியில் பறையர் பிணத்தை வன்னியர் தெரு வழியே மூன்று நாள் வன்னியர்கள் அடாவடிக்குப் பிறகு எடுத்துச் சென்ற Dr.ராமதாஸ் வாங்கிய வசவு பாவம் அவருக்குத்தான் தெரியும்.

எனில் தலித்துகளை நாகரீகப்படுத்தி ரட்சிக்க வரும் தோழர்கள் ஆதிக்க சாதி வெறித்தனத்துக்கெதிராக குடித்தெருவில் நின்று குரல் கொடுப்பது கம்மியே. மேலும் எங்கள் பெண்களை கட்டுப்பெட்டியாக வைக்க முயலும் முயற்சி எனது எழுத்தில் எங்கேயென்று தெரியவில்லை.

### முரண்பாடு பற்றி

வர்க்க ஒற்றுமை என்ற முன் நிபந்தனையில் ஆண் பெண் என்பது மட்டுமில்லை. தேவர்-பள்ளர் என்பதும் வன்னியர்-பறையர் என்பதும் கூட நட்பு முரண்பாடுதான். தத்துவ நட்பு முரண். எதார்த்தத்தில் பகை முரணாக வெளிப்படுவதை சித்தாந்தப்போராட்டத்தின் பொருட்டு பொறுத்துக் கொள்ள முடியாது. தயவு செய்து கட்டாயப்படுத்தாதீர்கள்.

### கவிதை குறித்து

எனது கவிதையில் தலித்துகளும் பெண்களும் ஒன்றே என்ற புரிதலில் தான் "எங்கள் விருப்பு வெறுப்புகளின் யோனிப் பொருத்தம்" என்ற முடிவு. ஆனால் நீங்கள் தான் தன்சாதிப்பெண் பிறசாதிப் பெண் என்ற பதங்களை

www.padippakam.com

பயன்படுத்துவதன் வழி பெண் என்ற தன்னிலை மறந்து சாதியாக பிரதிநிதித்துவம் செய்வதாகவே உணர்கிறேன்.

மேலும் இந்தியாவைப்போல் வர்க்கம் மதம் சாதி பால் வாழிடம் என முரண்பாடுகள் மிகுந்த சமூகத்தில் எப்படி ஆண் எனும் ஒற்றை அடையாளம் சாத்தியம் இல்லையோ அதுபோலவே பெண் என்ற ஒற்றை அடையாளமும் சாத்தியமில்லை. தவிரவும் பார்ப்பனிய மயமாதலால் ஆதிக்க சாதி ஆண்களைப் பார்க்கிலும் பெண்கள் கூடுதல் பங்காற்றுகிறார்கள். சமையலறை சயன அறை அடிமைகளான இவர்கள் சேரி அடிமைகளை பால் பேதமின்றியே ஒடுக்குகிறார்கள். அதேபோல் தலித் பெண்கள் அதே சமூக ஆண்களாலும் ஒடுக்கப்படுகிறார்கள். எனினும் சாதிய அடுக்கில் எந்தப் பெண்களை விடவும் பாலியல் உட்பட சகல தளங்களிலும் ஒப்பீட்டளவில் அதிக சுதந்திரம் உள்ளோராகவே இருக்கிறார்கள். அதற்குள் கூட தலித் பண்பாட்டில் உள்ள பார்ப்பனீய எதிர்ப்புக்கூறுகளே காரணம்.

ஆகவே அக்ரகாரம் ஊர் சேரி எனத் தனித்தனி வாழிடம் போலவே அங்குள்ள பிரச்சனைப்பாடுகளும் வேறு வேறானவை. நீங்கள் தான் பெண்களை வெற்றுடம்பாக (பெண் எனும் ஓர்மை) பார்ப்பதாக எண்ணுகிறேன். எனில், மாதவிலக்கால் பெண்கள் ஒன்றென்றால் நமது எதிரிகள் "சோ" பரிவாரம் இந்திரியத்தால் என்னை உறவாடும் அபாயம் நிகழலாம். தொடர்ந்து உரையாடலாம்.

*தோழமையுள்ள*
*தய். கந்தசாமி.*

ஸ்டாலின் ராஜாங்கத்தின் இரட்டைமலை சீனிவாசன் பற்றிய மறுக்கப்பட்ட வரலாறு என்னும் பிரதி பல்வேறு புதிய தகவல்களை அளிப்பதாக உள்ளது. நல்ல முயற்சி. இவ்வாறு மறுக்கப்பட்ட/மறைக்கப்பட்ட பலரது வரலாறுகளை-சிந்தனைகளை மறுவாசிப்பிற்கு உட்படுத்தல் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகின்றது. இவ்வாய்ப்புகள் அன்றைய கால சமூக அரசியல் கலாச்சார பின்புல தளங்களினூடாக அவற்றைக் கவனத்தில் கொண்டு செய்யப்படல் அவசியம் என்பேன். எம் வர்க்கமனோபாவங்களுக்கேற்ப தூக்கிப்பிடித்தலும்/தூக்கி அடித்தலும் ஆரோக்கியமற்ற மனநிலைச் செயற்பாடுகளாகிவிட்டன. அதில் நான் உட்பட எல்லோர் மீதும் எனக்கு விமர்சனங்கள் உண்டு. எம்.சி.ராஜா தொடர்பாகவும் நாம் விமர்சன ஆய்வொன்றை வெளிக் கொணர்தல் அவசியம். ஸ்டாலின் ராஜாங்கத்தின் இக் கட்டுரை நீதிக்கட்சியை ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் மீது அக்கறை கொண்ட கட்சியாக அனுமானம் கொள்ளவும் எம்.சி.ராஜாவை பிழையான நபராக இனம் காணத்தூண்டும் போக்கையும் தந்து விடுகின்றது. இது அபாயம் மிக்கது. சுயமரியாதையும் சமத்துவமும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கு என்பதைவிட பிராமணர் அல்லாத உயர் சமூகத்தினருக்கே என்பதையே அன்றைய நீதிக் கட்சியின் செயற்பாடுகளில் அமைந்திருந்ததை நாம் அவதானிக்க முடியும். இதனால் தான் எம்.சி.ராஜா நீதிக்கட்சியின் இப்போக்கையும் சாதித் தனத்தையும் கண்டித்து நீதிக்கட்சியில் இருந்து விலகி சட்டமன்றத்தில் இவர்களின் போலித் தனங்களை கண்டித்து பேசியுள்ளதை நாம் கவனம் கொள்ளுதல் அவசியம்.

மேலும் உங்கள் ஆசிரியர் தலையங்கம் எனக்கு மனவருத்தத்தையும் அதிர்ச்சியுமே தந்தது. ஒரு சஞ்சிகையின் சமூக உணர்வுகளையும் அதன் பயணத் தடத்தையும் அதன் பின்னாலான அரசியல் கருத்தியலையும் அச்சஞ்சிகைகளின் ஆசிரியர் தலையங்களினூடாக நாம் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். "பண்ணையார்த்தனத்தையும் தரகு முதலாளிய மயமாகவும் உருவாகியுள்ள..." எனும் பட்டியலில் காலக்குறியை நீங்கள் இட்டு நிரப்புவது உங்கள் அரசியல் பார்வையின் துர்பாக்கியநிலையை எமக்கு காட்டுகின்றது. காலக்குறியை 'ஹை டெக்' தனத்துடன் வெளிவருகின்றது என்பதினூடாக நீங்கள் வைத்திருக்கும் சிறு சஞ்சிகை பற்றிய வடிவமைப்பு தொடர்பான பத்தாம் பசலித்தனமான கருத்துநிலை எனக்கு சிரிப்பையே வரவழைக்கின்றது. இது இடதுசாரி என்றால் கசங்கிய அல்லது அழுக்கேறிய சட்டைதான் அணிய வேண்டும். தாடி, சோல்னாப்பை சகிதம் உலா வர வேண்டும் என்ற நமது இந்திய இடது சாரி நடிப்பு மனோபாவத்தின் வெளிப்பாட்டின் தன்மைகளே உங்களின் இந்த 'ஹைடெக்' புலம்பலாகும். காலக்குறியின் லேஅவுட் வடிவமைப்பு ஒன்றை மாத்திரம் கவனம் கொண்டு அதன் உள்ளடக்கத்தை மறுதலிக்கும் இப்போக்கு புதியதடத்திற்கு ஆரோக்கியமானதல்ல. நாளை இதே வடிவமைப்பு தேர்வு, இணைய தளம் என்று புதியதடம் தனது புதியதடத்தை கடக்க வேண்டிவரும். அப்போது நாம் என்ன சொல்வது? 'ஹைடெக்' என்பது அரசியல் பரிணாமம் கொண்ட சொல்லாடல் இது தன்னை உலகமயமாதலோடும் முதலாளிய ஏகபோகத்தோடும் தன்னை இணைத்துக்கொண்டது. இதைக் கொண்டு காலக்குறியை ஒப்பிடுதல் நாம் அரசியல் வறுமைக் கோட்டை இன்னும் தாண்ட முடியாத துர்பாக்கிய நிலையையே காட்டும்.

*தோழமையுடன்*
*அசோக், பிரான்ஸ்.*

- மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்பவும்.
- அஞ்சல் வழியில் இதழ் பெறுவோர் இதழ் கிடைத்ததை கடிதம் மூலம் உறுதி செய்யுங்கள்.
- இதழின் இட வசதி கருதி சில கடிதங்கள் சுருக்கவும் நீக்கவும் செய்யப்பட்டுள்ளன.
- தங்களது கருத்துக்கள்,விமர்சனங்கள், படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

# பாரதி
## ஆவணமும் புனைவும்

- ஸ்டாலின் ராஜாங்கம்.

"திரும்ப.... திரும்ப செல்லம்மா வழக்கமான பாணியில் நளினமாக மூக்கை உறிஞ்சுவதும், மகள் திருமணம் பற்றி பேசுவதும், சிவாசி கணேசனாய் பாரதி அழுவதும் மனைவியை அறைவதும் பாரதியை பேசச்சொல்லி கடற்கரையில் தேஜாப் படப்பாணியில் மக்கள் கூவுவதும் கைகளைத் தட்டிக் களிப்பதும் என்பதாய் இதுபற்றி நிறையப் பேச முடியும்..."

பாரதியைப் பற்றி திரைப்படம் எடுத்ததற்காய் அதன் இயக்குனருக்குப் பாராட்டுவிழா கூட்டங்கள் ஏறக்குறைய தமிழகத்தின் முக்கிய இடங்களிலெல்லாம் நடந்து கொண்டிருந்த சமகாலத்தில் நமக்கெட்டியவரையிற் பாரதி திரைப்படங்குறித்து விமர்சனரீதியிற் எதிர்மறையாக லதா ராமகிருஷ்ணன் மட்டும் ( தினமணிக்கதிர் 19-11-2000 ) இவ்வாறு பதிவு செய்கிறார். உண்மையில், நிலவும் இந்து பேரினவாத அரசியல் கட்டமைப்பு தேசீயத்தில், இந்(து)திய தேசிய அடையளமாய் உயர்த்தி பிடிக்கப்படும் பாரதியார் மீதும் நேர்மையான விமர்ச்சனம் என்பதும் கூட இந்திய தேசிய வாதத்திற்கு எதிரானதாக போய்விடுமோ என்ற ஒரு தலைபட்ச நோக்கில் இதுவரையிலும் இங்கே சரியான விமர்ச்சனம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. தமிழில் கலைவடிவங்களின் மீதான சரியான விமர்ச்சனம் என்பதும் கூட சரியான புரிதலோடு தமிழ் கலை வடிவங்கள் முகிழ வேண்டும் என்ற யோக்கியமான விருப்பமே.

"பாரதி" என்றப் பெயரில் ஞானராஜசேகரன் உருவாக்கிய புனைவு திரைப்படம் ஏற்கனவே தமிழில் அம்ஷன்குமாரால் இயக்கப்பட்ட "சுப்பிரமணிய பாரதியார்" என்ற ஆவணப்படத்தின் மீதான கவனத்தையும் குவித்துள்ளது. இரண்டையும் ஒப்பிட்டு பேசும் சூழல் உறுவாகியுள்ளது.

அடிப்படையில் "ஆவணம் புணைவு" என்ற இரண்டு வடிவங்களுமே பாரதியாரை புகழ்வது என்றத் தன்மையைத் தாண்டி பரிணாமங்கொள்ளாத விதத்தில் ஒற்றுமையுடையதாய் விளங்குகிறது. கட்டமைக்கப்பட்டுள்ள பாரதியாரைக் குறித்த ஆகிருதியான புணைவுகளுக்கு மேன்மேலும் முலாம் பூசும்விதமாய் ஒவ்வொறு காட்சியும் நம்முன் விரிகிறது.

குறிப்பாக ஆவணப்பட இயக்குனருக்கு ஏற்கனவே அமைந்திருந்த திரைப்பட அனுபவம் பாரதியாரின் காலங்குறித்த வரிசைகளை தொகுப்பதில் உதவியிருக்கிறது. பாரதியாரின் தந்தையார் நடத்தும் ஜென்னிங் மில் என்ற வணிக நிருவனம் நசிந்து போக ஆங்கில கம்பெனியாரின் ஏகபோக வணிக முற்றுரிமையே காரணமாவதால் இத்தகைய ஓர் உணர்வே பாரதியின் வெள்ளை எதிர்ப்பு வடிவங்களுக்கு பிண்ணனியாக அமைகிறது என்பதை ஆவணப்படம் பதிவு செய்ய ஆங்கிலேய கம்பெனியின் எதிராகவோ இணையாகவோ மாற்றாக அமையும் நிறுவனத்தை அமைக்கும் நிலை உயராதிக்க சாதீய கூட்டங்களினாலேயே முடிந்திருக்கிறது. பாரதியோடு பழகிய சந்தித்த என்று இவர்களிடம் எல்லாம் நேர்காணல் பதிவுசெய்யப்படுகிறது. ஞானக்கூத்தன் பேசும்போது பாரதி பிறவிக் கவிஞன் வேற்றுக்கிரகத்திலிருந்து வந்தவன் என்றும் குறிப்பிடுவது என்பது பாரதி மீது பொய்யாய் புனையப்படும் தெய்வீக புருஷன் என்ற மாயைகட்டி எழுப்பிவிடப்படுவது. தெளிவாகிறது. சுபாஷ் சந்திரபோஷ் காலத்தில் வாழ்ந்த இராஷ்பிகாரி கோஷை 1909ம் ஆண்டில் பாரதியின் சமக்காலத்தவராக காட்டுவது என்பது வரலாற்றை தாமே கட்டமைக்க ஆவண இயக்குனர் முயற்சிப்பதாக தெரிகிறது. உண்மையில் அவர் ப்ரோஷ் மேத்தா என்பவர்.



அம்ஷன்குமாரின் ஆவணப்படத்தில்

இந்நிலையில் ஆவணப்படம் நிற்க புணைவு திரைப்படமோ ஆளும்வர்க்கங்களின் தந்திர நாவுகளால் இயல்புக்கு மீறிய புனைவுகள் மற்றும் போலிகளாய் நிரப்பப்பட்டு காட்டப்படும் ஒருவரின் கலாரீதியான உருவாக்கம் எப்போதும் எக்காலத்தும் இல்லாத அளவிற்கு புனைவுகள் மற்றும் போலிகளாய் நிரப்பட்டு காட்டப்படும் ஒருவரின் கலாரீதியான உருவாக்கம் எப்போதும் எக்காலத்தும் இல்லாதயளவிற்கு பேசப்பட வேண்டிய் தேவைதான் என்ன ? அரசியல் இல்லாமல் எதுவும் இருக்க முடியாது.

இந்தியா ஒரே தேசம் ஒரே நாடு அகண்ட பாரதம் என்று இந்துத்துவா சக்திகளின் ஓலம் உண்மையான பன்முகத் தன்மையை இனக்குழுக்களின் பல்வேறுபட்ட கலாச்சார பண்பாட்டு மொழிக் கூறுகளை மறுத்து ஆங்காரமாய் எழும் வேளையிற் ஆர்யபூமி பாரத பூமி என்றெல்லாம் பேசிய பாரதி, பாரதியின் படைப்புகளும் மீட்டுருவாக்கம் செய்வது இந்த சூழலில் யாருக்கு சாதகமானது? ஒரு படைப்பிற்கு வரலாற்றுக்காலம் மிக முக்கியம் இத்தைகைய மோசமான வரலாற்றுச் சூழல் இந்தி(யா) தேசீய உணர்வு மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் திட்டமிட்டு உருவாக்குவது பார்ப்பணீய


படிப்பகம்

www.padippakam.com

சக்திகளின் ஆதிக்க கருத்தியல் தானே என்ற கேள்விகளை எழுப்பி நிற்கிறது.

பாரதி என்ற ஒரு படைப்பாளின் வாழ்வு திரைப்படமாக மாறுவது என்பது தமிழ் சூழலில் ஆதரிக்க வேண்டிய ஒன்று என்றாலும் ஞானராஜசேகரன் காட்டும் பாரதி குறித்த காட்சிகளும் படிமங்களும் ஆளும் இந்துத்துவா சக்திகளின் கருத்தியல் மொழியாய் மட்டுமே பொது கதையாடல்களாக கட்டப்படுவதை அம்பலப்படுத்துவது அவசியமாகிறது.

திரைப்படத்தின் தொடக்கம் முதலே உரையாடலாக தொடங்கும் பாரதியின் கீர்த்தி ஒவ்வென்றாய் நகர்ந்து செல்கிறது நம் கண்முன் பாரதி சிறுவனாக இருக்கும் போது அவர் காலத்தில் வழக்கில் இல்லாத தெருக்கூத்தை பாரதி கிண்டலடிப்பதாக தொடர்கிறது பாரதிக்கு சுதந்திர வேட்கை ஏற்படுவது வீறுடன் சித்தரிக்கப்படுகிறது குறிப்பாக இன்று இந்துத்துவாவின் வன்முறை அடையாளமாக கைக்கொள்ளப்படும் பிள்ளயாரை முதன்முதலில் இந்து - பாசிச மீட்புக்கு பயன்படுத்திய திலகருடனான பாரதி தொடர்பு காட்டப்படுகிறது. திலகரின் ஆங்கில எதிர்ப்பை பாரதி ஆதரித்த அதே வேளையிற் அவரது வைதீக-பிற்போக்குத்தனங்களை தீர்மானகரமாக எதிர்க்கவில்லை மாறாக திலகரை சாதகமான சக்தியாக எண்ணி உள்ளிருப்பு விமர்ச்சனம் மட்டுமே செய்துள்ளார் என்பது கவனிக்கத்தக்க ஒன்று.

மேலும் புனைவு திரைப்படத்தில் நுனுக்கமான காட்சி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அது பாரதியின் பழைய நண்பர் ஆர்யா (நிழல்கள் ரவி ) பசிமயக்கத்தோடு பாரதியின் வீட்டிற்கு வரும் போது பாரதி அவருக்கு உணவளிக்கிறார். அப்போது ஆர்யாவின் கழுத்தில் தொங்கும் சிலுவையைப் பார்த்துவிட்டு நீ மதம் மாறி விட்டாயா என்று பாரதி கேட்பதும், சிறையில் தனக்கு தொழுநோய் வந்தக்காலை தன்னுடன் சிறையிலிருந்த நண்பர்கள் கூட தன்னை தொட மறுத்தபோது ஒரு கிருத்துவ பாதிரியாரே தன்னை தொட்டு குணப்படுத்தியதாகவும் அக்காரணத்தினாலேயே தாம் கிறித்துவ மதத்திற்கு மாறிவிட்டதாக கூறும் ஆர்யாவிடம் பாரதி இதற்கெல்லாம் பராசக்தி என்ன செய்வாள் உள்ளிருந்துதான் போராட வேண்டும் என்று சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ள காட்சியமைப்பு என்பது மதமாற்றத்திற்கு எதிராய் சிறுபான்மை மதங்கள் மீது கொலைவெறி தாக்குதல் வரை சென்றுள்ள இந்துத்துவ சக்திகளின் பாசிச தாண்டவத்திற்கு ஒத்தூதுவது போன்றதே.

புனைவு திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியமைப்பும் ஆதிக்க கூறுகளை வெறிகொள்ள செய்யும் போக்கிலேயே அமைகிறது பாரதி எட்டையபுர அரசவையில் கவியாக இருப்பதற்கும், காசியிலிருந்து அழைத்து வரப்பட்டு மீண்டும் அரசைவையில் கவியாக நியமிக்கப்படுவதும் கூட பாரதியின் மரபு வழியிலான பார்ப்பனிய செல்வாக்கே என்பதை விமர்ச்சன ரீதியாய் பதிவு செய்யப்படவில்லை.

குறிப்பாக பாரதியை பேசும் எவரும் பாரதியை ஒரு கலகக்கரான் முற்போக்கு கவிஞன் என்றே பதிவு செய்கிறார்கள். அதற்கு இந்த புனைவு திரைப்படமும் விதிவிலக்கல்ல படத்தில் தொடரும் ஒவ்வொறு காட்சியிலும் முற்போக்கு வேடத்திற்கு வழு சேர்ப்பதாகவே நீளுகிறது. அதிலும் தலித்களுக்கான அவரது ஆதரவான குரல் என்பதை எல்லா காட்சிலும் மையமாக ஓட விட்டிருப்பதை காணமுடிகிறது. இந்த ரீதியில்தான் இந்த திரைப்படத்தை தலித் படம் என்று ஞானராஜசேகரன் சொன்னதுங்கூட ஆனால் பாரதியின் பார்வையில் நிஜத்தில் பல இடங்களில் சமூக ஏற்றத்தாழ்வை ஒப்புக்கொண்ட போக்கை காண முடிகிறது.

" நாலு ஜாதிதான் உண்டு..................இது எந்த தேசத்திலும் உண்டு இதை மாற்றவே முடியாது."

*"பிறவி ஒருவனுடைய குணத்தையும் தொழிலையும் நிர்ணயிக்கத்தான் செய்கிறது. ஆதலால் இப்போதுள்ள ஜாதிப்பிரிவை அதிகமாக மாற்றக்கூட வேண்டியதில்லை."*

-பாரதி

(சோசலிச கருத்தக்களும் பாரதியாரும்- கோ.கேசவன்)

ஆனால் சமூகத்தின் மனித உரிமையற்ற ஒரு மோசமான சாதீய படிநிலையை சமூகத்தில் சீரான உற்பத்தி ஏற்பட வேண்டும்மென்ற நோக்கில் ஏற்பட்டவையாக கருதிய பாரதியின் உண்மை முகம் இதுதான் இயற்கையானது சமூக மரபு என்ற பெயரில் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது செலுத்திய வன்முறையை நியாயப்படுத்திய அந்த பாரதியை அந்த சனாதன சமய வாதியை அடையாளங்காட்டாது. விமர்சனரீதில் அணுகாதது என்பது ஒரு ஏமாற்று அம்சமே இத்தைகைய போக்குகள் பாரதியிடம் இருந்ததை அடையாளம் காட்டாமல் பறையர் ஒருவருக்கு பூனூல் அணிவித்ததை மட்டும் பிராதானப்படுத்தியிருப்பது. தலித்-களை தங்களுக்கு சாதகமான ஒட்டு வங்கியாய் மாற்றி கொள்ள துடிக்கும் இந்துத்துவா சத்திகளுக்கே துணைசெய்யும் மனுதர்ம சாஸ்திரப்படி எந்த தாழ்த்தப்பட்டவனும் சுயமாய் சிந்திக்க முடியாது செயற்படமுடியாது அப்படியே அவன் சுய பிரக்ஞையாய் எழுந்தாலுங்கூட அவனது சுயபிரக்ஞைக்கு மனுதர்மவாதிகளே வழிகாட்டிகளாய் இருக்கமுடியும். என்று தலித்துகளின் சுய அடையாளங்களை நீர்த்துப் போகச்செய்யும் விதத்திலான பொய்யான கதையாடல்கள் இங்கே புனையப்பட்டுள்ளன. அதைப்போலவேதான் பாரதி பறையருக்கு பூனூல் அணிவித்ததும் நீ பிராமினன் நீ உயர்ந்தவன் என்று சொல்வதுமான காட்சியமைப்புகள் பூனூலை புனிதப்படுத்துவதும் தாழ்ந்தவருக்கு வாழ்வு என்பதுங்கூட பார்ப்பாணியத்தின் வழியாகவே இருக்க முடியும் என்ற தோற்றங்களை உயார்த்திப்பிடிப்பது எந்த நேர்மையிலும் தலித் பார்வையே இல்லை பாரதி ஒருவருக்கே பூனூல் அணிவித்தார் என்பதுதானே உண்மை ஆனால் படத்தில் நிறையப் பேருக்கு அணிவித்து கூட்டமாக ஆடிப்பாடுவதாக காட்டுவது தவறான வரலாறாய் அமைகிறது.

"மாடனை காடனை வேடனைப் போற்றி மயங்கும் மதியிலிகாள் - எதனூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்றோதி யறியீரோ?"



படிப்பகம்

www.padippakam.com

என்று பாடிய பாரதி மாடனையும் காடனையும் வணங்கும் உழைக்கும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் மதியீனத்தை சொல்லிவிட்டு எதையோ வணங்கச்சொல்கிறாரே எது அது?

மண்ணின் பூர்வீகக் குடிகளின் வழிவழியான மரபுகள் அழிக்கப்பட்டு அதன்மீது மேலாதிக்க ஒற்றைத்தன்மையான புனைவுகள் எழுப்பப்படும் இந்துத்துவா பெருந்தெய்வங்களே என்பதை நிறுவும் பாரதியை எந்த விதத்திலும் தலித்களுக்கானவராக கொள்ள முடியாது. உண்மையில் ஒடுக்குகிற ஆதிக்க சக்திகளின் அடையாளமாக கொள்ளப்படுகிற ஒருவர் ஒரே நேரத்தில் [redacted] ஒடுக்கப்படுகிற சக்திகளும் உரியவர் என்று சொல்லப்படுவது ஏமாற்றுத்தனம்.

தலித் களுக்கான காட்சிரீதியான பிம்பங்களல்லாது அவரது காலனீய எதிர்ப்பு படத்தில் முக்கியமானதாக வைக்கப்படுகிறது. சட்டத்துக்கு உட்பட்ட செயல் வடிவமாக இயங்குகிற பாரதியின் விடுதலை போராட்ட நிலைகள் அனைத்தும் பதிவு செய்யப்படவில்லை அந்த வகையில் ருஷ்யப் புரட்சி பிஜி தீவு மக்கள் நிலை குறித்தெல்லாம் பேசிய பாரதி தம் நிகழ் காலத்தின் முக்கிய பதிவான ஜாலியன் வாலாபாக் படுகொலைக்காய் எழுதவேயில்லை. காலனீய அரசால் கைது செய்யப்பட்ட பாரதி கடலூர் சிறையில் அடைக்கப்படுகிறார். 26 நாட்களுக்கு பிறகு பிரிட்டன் அரசுக்கு எப்போதும் உண்மையாகவே இருப்பேன் என்று சென்னை மாகான ஆளுநர் பெட்லண்டுக்கு 10-12-1915-ல் எழுதிக் கொடுத்துவிட்டு விடுதலையாகிறார். அதன் பிறகு அவரிடம் குறிப்பிடும்படியான காலனீய எதிர்ப்புணர்வுயில்லை அதே நேரத்தில் பாரதியால் ஆதர்சமமாக அடிக்கடி பேசப்பட்ட தாகூர் வங்காளத்தில் ஆங்கிலேயர் தமக்களிக்க முன் வந்த விருதை ஜாலியன் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நிராகரித்தார் என்பது கவனிக்கத்தக்க ஒன்று மேலும் பாரதி ஆங்கிலேயரிடமிருந்து ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் சட்டத்துக்கு இணங்கிய முறைகளால் பெற விரும்புகிறது. என்று எழுதியிருக்கிறார்.
( சுதேச மித்ரன் 5-8-1918 )

இதையெல்லாம் மிக கவனமாக மறைத்துள்ள இந்த ஆவண-புணைவுப்படங்கள் ஒரு போதும் சரியான பதிவுகளேயில்லை மாறாக மறைக்கப்படுகிற இதுபோன்ற பதிவுகளானவை தமது பூசையறை உருவாக்கங்களுக்கு கேள்விகள் ஏதுமின்றி மண்டியிடச்செய்யும் அதிகாரவர்க்க பார்வையாகவே இருக்க முடியும்.

மேலும் ஒவ்வொரு காட்சியிலும் பாரதி மீதான தெய்வீகத்தன்மையை பாதிக்கச் செய்யாத வகையில் வடிவங்கள் கையாளப்பட்டுள்ளது. பாரதியின் போதைப் பழக்கம் என்பதை பேசப்படாமலேயே தவிர்த்துவிட்டு ஒரே ஒரு இடத்தில் மட்டும் எனக்கு இப்பழக்கம் வேறு ஒட்டிக்கொண்டது. என்ற ஒரே வசனத்தின் மூலம் பட்டும் படாமல் எந்தப் பழக்கம் என்பதை உணர்த்தாமல் ஏதோ காட்டினோம் என்ற போக்கில் சொல்லுவது நிஜத்தன்மையோடு ஒட்டாமலேயே செல்கிறது. நிகழ்கால வரலாற்றை தவறாக பதிவு செய்தாலும் சரியானவற்றை பதிவு செய்யாமற் விட்டாலும் உண்மையான வரலாறாக ஆகவே ஆகாது. மேலும் பாரதியின் காலகட்டத்தின் பிண்ணனியை காட்டுவதிலும் மொழி வழக்கை கையாண்டிருப்பதிலும் குழப்பம் தெரிகிறது. ( அதிலும் இயக்குனரான ஞானராஜசேகரன் பார்த்து வளர்த்த தெருக்கூத்தை, வழக்கில் இல்லாத தெருக்கூத்தை பாரதி சிறுவயதில் பார்ப்பதாக காட்டுவது ஆதாரமானது இல்லை.

பாரதி திரைப்படத்தில் கடையம் வாழ்வின் போதான ஷாயாஜி ஷின்டே யின் நடிப்பு மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. படத்தின் இன்னொரு. ஜீவன் இசையமைப்பாளர் இளையராஜா. குறிப்பாக கேளடா மானிட வாழ்வில்... என்ற பாடல் முழுவதும் ஆணின் குரலாகவே ஒலிக்க பெண்ணைக் குறித்த வரிகளை மட்டும் மிக கவனமாக பெண்ணின் குரலிலேயே பதிவு செய்திருப்பது மிகச் சிறப்பு.

வாழ்வின் மீது கொடூரங்களை திணிப்பதை எங்கிருந்து வந்தாலும் எந்த வடிவில் வந்தாலும் அதனைவிமர்சனரீதியாய் அணுகி சுயதரிசனம் கொள்வதே படைப்பாகும். இவ்வாறு மோசமான ஆதிக்க கருத்தியல் சார்ந்த பார்வை படைப்பாக வரும்போது சமூகம் முழுமைக்குமான நிலைப்பாடாக மாறிப்போகும். அந்த ரீதியில் இந்த பாரதி குறித்த படங்கள் எல்லாம் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன்முறையை கேள்விக்குட்படுத்தவே இல்லை. மாறாக அதிகார வர்க்கங்களின் குரலாய் வரும்போது அதை நீர்த்துப் போகச்செய்ய வேண்டிய தேவையிருக்கிறது.

இடதுசாரிய பார்வையில் வந்த வாட்டக்குடி இரணியன் இங்கே பேசப்படவே இல்லை. பாரதி, இரணியன் என்ற இரண்டு படங்களிலும் வேறுசில குறைபாடுகள் இருப்பினும் கூட ஏன் பாரதி, ஹேராம் போன்ற படங்கள் அதிகமாக பேசப்படுகின்றன? உண்மையில் இந்தப் படங்கள் இந்துத்துவா அதிகாரத்தின் ஆதிக்க குரளாக இருப்பதால் தான் பேசப்படுகிறது என்பது கவணத்தில் கொள்ளப்பட வேண்டும். ஞனராஜசேகரன் ஏற்கனவே இயக்கிய படங்கள் பெரிய அளவில் பேசப்படாமல் இவைமட்டும் பேசப்படுவது இந்த அடிப்படையில் தான். ஆகவே இங்கே கடந்த கால வரலாறு மற்றும் நிகழ்கால போக்குகள் முதவலியவற்றை சரியான புரிதலோடும் விமர்சனத்தோடும் ஆய்வு செய்து எழும் கலைகளே புதியதடத்தை அமைத்துக் கொடுக்க முடியும். ■

அடுத்த இதழில்

டாக்டர் அம்பேத்கரது சமகால தலித் போராளி சி.கே.மங்களேசுவரம் பற்றிய மறைக்கப்பட்ட வரலாறு வெளியிடப்பட உள்ளது

www.padippakam.com

## மடல்கள்

1. புதியதடம்-8 (2000) இதழ் படித்தேன். ஸ்டாலின் ராஜாங்கம் எழுதிய மறுக்கப்பட்ட வரலாறு இரட்டைமலை பற்றி அறிய உதவியது. அம்பேத்கர் போன்று இவரின் சிந்தனைகளும் உள்ளது என்பதும், இவர் வாழ்ந்த காலத்தில் கிடைத்த விசயங்கள் இன்னும் உள்ளது. அவற்றை முழுமையக வெளிகொணர வேண்டும். தொடர்ந்து நல்ல விசயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். புதியதடம் மக்கள் தடமாகும் என்பதில் ஐயப்பாடில்லை.

*செபக்கனி,மதுரை.*

2. வழக்கம் போலவே இடதுசாரிகளை கிழித்தபடி தங்களின் தனித்துவ முயற்சி தொடர்கிறது என்பதில் மகிழ்சி. மாயி - பற்றிய விமர்சனம் விசமத்தின் உச்சம். மக்கள் சினிமா - மாதிரி திரையரங்கு அவசியமான ஒன்று. ∴பயர் திரைப்படத்தையும் திரையிட்டு இருக்கலாம். லெஸ்பியன் பற்றிய தவறான பார்வையையும், தனது ஆணாதிக்க அடிமைத் தனத்தையும் படமாக்கிய தீபா மேத்தா பற்றியும் விவாதித்து இருக்கலாம். சரி போகட்டும். இதழின் புதிய வடிவம் பிடித்து இருக்கிறது.

*பாலபாரதி,மும்பை.*

3. புதியவடிவம், அமைப்பு நிறைவாய் இருக்கிறது. முன்னுரையில் உள்ளது போல் சமகால நிகழ்வுகளின் மீதான விமர்சனம் உள்ளது. அதன்போக்கு ஆளும் வர்க்கங்களின் ஒடுக்குமுறை வெறியோடும் சில தெளிவுகளாகவே இதழில் வெளிப்படுகிறது. மையமான வர்க்கப் போராட்டத்திலிருந்து இதன் கிளைகளை விளக்கும் வகையிலான ஆழ்ந்த கட்டுரைகள் வெளிவந்தால் நலம். மற்றபடி கவிதைகள் குறித்து: இலக்கு எதுவாயிருப்பினும் கலை குறைந்தபட்ச கலையாயிருப்பது அவசியமெனக் கருதுகிறேன். அவ்வகையில் தேர்வில் கவனம் வேண்டும்.

*தீபன் ஆற்காடு.*

4 ஒரோவழி தங்கள் முனைப்புகள் தெரிகின்றன. பாராட்டுகள். எனக்கொன்று விளங்கவில்லை. "புதியதடம்" இதழின் "புதியதடம்" தெரியவில்லை. மொழி, இனம், நிலம், குறித்த அதன் பணிகள் தெளிவாக இல்லை. நம் தமிழ் மக்களுக்கு எந்த வழியில் வழிகாட்ட இருக்கிறீர்கள்?. பக்கம் 21-ல் புதுவை பிரதீபா செயச்சந்திரன் எழுதியுள்ள தமிழ் வெட்கப்படக் கூடியதாக உள்ளது. இதிலுள்ள பார்ப்பனக்குறும்பு தங்களைப் போன்றவர்களுக்கு தெரியாமல் போவது வியத்தற்குறியது. ஓட்டைக்குடத்தில் நீர் ஊற்றுவது போன்ற, இதுபோன்ற செயல்கள் குமுகாயத்தில் ஒருமாற்றத்திற்கு உதவும் என்று என்னால் நம்ப முடியவில்லை. தமிழின அழிவுக்கே இவை உதவும்.

*இளஞ்சித்திரன்,சென்னை*

5. இந்த இதழ் கட்டமைப்பு ரீதியிலும் முன்னேறியிருப்பது என்பது மகிழ்ச்சியளிக்கிறது. சிற்றிதழ்களில் எவற்றுக்கும் இல்லாத வகையில் அரசியல் பார்வை புதியதடத்திற்கு பலம். 'காலச்சுவடு' போன்ற இதழ்களோடு ஒப்பிட்டு பேசுவது தேவையில்லை என்றே தோன்றுகிறது எனக்கு. புதியதடம் -8ல் "கலைஇரவு" என்பதை "களைஇரவு" என்றே எழுதலாம் நாம். அது களையப்பட வேண்டியதே. மாயி போன்ற படங்களுக்கு அல்லாமல், சில குறிப்பிட்ட வெகுஜன படங்களுக்கு மட்டும் விமர்சனம் எழுதலாமே. படைப்புகளுக்கு அதிலும் குறிப்பாக சிறுகதை பொன்றவற்றிற்கு கூடுதல் இடம் அளிக்கலாம். எல்லா கவிதைகளையும் வெளியிடுவது பற்றி யோசியுங்கள். கவிதைகள் சிலவற்றின் தேர்வில் கவனம் செலுத்தியிருக்கலாம் குறிப்பாக பக்கம்-9 ன் வடிவமைப்பில் மற்ற பக்கங்களோடு பொருந்திவருவதாய் இல்லை. புகைப்படங்களையோ, ஓவியங்களையோ அதன் வெளிப்பாட்டுத்தரத்தில், சிறிதும் குறைவில்லாமல் வெளியிட முயற்சி செய்யுங்கள். பிறகு இதழின் அனைத்துச் செய்திகளும் கோபத்தோடு தொடங்கி கிண்டல் தொனியில் முடிவதைப் பார்க்க முடிகிறது. நூல் விமர்சனங்கள் வெளியிடுவது சிறப்பு.

*ஸ்டாலின் ராஜாங்கம் மதுரை*

6. இதழ் 8 மிகவும் நன்றாக வந்துள்ளது. இம்மானுவேலின் கவிதை குட்டி சாம்ராஜ்யங்களைச் சாடியுள்ளது குறிப்படத்தக்கது. மாறிவரும் அரசியல் சூழலில் தலித் அரசியல் மீள்பார்வை செய்ய வேண்டியது இருக்கிறது. டாடா சுமோ மட்டுமே குறிக்கோளாக இருந்துவரும் பட்சத்தில் குட்டி சாம்ராஜ்யங்கள், அதன் போக்கு களையப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அதன் பார்வை அதையும் தாண்டி இருக்கும் பட்சத்தில் வந்ததை வரவில் வைப்போம் என்ற ரீதியில்கூட இருக்கலாம். எல்லாவற்றையும் பொருத்திருந்து பார்க்கனும். விசாரணைக் கமிசன்களை சந்தித்து பழகிப்போன நம் மனங்களுக்கு புதியஒளி பாய்ச்ச வேண்டியிருக்கிறது- அரசியல் தளத்தில். பார்வையாளனின் கலைஇரவு, குமரன்தாசுவின் இந்துத்வ தந்திரங்கள், நசீமின் சங்கம், ராஜாவின் வெற்றிக் கொடி கட்டு, கோபாலகிருசுணனின் அரட்டை அசிங்கம் - அனைத்தும் ஒரே தொனியில் அமைந்திருப்பது போல் தெரிகிறது. எல்லாம் எழுதியது வேறு வேறு நபர்கள் தானா அல்லது வேறு வேறு பெயர்களைத் தாங்கிய ஒரே நபரா? இவை அனைத்துமே தர்க்கரீதியாக நன்றாக வந்துள்ளன. கொஞ்சம் ஆழம் தேவை. போகிற போக்கில் சொல்லப்படும் வார்த்தைகளைப் போல இருத்தல், வெறும் கிண்டல் என்னும் தளத்தைவிட்டு வெளியே வராமல் போய்விடவும் வாய்ப்புண்டு. மறுக்கப்பட்ட வரலாறு நன்றாக வந்துள்ளது. உங்களின் முந்தைய கவிதைகளை விடவும் க-க-க. கவிதை நன்றாக வந்துள்ளது. பாராட்டுக்கள். கந்தசாமி கவிதையும் நன்று.

*பிரதீபா ஜெயச்சந்திரன் புதுவை*

7. இதழின் வடிவமும், உள்ளடக்கமும் எங்களை மிகவும் கவர்ந்தது. புதியதடத்தின் கருத்துக்கள் பாட்டாளி வர்க்க உணர்வும், தலித்தின் கோபமும், தமிழ்பற்றும் இதழ் முழுவதும் பார்க்க முடிந்தது. இருப்பினும் அவற்றை ஊன்றி படிக்காவிட்டால் வாசகன் அவ்வுணர்வைப் பெறுவது கடினம்தான். மேலும் இதழின் பெரும்பகுதி கவிதைகளே ஆக்கிரமித்துக் கொண்டதால் இதழின் உள்ளடக்க பலம் குறைந்து விட்டது. இன்றைய தமிழ்ச் சூழலில், தமிழ்தேசியம், தலித்தியம், பெண்ணியம், சுற்றுப்புறச்சூழல், நவீனத்துவம், பின் நவீனத்துவம் என பல்வேறு போக்குகள் கொண்டுள்ள நிலையில் தமிழ் சமூக பிரச்சினைகளை அணுகுகிறது. எனினும் உலகமயமாக்கல், நமது தமிழ் இனத்தின் அடையாளத்தையும், சமூக அரசியல் பொருளாதாரத்தையும்


படிப்பகம்

www.padippakam.com

நமது பண்பாட்டையும் அழிக்கும் என்பதற்கு இன்றைய வெகுசன மக்கள் ஊடகங்களே சாட்சியாய் நிற்கிறது. நமது தமிழ் இனத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, நமது தொன்மையான பாரம்பரியமும், பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே நமது விருப்பமாக இருக்கிறது. அதேசமயம், நமது சமூகத்தில் இருக்கும் இந்துத்துவம், அதன் கொடிய அரக்கனான சாதியம் இவைகள் வேர்கொண்டிருக்கிறது. பழைமைவாத பண்பாட்டை களைய வேண்டும். உலகமயமாக்களின் பால் ஏற்பட்ட ஏகாதிபத்திய சீரழிவு கலாச்சாரத்தை தூக்கியெறிய வேண்டும். இப்பெரும்பணியை செய்வதற்கு வலுவான ஆயுதம் மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையே. ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வும், போராட்ட குணமும் மார்க்சியத்திற்கு மட்டுமே உண்டு என்பதில் எங்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. எனவே தங்களின் புதியதடத்தின் சிந்தனைகள் மார்க்சிய பார்வையில் தமிழ்தேசியத்தின் பிரச்சினைகளை ஆய்வு செய்து வாசகனுக்கு, வழங்கினால் இச்சமூகத்திற்கு பெரும் பயனாக இருக்கும்.

*இ.சி.கரிகாலன்,ஈரோடு.*

8. இதழ் புதிய பொலிவோடு இருந்தது. இன்னும் மெருகோடு தொடரட்டும். சிற்றிதழ் Hitech இதழ்களோடு போட்டி போடுவதற்கில்லையென்றாலும், நீங்களே குறிப்பிட்டிருக்கும் வாசிப்பின் அசௌகரியம் கருதி இதழ் கட்டமைப்பில் கவனம் செலுத்தியிருப்பது அவசியமே. இதழின் நோக்கம் உங்கள் சிந்தனையின் சீற்றம், உங்கள் எழுத்துக்களில் இழையோடும் தார்மீக கோபம் எதிலும் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஏனெனில் நமக்கிடையிலான தோழமை உறவில் மார்க்சியம் அடிநாதமாக ஒலிக்கிறது என்பதால். கே.செல்வம் காரைக்குடி வாசகக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல், நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளுக்கும் ஒரு இலக்கிய இதழில் இடம் இருக்க வேண்டிய அவசியமில்லை. அது இதழின் பிரதான நோக்கத்தை சீர்குலைப்பதாக முடியும். அவர் குறிப்பிட்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட இனமக்களுக்கான இதழாக புதிய தடம் இருந்தாலும் தவறொன்றுமில்லை. ஒடுக்கப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட எழுத்துக்களுக்கு தான் இன்று களம் இல்லை. புதியதடம் அதற்கான களமாக செயல்படுவது - பட்டால் நான் நன்றியுடையவனாக இருப்பேன். இமானுவேல், தய்.கந்தசாமி, ரா.ராஜா ஆகியோரின் கவிதைகள் நன்றாக இருந்தன. அனைத்திலும் உள்ளீடான தார்மீக கோபம் பொதுவானதாகயிருந்தது. சமூகத்தை அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியாகப் புரிந்து கொண்ட அறிவுஜீவி அல்ல சேரன், அவருக்குத் தெரிந்ததைத் தான் எடுத்திருக்கிறார். உழைக்கச் சொல்லும் அறிவுரை-தன்மானம்-ரசினி காலை நக்குவது சம்பந்தமில்லாமல் முடிச்சுப்போடுவதாக இருக்கிறது. வெற்றிக்கொடிகட்டு திரைப்படத்தின் தயாரிப்பாளர் ரஜினியின் எடுபிடி, பினாமி, ரசிகர் சிவசக்தி பாண்டியன் என்பதை விமர்சகர் புரியட்டும். பாரதி கண்ணம்மா-விலிருந்து சமூக அக்கறையுள்ள கலைஞன் என்ற முத்திரையைப் பேணிப் பாதுகாக்க சேரன் முயல்கிறார். மதுரையில் சேரனுக்கு பாராட்டுவிழாவின் போது, "எனது உன்மையான வாரிசு" என்று பாரதிராஜா அரற்றினார். இதே சமூக அக்கறை முகமூடி பாரதிராஜாவிற்கு நீண்ட நாட்கள் இருந்தது. சொந்த சாதி மனிதர்களுக்கு நாயக பிம்பம் உருவாக்கத் தொடங்கிய பிறகு அது அவிழ்ந்து போனது. வேதம் புதிது - பாலுத்தேவர், முதல் மரியாதை - சிவாஜித்தேவர், பசும்பொன்-முத்துராமலிங்கத்தேவர், தாஜ்மாஹால்-உசிலம்பட்டி விடலைத்தேவர், இதுபோல் முகமூடிகள் கழன்றுவிடும் காலம் சேரனுக்கும் வரும். த.மு.எ.ச வின் கலை(ஞர்)ப் படையும் ஒரு வகையில் தேவர் (மனநிலை மிகுந்தவர்களின்) அதிரடிப்படைதான். அவர்களின் ஆட்டத்தோடு ஒப்பிடுகையில் பாவம் சேரன், விட்டுப்பிடிப்போம். K.S.ரவிக்குமார் என்ற பொறுக்கியிடம் வேலை பார்த்தவர் சேரன் என்பதை கருணையோடு அணுகுவோம்.

*இளம்பரிதி, இராமநாதபுரம்.*

9. கலைஇரவு-2000, இந்துத்துவ தந்திரங்கள், சங்கம், சனாதனிகளை நோக்கி, எல்லோரும் இங்கே கவனியுங்கள், விந்தை, அரசியல்வாதிகள், விசுவின் அரட்டை அசிங்கம், இரட்டைமலை சீனிவாசன், யுகம் ஆகிய படைப்புகள் மிகவும் பயன்பெற்றவை, பலமுறைகள் படிக்கத்தூண்டியவை! அட்டைப்படம் என்ன சொல்கிறது விளங்கவேயில்லை. 20-ம் பக்க கவிதை என்ன சொல்கிறது ஒன்றுமே விளங்கவில்லை. ஒரு பக்கத்தை வீணடித்துவிட்டீர்கள். கடைசி பக்க கவிதையும் விளங்காத கவிதைதான். கவிதை என்றால் "துரோகத்தின் சம்பளம் டாடா சுமோ" தான் கவிதை. மொத்ததில் கூடுதல் செய்திகள் நன்றாகவே அமைந்துள்ளது. நம் சமூகத்திற்கு நல்லதையே தரவேண்டும் என்ற உங்கள் எண்ணத்தை வரவேற்றுப் பாராட்டுகிறேன். நம்நாட்டில் மக்களுக்கு நல்லது செய்யப்புறப்பட்ட பொதுவுடமைக்காரர்கள் அரசியல் அயோக்கியர்களிடம் அடிமையாகப் போய்விட்டார்கள். இந்தநிலையில் புதியதடம் போன்றவைகளே மக்களுக்கு பயன்மிக்க நல்லசெய்திகளைக்கூறி அவர்கள் மேன்மை அடையப் பாடுபட வேண்டும்.

*நாத்திக நந்தனார், சென்னை*

10. இந்திய நிலப்பரப்பில் இயங்கிக்கொண்டிருக்கும் பொதுவுடமைவாதிகளையும், அந்த இயக்கங்களின் போக்கையும் விமர்சனம் செய்கிறீர்கள். ஏனைய முதலாளித்துவ அரசியல் கட்சிகளைப்போல் மக்களைப் பயன்படுத்துவதாகக் கூறுகிறீர்கள். இது எப்படி நியாயமாகும்? இந்தியச் சூழ்நிலையில் மக்களிடம் நேரடியாக சித்தாந்தத்தை கற்பிக்க முடியுமா? கல்வி கற்காத மக்கள் அதிகமாக வாழும் தேசமல்லவா இது. அவர்களுடனேயே கலந்து, அவர்களைப்போலவே வாழ்ந்து படிப்படியாக கற்பித்துதானே, அவர்களிடம் புரட்சிக்கான வித்தை விதைக்க முடியும். இது களப்பணியில் தானே சாத்தியம். இது சம்பந்தமாக தங்களது கருத்தை எதிர்பார்க்கிறேன். கொடியன்குள கொடூரத்தை நாலைந்து வரிகளில் சொல்லி நிகழ்ந்துவிட்ட குரூரத்தை நம்மனதில் நிலைத்திருக்கச் செய்கிறார் மு.மல்லன். சனாதனிகளால் மறைக்கப்பட்ட ரெட்டைமலை சீனிவாசன் பற்றிய வரலாற்று ஆய்வு ஆவணமாக்கப்பட வேண்டிய ஒன்று. பலவிதமான சேதிகள், தொகுத்தளித்த ஸ்டாலின் ராஜாங்கத்திற்கு நன்றி.

*செ. சல்மான்,பாம்பன்.*

www.padippakam.com

# கமிசன்கள்

திசையின் கரைகளில்
மோதிய ஓலங்கள் இன்னும் மறைந்து விடவில்லை.

உச்சந் தலையில் குத்திய
லத்திக் காயங்கள்
இன்னும்
ஆறி விடவில்லை.

தூண்களை இழந்த
குடும்ப வாசல்களில்
இருள் மூட்டங்கள்
இன்னும் கலைந்துவிடவில்லை

தாமிரபரணி வீசிய
அழுகை வாசம்
இன்னும் அழிந்துவிடவில்லை

ரத்தினமேரி, பூபாலராசன்
கெய்சர்
இன்னும் பலரின்
முகவரிகள்
நம் பார்வையிலிருந்து
பறிபோகவில்லை.
பதினேழு உயிர்களால்
பசி தீர்த்த
தாமிரபரணிக்கு
இன்னும் செரிமானம்
ஆகவில்லை....

மோகன் கமிசன்
முனகுகிறது
நெருக்கடிக்கு பயந்து
அவர்கள்
ஆற்றில் கரைந்தனராம்....

அறிந்திருக்கவில்லையாம்
ஒன்றும்
உயரதிகாரிகள்...

எடுபிடிச் 'சிப்பந்திகளுக்கு'
மட்டுமே
கெடுபிடிகள்.

கோயாபல்சுக் கூட்டங்கள்
கிரீடம் சூட்டுகின்றன
பொய்மைக்கு
உண்மையை மிதித்துக் கொண்டு.

மக்களின் நியாயங்களை
காயடிப்பதற்கென்றே
நீதிபதிகளின் கைகளில்
விசாரணைக் கட்டைகள்.



கொடியங்குளத்தில்
நாவறண்ட கோமதி கமிசன்..
இப்போது தாமிரபரணியில்
தத்தளிக்கும் மோகன் கமிசன்...

கமிசன்கள்
கால வரம்பற்றவையே
கெய்சர்களும்
ரத்தினமேரிகளும்
பூபாலராசன்களும்
புதிதாய்
முளைத்தெழுந்து
வரும் வரை...

அபிமானி

படிப்பகம்